கலைஞர் 100
1924 - 2023

தமிழரசு

Tamilarasu

(Monthly)

அக்டோபர் 2023 (October 2023)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 54
இதழ் (Issue) : 4

தலைமை

திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

நாள் : 02.10.2023

இடம் : அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கம், சென்னை

ஒளிரும் தமிழ்நாடு

மிளிரும் தமிழர்கள்

அக்டோபர் 01: தேசியத் தன்னார்வ இரத்ததான நாள்

“இரத்ததானம் மகிழ்வுடன் செய்திடுவோம் மனித உயிர்களைக் காத்திடுவோம்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
தேசிய தன்னார்வ இரத்ததான நாள் செய்தி - 30.09.2023

இரத்ததானம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் முதல் நாள் தேசிய தன்னார்வ இரத்ததான தினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டிற்கான தேசிய தன்னார்வ இரத்ததான தினத்தின் கருப்பொருள் “தொடர்ந்து இரத்தம், பிளாஸ்மா தானம் செய்வோம், வாழ்வைப் பகிர்ந்து கொள்வோம்” என்பதாகும்.

அறிவியலில் ஏராளமான கண்டுபிடிப்புகள் நிகழ்ந்திருந்தாலும் இரத்தம் என்ற உயிர் திரவத்தை இன்னும் செயற்கையாக உருவாக்க இயலவில்லை. ஒவ்வொருவரின் உடலிலும் உள்ள சுமார் 5 லிட்டர் இரத்தத்தில், இரத்ததானத்தின்போது 350 மி.லி. இரத்தம் மட்டுமே எடுக்கப்படுகிறது. இரத்ததானம் செய்ய 20 நிமிடங்களே ஆகும். இரத்ததானம் செய்தவுடன் வழக்கம் போல் அன்றாட வேலைகளை மேற்கொள்ளலாம். 18 வயது முதல் 65 வயது வரை உள்ள ஆரோக்கியமான அனைவரும் 3 மாதத்திற்கு ஒருமுறை இரத்ததானம் செய்யலாம்.

உரிய கால இடைவெளியில் இரத்ததானம் செய்வதால் உடலில் புதிய செல்கள் உருவாகி அவர்களின் உடல் நலன் காக்கப்படுகிறது. அரசு இரத்த மையங்களிலும், இரத்ததான முகாம்களிலும் தன்னார்வமாக இரத்த தானம் செய்யலாம்.

இரத்த மையங்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்கான e-RaktKosh வலைதளத்தில், இரத்ததான முகாமையும் இரத்த கொடையாளர்களைப் பதிவு செய்து கொள்ளலாம். பொதுமக்கள் இத்தளத்தைப் பயன்படுத்தி தங்களுக்குத் தேவைப்படும் நேரங்களில் எளிதில் இரத்தம் பெற்றுக் கொள்ளலாம்.

தானமாகப் பெறப்படும் ஒரு அலகு இரத்தம் 4 உயிர்களைக் காப்பாற்றும். இவ்வாறு பிறர் உயிர் காக்க உதவிடும் இரத்தக் கொடையாளர்களுக்கு இரத்ததான முகாம் அமைப்பாளர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கித் தமிழ்நாடு அரசு சிறப்பித்து வருகிறது. கடந்த ஆண்டு அரசு இரத்த மையங்கள் மூலம் 95 விழுக்காடு இரத்தம் சேகரிக்கப்பட்டு, தன்னார்வ இரத்ததானத்தில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்வது குறித்துப் பெருமையடைகிறேன். நடப்பு ஆண்டில், தன்னார்வ இரத்ததானத்தில் தமிழ்நாடு 100 விழுக்காடு இலக்கை எய்தி, விலைமதிப்பற்ற உயிர்களைத் தொடர்ந்து காத்திட, பொதுமக்கள் அனைவரும் மனமுவந்து தன்னார்வ இரத்ததானம் செய்திட முன்வர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

'மகிழ்வுடன் இரத்ததானம் செய்திடுவோம்!
மனித உயிர்களைக் காத்திடுவோம்!!

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம்
புரட்டாசி - ஐப்பசி
அக்டோபர் 2023

மலர் : 54 விலை ரூ.30 இதழ் : 4

ஆசிரியர் - வெளியிடுபவர்
த. மோகன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
க.அ. முகம்மது ரசூல்
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
கு. சுபாஷ்
இரா. பாலாஜி
சி. சுஜிதா

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து. (குறள்-596)

நினைப்பதெல்லாம் உயர்ந்த நினைப்பாகவே இருக்க வேண்டும். அது கைகூடாவிட்டாலும் அதற்காக அந்த நினைப்பைவிடக் கூடாது.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ நம்முடைய தமிழ்நாட்டின் அறிவியல் ஆளுமைகளுக்குப் பாராட்டு - "ஒளிரும் தமிழ்நாடு-மிளிரும் தமிழர்கள்" 5

★ ஏழை, எளிய மக்களுக்கு நலம்தரும் திட்டங்களில் எந்தத்தொய்வும், தாமதமும் இன்றிப் பணியாற்றுங்கள் என்பதுதான் எனது அன்புக் கட்டளை 18

★ கடலூர் மாவட்டத்தில் "அருட்பிரகாச வள்ளலார்" அவர்களின் பெயரில் புதிய பேருந்து நிலையம் 24

★ உயர்தர வேலைவாய்ப்பு அளிக்கும் "உலகளாவிய தொழில் நுட்ப, புத்தாக்க மையம்" 30

★ 2023-2025ஆம் ஆண்டுகளில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் ரூ. 17,140 கோடி மதிப்பீட்டில் 991 பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன 36

★ தமிழ்நாட்டு மக்களின் உணவுத் தேவைக்காக மட்டுமல்ல, மனித உயிர்களின் உயிர்த் தேவைக்கும் அவசியமானது காவிரி நீர் 37

★ சிறு வணிகர்களுக்கான "புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டம்" 41

★ புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கைத் திட்டத்தின்கீழ் 8 நிறுவனங்களுக்கு ரூ.10.85 கோடிப் பங்கு நிதி 54

★ ரூ.150 கோடிச் செலவில் 37 மாவட்டங்களிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் 1,000 புதிய வகுப்பறைகள் 64

★ முதுமொழியும் பொருண்மொழியும்-கட்டுரை 77

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 02.10.2023 அன்று சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற **"ஒளிரும் தமிழ்நாடு–மிளிரும் தமிழர்கள்"** சாதனை படைத்த தமிழ்நாட்டு விண்வெளி விஞ்ஞானிகளுக்கான பாராட்டு விழாவில், விஞ்ஞானிகளுக்குப் பாராட்டுச் சான்றிதழும், நினைவுப் பரிசுகளையும் வழங்கிச் சிறப்பித்தார்.

நம்முடைய தமிழ்நாட்டின் அறிவியல் ஆளுமைகளுக்குப் பாராட்டு "ஒளிரும் தமிழ்நாடு – மிளிரும் தமிழர்கள்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற
"ஒளிரும் தமிழ்நாடு – மிளிரும் தமிழர்கள்" சாதனை படைத்த
தமிழ்நாட்டு விண்வெளி விஞ்ஞானிகளுக்குப் பாராட்டு விழாவில் ஆற்றிய உரை – 02.10.2023

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இந்த மேடையில் நிற்பதையே நான் பெருமையாகக் கருதுகிறேன். தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டும் இல்லை, தமிழனாகப் பிறந்த பெருமையை இன்றைக்கு நான் அதிகமாக அடைந்து கொண்டிருக்கிறேன்.

இந்தியாவின் பக்கம் உலகத்தையே பார்க்க வைத்த தமிழ்நாட்டு அறிவியல் மேதைகள் ஒன்பது பேர் இந்த மேடையில், அமர்ந்திருப்பது என்னுடைய உள்ளத்தை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது.

கல்வி சிறந்த தமிழ்நாடு-புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு-வள்ளுவன் தன்னை உலகினுக்கே-தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு-நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர்-மணி ஆரம் படைத்த தமிழ்நாடு என்று பாடிய மகாகவி பாரதியார் இப்போது இருந்திருந்தால், இஸ்ரோ சிவனும், மயில்சாமி அண்ணாதுரையும் பிறந்த தமிழ்நாடு, நாராயணனும், சங்கரனும், ராஜராஜனும், ஆசீர் பாக்கியராஜும், வனிதாவும், நிகார் ஷாஜியும் பிறந்த தமிழ்நாடு, வீரமுத்துவேல் பிறந்த தமிழ்நாடு என்று பாராட்டிப் போற்றியிருப்பார்.

அந்தளவுக்கு உலகத்தையே இந்தியாவின் பெருமையை உணர்த்துகின்ற தமிழர்களாக நீங்கள் இங்கே உயர்ந்து நிற்கிறீர்கள். அந்த உயரத்தில் இருக்கின்ற உங்கள் எல்லோரையும் ஒரே இடத்தில் அழைத்துப் பாராட்ட வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம்.

எங்களுடைய எண்ணத்தை ஏற்றுக் கொண்டு வருகை தந்திருக்கக்கூடிய உங்கள் எல்லோருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை முதலில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகஸ்ட் 23ஆம் நாள் இந்தியாவுக்கு மட்டும் இல்லை, உலகத்துக்கே முக்கியமான நாள்! நிலாவில் இந்தியா இறங்கிய நாள். சந்திரயான் விண்கலத்துடன் லேண்டரானது வெற்றிகரமாக நிலவில் இறங்கிய நாள்!

1959ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியமும், 1964ஆம் ஆண்டு அமெரிக்காவும், 2013ஆம் ஆண்டு சீனாவும்தான் இந்தச் சாதனையைச் செய்திருக்கிறார்கள்.

2008ஆம் ஆண்டு நிலாவை நோக்கிய பயணத்தை இந்தியா தொடங்கியது. 2023ஆம் ஆண்டில் அந்தச் சாதனையின் எல்லையை அடைந்திருக்கிறது. அதாவது, நிலாவைத் தொட்ட நான்காவது நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றிருக்கிறது!

மற்ற நாடுகளுக்கு இல்லாத சிறப்பையும் இந்தியா அடைந்திருக்கிறது. இதுவரை அறியப்படாத நிலவின் தென்துருவப் பகுதியைச் சந்திரயான்-3 தரையிறங்கி ஆராயத் தொடங்கியிருக்கிறது. அந்தச் சந்திரயான்-3 திட்டத்தின் இயக்குநராக இந்தியாவின் தென் பகுதியைச் சேர்ந்த, அதிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. வீரமுத்துவேல் செயல்படுத்திக் காட்டியது நமக்கெல்லாம் பெருமையிலும் பெருமை!

சந்திரயான்-3 வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியதற்கு இணையாக விண்வெளி ஆராய்ச்சில் கொடிகட்டிப் பறக்கும் தமிழர்கள் என்ற செய்தி அதிகமாகப் பரவியது. இப்படிப்பட்ட பெருமையைத் தமிழ்நாட்டுக்குத் தேடித்தந்த அறிவியல் மேதைகளான உங்கள் எல்லோரையும் தமிழ்நாடு முதலமைச்சராகக் கோடிக்கணக்கான தமிழ்நாட்டு மக்கள் சார்பில் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன், போற்றுகிறேன். உங்கள் எல்லோரையும் வணங்குகிறேன்.

இது பேரறிஞர் அண்ணா பெயரால், தலைவர் கலைஞர் அவர்கள் அமைத்த அரங்கம்! இந்த இடத்திற்கு அழைத்து உங்களுக்குப் பாராட்டு விழா நடத்துவது மிகமிகப் பொருத்தமான ஒன்று!

‘இந்த நாட்டில் ஏன் ஐன்ஸ்டீன் உருவாகவில்லை? இந்த நாட்டில் ஏன் ஒரு தாமஸ் ஆல்வா எடிசன் உருவாகவில்லை? என்று ஏக்கத்துடன் கேட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

நம்முடைய தமிழ்நாட்டில்தான் இத்தனை அறிவியல் ஆளுமைகள் உருவாகி இருக்கிறார்கள். இந்த மேடையைப் பாருங்க அண்ணா’ என்று சொல்வதற்குத்தான் பேரறிஞர் அண்ணா பெயரில் அமைந்திருக்கக்கூடிய இந்த அரங்கில் இந்த விழாவை நடத்துவது மிகமிகப் பொருத்தமானது என்று சொன்னேன்.

நம்ம தமிழ் அறிவு என்பதே அறிவியல் அறிவுதான். எதையும் பகுத்துப் பார்க்கும் பகுத்தறிவுதான் தமிழறிவு!

‘எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு’, இந்தக் குறளுக்கு இணையான அறிவியல் சிந்தனை இருக்க முடியாது. இப்படிப்பட்ட அறிவியல் அறிவைத்தான் நம்முடைய தமிழ் இலக்கியங்கள் நமக்குக் கற்பித்திருக்கிறது.

நிலம், தீ, நீர், வளி விசும்போடு ஐந்தும்..’ என்று அன்றைக்குச் சொன்னது தொல்காப்பியம்.

நிலம் - தீ - காற்று - நீர் - வானம் - ஆகிய ஐந்தும் கலந்ததுதான் உலகம் என்று சொல்லியிருக்கிறது. நில அமைப்பை ஐந்தாகப் பிரித்து, பொருளை மூன்றாகப் பிரித்து வாழத் தொடங்கிய இனம் நம்முடைய தமிழினம். இதில் தமிழர்களுடைய வானியல் அறிவு தனித்தன்மை வாய்ந்தது. புறநானூற்றின் முதல் பாடலில் ‘நிலம் ஏந்திய விசும்பும்’ என்று வானைப் பற்றிப் பாடப்பட்டிருக்கிறது.

முடிவாக 400ஆவது பாடலும், ‘மாவிசும்பின் வெண் திங்கள்’ என்று வானத்தைப் பாடித்தான் முடியும்.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் - திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும் என்று சூரியனையும் நிலவையும் போற்றிப் பாடித்தான் சிலப்பதிகாரம் தீட்டினார் இளங்கோவடிகள்!

அணி நிலா-துணி நிலா-மணி நிலா-பணி நிலா என்று பாடியது சீவகசிந்தாமணி. இப்படி சூரியனையும் - நிலவையும் வானத்தையும் பாடாமல் தமிழ் இலக்கியங்கள் இருந்தது இல்லை. இதையெல்லாம் நான் சொல்லக் காரணம்... விருப்பு வெறுப்பற்ற அறிவியல் அறிவுதான் தமிழ்நாட்டின் அறிவாக இருந்தது. அதுதான் இந்த அறிவியல் மேதைகள் உருவாக்கி இருக்கிறது.

இன்னும் சொன்னால், இந்த ஒன்பது பேரில் ஆறு பேர் அரசுப் பள்ளியில் படித்தவர்கள். அதுதான் மிகமிகப் பெருமைக்குரியது. மிகமிகச் சாதாரண ஊர்களில் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து - படித்து முன்னேறியவர்கள். முதல் தலைமுறைப் பட்டதாரிகளாக இருந்து விஞ்ஞானிகளாக உயர்ந்தவர்கள். அதிலும் குறிப்பாக ரெண்டு பேர் பெண்கள்.

இந்த மேடையே சமூகநீதியின் அடையாளமாக இருப்பதைப் பார்க்கும்போது பெருமையாக இருக்கிறது. "என்னரும் தமிழ்நாட்டின் கண் எல்லோரும் கல்விகற்றுப் பன்னறும் கலைஞானத்தால், பராக்கிரமத்தால், அன்பால், உன்னத இமய மலைபோல் ஓங்கிடும் கீர்த்தி எய்தி இன்புற்றார் என்று மற்றோர் இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?" என்று ஏக்கத்துடன் பாடினார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். அது இந்த நாள்தான்! அதன் அடையாளமாக இருப்பவர்கள்தான் இந்த ஒன்பது மேதைகளும்.

என்னைப் பொறுத்தவரை தமிழ்நாட்டு இளைய சமுதாயத்தினர் இவர்கள்தான் தங்களுடைய வழிகாட்டிகளாக ஏற்றுக்கொண்டு முன்னேற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மரியாதைக்குரிய டாக்டர் கே.சிவன் அவர்கள் - கன்னியாகுமரி மாவட்டம் சரக்கல்விளை என்ற ஊரில் பிறந்தவர். 1982ஆம் ஆண்டு இஸ்ரோவில் சேர்ந்து - 2018ஆம் ஆண்டு இஸ்ரோ தலைவராக உயர்ந்த ஆற்றலுக்குரியவர். பி.எஸ்.எல்.வி. மூலம் 104 விண்கலங்களுக்கான திட்ட ஒருங்கிணைப்பாளராக இருந்தார். ராக்கெட் அமைப்புத் தொடர்பாகச் சித்தாரா என்ற மென்பொருளை உருவாக்கியவர்.

சந்திரயான்-2 முழு வெற்றி அடையாத நிலையில், அவர் கண்கலங்கிய காட்சிகள்தான், ஆற்றிய பணிகள், அதன் மேல் அவர் வைத்திருந்த மாறாத பற்றின் அடையாளமாக வெளிப்பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது!

மரியாதைக்குரிய மயில்சாமி அண்ணாதுரை அவர்கள் - பொள்ளாச்சி அருகில் கோத்தவாடி என்கின்ற கிராமத்தில் பிறந்தவர். 36 ஆண்டுகள் இஸ்ரோவில் பணியாற்றியவர். மூன்றாண்டு காலம் இஸ்ரோ விண்வெளி ஆய்வு மையத்தில் திட்ட இயக்குநராக இருந்தவர். பல்வேறு விண்கலங்களைச் செலுத்துவதில் முக்கியப் பங்காற்றியவர். சந்திரயான்-1 வடிவமைப்பில் இந்தியக் கொடியைப் பொருத்தியவர் இவர். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்து விண்ணைத் தொட்டவர் திரு. மயில்சாமி அண்ணாதுரை அவர்கள்.

மரியாதைக்குரிய வி.நாராயணன் அவர்கள் - குமரி மாவட்டத்தில் பிறந்தவர். திருவனந்தபுரம் திரவ உந்துசக்தி மையத்தின் இயக்குநராக இருக்கிறார். இஸ்ரோ தயாரித்த பெரும்பாலான ராக்கெட் தயாரிப்புகளில் இவருடைய பங்கு அளப்பரியது. சந்திரயான்-3 விண்ணில் செலுத்தப் பயன்படுத்திய மார்க்-3 ராக்கெட் உருவாக்கத்தில் முக்கியப் பங்காற்றியவர். இஸ்ரோவின் சிறந்த விஞ்ஞானி விருதை இரண்டு முறை பெற்றவர் திரு. நாராயணன் அவர்கள்.

மரியாதைக்குரிய ஏ.ராஜராஜன் அவர்கள் - காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிறந்தவர். இஸ்ரோவில் வெளியீட்டு அங்கீகார வாரியத் தலைவராக இருக்கிறார். ககன்யான், எஸ்.எஸ்.எல்.வி. போன்ற இஸ்ரோவுடைய விரிவடைகின்ற தேவைகளுக்குத் திடமான மோட்டார்கள்

தயாரிப்பதில் இவருடைய பங்கு அளப்பரியது. இஸ்ரோ மெரிட் விருதை 2015ஆம் ஆண்டு பெற்றவர் இவர்.

மரியாதைக்குரிய எம். சங்கரன் அவர்கள் – திருச்சியில் பிறந்தவர். யு.ஆர்.ராவ் விண்வெளி மையத்தின் இயக்குநராகப் பணியாற்றியவர். சந்திரயான் 1,2,3 ஆகிய மூன்று திட்டங்களிலும் அவர் தன்னை ஒப்படைத்துக் கொண்டு பணியாற்றி இருக்கக்கூடியவர். சூரியனைப் பற்றி ஆய்வு செய்ய இந்தியா அனுப்பிய ஆதித்தியா எல்-1 என்ற விண்வெளித் திட்டத்திலும் பணியாற்றியவர். தொழில்நுட்பக் கருவிகள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய முடியும் என்று நிரூபித்துக் காட்டியவர்களில் ஒருவர் நம்முடைய எம்.சங்கரன் அவர்கள்.

மரியாதைக்குரிய ஆசீர் பாக்கியராஜ் அவர்கள் – தூத்துக்குடியில் பிறந்தவர். ராக்கெட் எஞ்சின் – விண்கல இயந்திரங்களின் உயர்சோதனைத் துறையில் பெரும் ஈடுபாடு கொண்டவர். ராக்கெட் நிலை ஒருங்கிணைப்புகளில் நவீன வசதிகளை நிறுவியவர். G.S.L.V.-யை இவருடைய குழுதான் ஒருங்கிணைத்தது. உயர் தொழில்நுட்பங்களை இணைப்பதில், இவருடைய பங்களிப்பு முக்கியமானது.

மரியாதைக்குரிய டாக்டர் எம்.வனிதா அவர்கள் – சென்னையைச் சேர்ந்தவர். சந்திரயான்-2 திட்டத்தின் இயக்குநராக இருந்த பெருமைக்குரியவர். மங்கல்யான் வடிவமைப்பிலும் முக்கியப் பங்காற்றியவர். இஸ்ரோவில் திட்ட இயக்குநராகப் பணியாற்றிய முதல் பெண் விஞ்ஞானி என்ற பெருமைக்குரியவர். சிறந்த பெண் விஞ்ஞானி விருதையும் பெற்றவர்.

மரியாதைக்குரிய டாக்டர் நிகார் ஷாஜி அவர்கள் – தென்காசி மாவட்டம், செங்கோட்டையைச் சேர்ந்தவர். 1987 முதல் இஸ்ரோவில் பணியாற்றி வருகிறார். இஸ்ரோவின் சூரியன் ஆய்வுத் திட்டமான ஆதித்தியா எல் ONE திட்டத்தினுடைய திட்ட இயக்குநராகச் செயலாற்றினார்.

மரியாதைக்குரிய டாக்டர் வீரமுத்துவேல் அவர்கள், விழுப்புரத்தில் பிறந்தவர். கடந்த ஆகஸ்ட் 23ஆம் நாள் ஏவப்பட்ட சந்திரயான்-3 திட்டத்தின் வெற்றிகரமான இயக்குநர்தான் நம்முடைய வீரமுத்து அவர்கள். "அரசுப் பள்ளியில் 10ஆம் வகுப்பு வரை படித்தேன். பள்ளியில் நான் ஒரு ஆவரேஜ் மாணவன். அடுத்து எங்கே படிக்கவேண்டும், என்ன படிக்கவேண்டும் என்று எந்த ஒரு ஐடியாவும் எனக்கு இல்லை. அம்மா, அப்பா,குடும்பத்தினர் யாரும் படித்தவர்கள் இல்லை" என்று சொல்கின்ற அளவுக்குச் சாதாரணப் பின்புலத்தில் பிறந்து சரித்திர சாதனையைப் படைத்திருக்கிறார் வீரமுத்து அவர்கள்.

இதில் தமிழ் இனத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் என்ன பெருமை என்றால் சந்திரயான் – 1 திட்ட இயக்குநராக இருந்தவர் மயில்சாமி அண்ணாதுரை அவர்கள். 2008 அக்டோபர் 28ஆம் நாள் அது நிலவைச் சுற்றத் தொடங்கியது. நிலவில் நீர்க்கூறுகள் இருப்பதை அதுதான் கண்டறிந்து சொன்னது.

சந்திரயான்-2, 2019 ஜூலை 15ஆம் நாள் ஏவப்பட்டது. இதனுடைய திட்ட இயக்குநராக வனிதா செயல்பட்டார். அந்தக் காலக் கட்டத்தில்தான் இஸ்ரோ தலைவராக டாக்டர் சிவன் அவர்கள் இருந்தார்.

இப்போது ஏவப்பட்டது சந்திரயான்-3. இதனுடைய திட்ட இயக்குநர் வீரமுத்துவேல். இதுதான் தமிழ்நாட்டிற்குக் கிடைத்த மிகப்பெரிய பெருமை. இந்தப் பெருமையைத் தமிழ்நாடு அரசு போற்றும் விதமாக, இரண்டு அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன்.

முதல் அறிவிப்பு இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமையை ஏற்படுத்திக் கொடுத்த, இனியும் ஏற்படுத்திக் கொடுக்கப் போகின்ற அறிவியல் மேதைகளான இந்த ஒன்பது பேருக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில், ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 இலட்சம் வழங்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் அறிவுக்கான அளவுகோல் எதுவுமில்லை. உங்கள் உழைப்பிற்கான அங்கீகாரத்தின் அடையாளமாகத்தான் தமிழ்நாடு

அரசு இந்தத் தொகையை வழங்கியிருக்கிறது. இதை ஏற்றுக்கொண்டு, மேலும், மேலும் இந்தியாவிற்கு நீங்கள் பெருமை சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

இரண்டாவது அறிவிப்பு என்னோட கனவுத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியும். தமிழ்நாட்டு மாணவர்கள் – இளைஞர்கள் ஏதோ பட்டம் வாங்கினால் மட்டும் போதும் என்று நினைக்காமல் கல்வியில் – அறிவாற்றலில் – சிந்திக்கின்ற திறனில் – பன்முகத் திறமையில் சிறந்தவர்களாக அப்படி உருவாக்கத்தான் நான் முதல்வன் திட்டத்தைத் தொடங்கி நடத்திக்கொண்டு வருகிறோம்.

சென்ற ஆண்டு மட்டும் 13 இலட்சம் பேருக்குப் பயிற்சி வழங்கி இருக்கிறோம். 10 இலட்சம் என்று இலக்கு வைத்திருந்தோம். ஆனால் 13 இலட்சம் பேருக்குப் பயிற்சி வழங்கியிருக்கிறோம். நம்முடைய மாணவர்களை அனைத்துத் திறமைகளும் கொண்டவர்களாக வளர்த்து வருகிறோம்.

பன்னாட்டு நிறுவனங்கள் அதிக அளவில் தமிழ்நாட்டிற்குத் தொழில் தொடங்க வருகிறார்கள். அதற்குத் தகுதியானவர்களாகத் தமிழ்நாட்டு இளைஞர்களை உருவாக்கி வருகிறோம். அதேபோல அறிவியல் திறனுள்ள மாணவர்களையும் உருவாக்க நினைக்கிறோம். அதற்கான அறிவிப்பை இந்த மேடையில் வெளியிடுவது மிகமிகப் பொருத்தமாக அமையும் என்று நான் கருதுகிறேன்.

பொறியியல் படிக்கின்ற மாணவர்களுக்கு அறிவியல் கண்டுபிடிப்பு ஆர்வத்தை உருவாக்க இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தப் போகிறோம். அரசு பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும், 7.5 விழுக்காடு ஒதுக்கீட்டின்கீழ், அரசின் கல்வி உதவித்தொகை பெற்று இளநிலைப் பொறியியல் படிப்பை முடித்து, முதுநிலை பொறியியல் படிப்பைத் தொடர்கின்ற 9 மாணவர்களுக்குச் சாதனை விஞ்ஞானிகள் பெயரில் ஸ்காலர்ஷிப் வழங்க இருக்கிறோம். இதன்மூலம் அவர்களுக்கு கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்துக் கட்டணங்களும் வழங்கப்படும். அந்த மாணவர்கள், அறிவியலாளர்களின் தலைமையில் அமைக்கப்படுகின்ற குழுக்களால் தேர்வு செய்யப்படுவார்கள். இந்தக் கல்வி உதவித்தொகைக்காக, பத்து கோடி ரூபாயில் தொகுப்பு நிதியம் ஒன்று உருவாக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே அமர்ந்திருக்கும் இந்த ஒன்பது பேரை பாராட்டுவது அவர்களைப் பாராட்டுவது மட்டும் இல்லை, அவர்களைப்போல ஆளுமைகள் இன்னும் அதிகமாக உருவாகவேண்டும் என்று ஊக்கப்படுத்தவும்தான் இந்தப் பாராட்டு விழாக்களை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்த நிகழ்ச்சியை 58 இலட்சம் கல்லூரி, பள்ளி மாணவர்கள் காண்பதற்கான ஏற்பாடுகளை, நம்முடைய அரசு செய்திருக்கிறது. இதனைப் பார்த்துக் கொண்டிருக்கும் மாணவக் கண்மணிகளே! உங்களை நான் கேட்டுக் கொள்வது, அறிவியல் ஆர்வத்தையும், ஆளுமைத் திறனையும் நீங்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும். இன்றைய மாணவர் சமுதாயத்திலிருந்து – இந்த மேடையில் இருக்கின்ற ஆளுமைகளைப் போன்ற அறிவியல் மேதைகள் உருவாகவேண்டும்! அதுதான் இந்தத் திராவிட மாடல் அரசின் இலக்கு! அந்த வகையில், இங்கே அமர்ந்திருப்பவர்கள் அறிவியலாளர்களாக மட்டும் இல்லை, அறிவியல் வழிகாட்டிகளாகவும் இருக்கிறார்கள்.

இவர்களுடன் சேர்ந்து, பல்லாயிரக்கணக்கான விஞ்ஞானிகள் – அறிவியல் ஆளுமைகள் – திறமைசாலிகளின் கூட்டுமுயற்சியால்தான் இவை அனைத்தும் நிகழ்த்திக் காட்டப்பட்டிருக்கிறது. அந்த வகையில், இன்றைய இஸ்ரோ தலைவர் மரியாதைக்குரிய சோம்நாத் அவர்களுக்கும், என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் அனைத்து அறிவியலாளர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களால்தான் அறிவியல் துறையில் இந்தியா தலைநிமிர்ந்து நிற்கிறது. நம்மைவிட அதிகமான தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்ற நாடுகளில் இருக்கலாம். ஆனால், அதிகமான தொழில்நுட்ப அறிவுக் கூர்மை கொண்டவர்கள் இந்தியாவில்தான் இருக்கிறார்கள்.

பூமிக்கு அப்பால் உள்ள அனைத்து ஆராய்ச்சிகளும் தொய்வின்றித் தொடரட்டும். சூரியன் பற்றியும், நிலாவைப் பற்றியும் எல்லா ஆய்வுகளும் வெற்றிகரமாக அமைய வாழ்த்துகிறேன்.

மனிதரை விண்வெளிக்கு அனுப்புகின்ற வரை அனைத்து அறிவியல் முயற்சிகளும் வெற்றிகரமாக நடைபெறட்டும். இந்திய நாட்டைக் காப்போம்! நாட்டுக்கு அப்பால் உள்ள உலகத்தையும் கற்போம்! நன்றி, வணக்கம்!

கிராம சபைகள் குறைந்தது ஆண்டுக்கு 2 முறை என்பதைத் திராவிட மாடல் அரசானது ஆண்டுக்கு 6 முறை நடைபெற அறிவிக்கப்பட்டுள்ளது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
02.10.2023 அன்று நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில்
காணொலிக் காட்சி வாயிலாக ஆற்றிய உரை

கிராம சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருக்கிற பொதுமக்கள் எல்லோருக்கும் உங்களின் ஒருவனான இந்த மு.க.ஸ்டாலினின் அன்பு வணக்கம்!

நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்ததற்குப் பிறகுதான், கிராமசபைக் கூட்டங்களை முறையாக, தடங்கல் இல்லாமல் நடத்திக் கொண்டு வருகிறோம்.

கிராமப்புற மக்களுடைய குரல் எப்போதும் எந்தச் சூழலிலும் தடையில்லாமல் ஒலிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதுபோல கிராமசபைக் கூட்டங்களைத் தடையில்லாமல் நடத்துகிறோம்.

மக்களாட்சி முதலில் மலர்ந்த இடம் கிராமங்கள் தான். காஞ்சிபுரம் பக்கம் இருக்கிற உத்தரமேரூர் வட்டாரம் தான் ஜனநாயகத் தேர்தல் அமைப்புமுறை பிறந்த தொட்டிலாக வரலாற்று ஆசிரியர்களால் சொல்லப்படுகிறது.

உத்திரமேரூர் கல்வெட்டு இதைச் சொல்கிறது. யாரெல்லாம் தேர்தலில் போட்டியிட இருக்கிறார்களோ அவர்கள் எல்லோருடைய பெயரையும் ஓலைச் சுவடியில் எழுதிக் குடத்தில் போடுவார்கள். அந்தக் குடத்தைக் குலுக்கி ஒரு ஓலையை எடுப்பார்கள். அப்படி எடுக்கப்பட்ட பெயரில்யாருடையபெயர் பொறிக்கப்பட்டு இருக்கிறதோ அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுவார். இதுதான் குடவோலை முறை. இப்படித்தான் தமிழ்நாட்டில் மக்களாட்சி என்ற அமைப்பே மலர்ந்தது.

அந்த வகையில் பார்த்தால் கிராமங்களில்தான் மக்களாட்சி முறையானது முதலில் தோன்றியுள்ளது. அதிலும் குறிப்பாக, 'கிராமசபை' என்ற அமைப்பு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், சோழர் காலந்தொட்டே பழக்கத்தில் இருந்து வருகிறது.

சோழப் பேரரசில் 'ஊர், மகாசபை' என்கிற இரு வேறு அவைகள் இருந்தன. இதில் மகாசபையைப் போன்றதுதான் தற்போதைய கிராமசபை என்று அறியமுடிகிறது. மக்களாட்சியின் ஆணிவேராக இருக்கிற கிராமசபைக் கூட்டங்களில் மக்களே நேரடியாக விவாதித்து, தங்களுடைய தேவைகளையும், பயனாளிகளையும் தேர்வு செய்வதிலும், வளர்ச்சிக்கான திட்டங்களைத் தீட்டுவதிலும் முக்கியப் பங்காற்றி வருகிறார்கள்.

இது இந்திய அளவில் நாடாளுமன்றம், மாநில அளவில் சட்டமன்றம் இருப்பதைப் போல, கிராம அளவில் கிராம சபையானது மக்கள் குரலை எதிரொலிக்கிற மன்றமாக அமைந்திருக்கிறது.

கிராமசபைகள் குறைந்தது ஆண்டுக்கு இரண்டு முறை நடைபெற வேண்டும் என்று தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் – 1994 குறிப்பிட்டிருந்தாலும், அதை ஆண்டுக்கு நான்கு முறை என்று முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் மாற்றி அமைத்தார். தற்போதைய திராவிட மாடல் அரசானது, இதை ஆண்டுக்கு 6 முறை கிராமசபைக் கூட்டங்கள் நடைபெற வேண்டும் என்று அதிகரித்திருக்கிறோம்.

அதன்படி, ஆண்டொன்றுக்கு முறையே குடியரசு நாள், உலகத் தண்ணீர் நாள், தொழிலாளர் நாள், விடுதலை நாள், காந்தியடிகள் பிறந்தநாள் உள்ளாட்சிகள் நாள் ஆகிய 6 நாட்களில் கிராமசபை நடைபெற்று வருகிறது.

ஒரு அமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்றால் அதற்கு அதிகாரம் வழங்க வேண்டும். நிதி ஆதாரங்களையும் ஏற்படுத்தித் தர வேண்டும். கிராம சபைகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை அங்கீகரித்தல், ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும் பணிகளின் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல், ஊராட்சிகளின் வரவு, செலவினங்களை ஆய்வு செய்தல், பயனாளிகளைத் தேர்வு செய்தல், திட்டக் கண்காணிப்புச் செய்தல் ஆகிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

கிராமசபை ஒன்றுக்குக் கிராம ஊராட்சிகள் மேற்கொள்ளும் செலவினம் ஆயிரம் ரூபாயில்

இருந்து ஐந்தாயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கிராமசபைகள் பல சிறப்புச் செய்கைகளைச் செய்கிற வகையில், நலிந்தோர்க்கும், வறியோர்க்கும் உதவி செய்ய மாற்றுத்திறனாளிகள் நலன், முதியோர் நலன், குழந்தைகள் நலன் போன்றவற்றில் அதீத ஈடுபாடு காட்டிட வேண்டும். கல்விக்காக நம்முடைய அரசு எடுக்கிற முயற்சிகள் எல்லாவற்றிலும் கிராமசபைகள் முக்கியப் பாலமாக இருக்க வேண்டும்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடங்கி வைத்திருக்கிறேன். உங்கள் குழந்தைகள் இப்போது பள்ளிக்குச் சென்று, சாப்பிடுகிறார்களா?

தமிழ்நாடு முழுக்க 16 இலட்சம் குழந்தைகள் காலை உணவு சாப்பிடுகிறார்கள்! அதுமட்டுமல்ல, எண்ணும் எழுத்தும் திட்டம், பள்ளி உட்கட்டமைப்புத் திட்டங்கள், இதுமாதிரியான திட்டங்களை நீங்கள் மேம்படுத்த உதவி செய்து செயல்படுத்த வேண்டும்.

இன்றைக்குக் கிராமசபையில் பங்கெடுத்த நீங்கள், பங்கேற்காத உங்கள் ஊர் மக்களிடம் போய் சொல்லுங்கள், கிராம சபையை ஒரு ஆக்கப்பூர்வமான கருத்துப் பரிமாற்றக் களமாக கருதிக் கலந்துகொள்ள வேண்டும் என்று.

கிராம சபையில், ஊராட்சிகளுடைய ஒட்டுமொத்த வளர்ச்சிக்குத் தேவையான கருத்துக்களை மட்டுமே விவாதிக்க வேண்டும். ஊராட்சியினுடைய எல்லாப் பகுதிகளும் முழுமையான வளர்ச்சியை அடைய, அங்கே கூடியிருக்கக்கூடிய அலுவலர்களிடத்தில், அவர்கள் துறை மூலமாக மேற்கொள்ளப்படுகிற திட்டங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.

மகளிர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோர் அதிக அளவில் கலந்துகொள்வதை உறுதிசெய்ய வேண்டும். கிராமசபையில் அவர்கள் கருத்துக்களுக்கு உரிய முக்கியத்துவமும் அளிக்கப்பட வேண்டும். தேர்வு செய்யப்படுகிற பணிகள் பொதுவானதாகவும் எல்லோரும் பயன்பெறும் வகையில் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும். கிராமசபை நடைபெற்ற விவரங்களைக் குறிக்க, பதிவேடு பராமரித்து, எல்லோருடைய கருத்துக்களையும் பதிவுசெய்ய வேண்டும்.

நீர் ஆதாரங்களை வளப்படுத்துதல், தண்ணீரின் முக்கியத்துவம், நிலத்தடி நீரினைச் செறிவூட்டுதல், நீர்நிலைகளைப் பாதுகாத்தல் போன்ற ஆக்கப்பூர்வமானப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்தல், சுகாதாரம் பேணுதல், முறையான திட, திரவக் கழிவு மேலாண்மை செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

இதை நிலைநிறுத்துகிற வகையில், எல்லா ஊராட்சி மன்றத் தலைவர்களும் மக்கள் பணி ஆற்ற வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்குகிற வகையில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் செயல்படுத்தபட்டு வருகிறது. ஒரு கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் பெண்கள் இந்தத் திட்டத்தின் மூலமாகப் பயனடைந்து கொண்டு வருகிறார்கள்.

விடுபட்டவர்களும் மேல்முறையீடு செய்யலாம் என்கிற வாய்ப்பை அரசு வழங்கியிருக்கிறது. இந்தத் திட்டத்தில் கிராமப்புறப் பெண்கள்தான் அதிகமாகப் பயனடைகிறார்கள். ரூ.1,000 என்பது அவர்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும் மிகுந்த உதவியாக இருக்கிறது. இன்னும் சொன்னால், ஊரகப் பகுதிகளில் பணப்புழக்கம் அதிகமாக இந்தத் திட்டம் வழிவகை செய்திருக்கிறது.

ஆட்சிப் பொறுப்பேற்ற அன்றே – மகளிருக்குக் கட்டணமில்லாப் பயணம் என்கிற விடியல் பயண வசதியை ஏற்படுத்தித் தந்தோம். இதுவும் பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைந்திருக்கிறது.

அரசுப் பள்ளியில் படித்த மாணவிகள், உயர் கல்விக்காகக் கல்லூரியில் சேர்ந்தால், அவர்களுக்குப் புதுமைப் பெண் திட்டத்தில் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கி வருகிறோம்.

வேளாண்மைக்கு என்று தனி நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து கொண்டு இருப்பதும் நம்முடைய கழக அரசுதான். இதன்மூலமாக, பாசனப் பரப்பும் அதிகமாகி, வேளாண் உற்பத்தியும் உயர்ந்துள்ளது. அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்குப் புத்துயிர் வழங்கி, விரிவுபடுத்திக் கொண்டு வருகிறோம்.

இப்படியாக, கிராமங்களுடைய, கிராம மக்களுடைய ஒட்டுமொத்த முன்னேற்றத்தில் சிறப்புக் கவனத்தை தி.மு.க. அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

அனைத்துத் துறையும் வளர வேண்டும், அனைத்து மாவட்டங்களும் வளர வேண்டும் என்ற இலக்கை வைத்துச் செயல்பட்டு வருகிறோம். நகர்ப்புறங்கள் மட்டும் வளர்ந்தால் போதாது, கிராமப்புறங்களும் வளர்ந்தாக வேண்டும்.

“ஒரு மாநிலத்தினுடைய வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியாக, தொழில் வளர்ச்சியாக மட்டும் இருக்கக் கூடாது. சமுதாய வளர்ச்சியாக இருக்க வேண்டும்” என்று நான் அடிக்கடி சொல்லிக் கொண்டு வருகிறேன்.

அதைச் செயல்படுத்திக் காட்ட வேண்டும் என்றால், கிராமங்கள் முழுமையாக வளர்ச்சி அடைந்தாகவேண்டும். இதை மனதில் வைத்துதான் எல்லாத் திட்டங்களையும் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

அக்டோபர் 2, அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாள். “இந்தியா–கிராமங்களில் வாழ்கிறது” என்று சொல்லி, ‘கிராம சுயராஜ்ஜியம்’ எனும் கிராமத் தற்சார்பு நிலையை எல்லா கிராமங்களும் அடைய வேண்டும் என்று விரும்பினார்.

தற்சார்புள்ள கிராமங்கள் – தன்னிறைவு பெற்ற கிராமங்கள் – எல்லா வசதிகளும் கொண்ட கிராமங்கள் – சமூக வளர்ச்சி பெற்ற கிராமங்கள் – ஆகியவற்றை உருவாக்க இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு எந்நாளும் உழைக்கும், உழைக்கும், உழைக்கும்!

நவம்பர் 14 : பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பிறந்தநாள்

ஜனநாயகப் பாதுகாவலர்

மேத் திங்கள் இருபத்து ஏழாம் நாளன்று நம் செவிகளை அந்தச் சோகச் செய்தி தாக்கிற்று. செய்தி அன்று அது: செந்தீ! ஜனநாயகப் பாதுகாவலர் ஜவஹர் காலமாகிவிட்டார். நம்பத்தான் முடியவில்லை. ஆனால் நடத்துவிட்டதே! மறைவது இயற்கை. மண்ணாவது திண்ணம். மனிதர்கள் வருகிறார்கள், போகிறார்கள். இப்படி எந்த ஆறுதல் வார்த்தைகளாலும் அணைபோட்டுத் தடுக்க முடியாத சோக வெள்ளம் பெருக்கெடுத்தோடுகிறது.

அத்தகையப் பெருஞ்செல்வத்தை இழந்திருக்கிறோம். நம்பிக்கை நட்சத்திரம் மறைந்துவிட்ட ஏமாற்றத்தில் பெருமூச்சு விடுகிறோம். கடும் புயலில் சிக்கிய படகாகத் தவிக்கிறது நாடு, உலகத் தாய் கண்ணீர் வடிக்கிறாள்.

உலகம் வல்லூறுகளின் வேட்டைக் காடாக-நாய், நரிகள் விருந்துண்ணும் ரணகளமாக-மாறிவிடக் கூடாது எனப் பாடுபட்டு, அவர் பறக்கவிட்ட வெண் புறா, சிறகடித்துத் துடிதுடிக்கிறது, அவர் மறைந்த செய்தி கேட்டு! இமயம் முதல் குமரி வரையில் உள்ளோர் இதயங்களில் எல்லாம் இடம் பெற்றிருக்கும் உரிமையை உத்தமர் காந்தியாருக்குப் பிறகு பெற்றிருந்த ஒரே மனிதர்- ஒரே தலைவர்- பண்டித நேரு. அவர் இன்றில்லை. அவர் பேணி வளர்த்த ஜனநாயகக் கொள்கை இருக்கிறது. அதனை மேலும் சீர்பெறச் செயல்படுத்துவதுதான், இருப்பவர்கள் மறைந்தவருக்குச் செய்யும் மரியாதையாகும். மறைந்தவர் இந்த மண்ணுக்கு ஆற்றியப் பணிகள் ஏராளம். இன்னும் ஆற்ற வேண்டிய இன்றியமையாத பணிகளும் இருக்கின்றன.

அவர் தொட்ட பணிகளைத் தொடர்ந்து வெற்றி காண்பதுதான் அவருக்கு உளமார அமைக்கும் நினைவுச் சின்னமாகும். ஜனநாயகச் சோலையில் பகுத்தறிவு மேடை கட்டி-சமாதானக் கொடியை உலகமறிய உயர்த்திப் பிடித்தவர் மறைந்த உத்தமர். அவருக்கு நாம் காட்டுகின்ற நன்றி, அந்தச் சோலை வாடாமல் மேடை சரியாமல் பாதுகாப்பதேயாகும். இன்னும் எத்தனையோ வேலைகளை நாடு அவரிடம் எதிர்பார்த்தது. அதற்குள் இயற்கை தன் வேலையை முடித்துக் கொண்டது. கிரீடம் நொறுங்கி விட்டது, கீர்த்தி நிலைத்து விட்டது. வாழ்க நேருவின் பெயர்!

— பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் மறைந்தபொழுது,
முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்கள்
வானொலியில் ஆற்றிய உரை.

பொதுமக்களின் பங்களிப்புடன் பசுமைத் தமிழ்நாடு இயக்கம் மூலம் சங்ககால 18 மர வகைகளைச் சேர்ந்த 14 இலட்சத்திற்கும் மேலான மரக்கன்றுகளை அரசு நட்டு வளர்த்துள்ளது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் தலைமையில், தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட வனத்துறை அலுவலர்கள் மாநாட்டில் ஆற்றிய உரை – 03.10.2023

அனைவருக்கும் வணக்கம்.

வனப்பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பும் இந்த அரசின் இரு முக்கியக் கொள்கை.

"மீண்டும் மஞ்சப்பை" என்பது எனது மனதிற்கு நெருக்கமான திட்டம். இது நமது தமிழ்நாட்டின் பண்பாட்டில் வேரூன்றியிருப்பதால் இதனை முழுமையான பயன்தரும் விதத்தில் மக்கள் திட்டமாக மாற்ற வேண்டியது உங்கள் கடமை. பிளாஸ்டிக் மாசுபாட்டைத் தடுக்கப் பொதுமக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் மனநிலையை இயற்கைப் பொருட்கள் பயன்பாட்டின் மீது மாற்ற வேண்டும்.

இதனால் நமது மாநிலம் பசுமையான, இயற்கை சார்ந்த எதிர்காலத்தை நோக்கி வளர முடியும். மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் வன அலுவலர்கள் பிளாஸ்டிக் பயன்பாட்டினைத் தவிர்ப்பதற்கான பணிகளைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

மீண்டும் மஞ்சப்பை திட்டத்திற்கான விழிப்புணர்வினை மாவட்ட ஆட்சியர், மாவட்ட உயர் அலுவலர்கள் உறுதி செய்வதோடு அவர்களின் செயல்பாடுகளில் பள்ளி, சுயஉதவிக் குழுக்களையும், அனைத்துப் பிரிவினரையும் ஒருங்கிணைக்க வேண்டும். பிளாஸ்டிக் அல்லாத பொருட்களின் பயன்பாட்டை ஊக்கப்படுத்த வேண்டும்.

அனைத்துக் கடலோர மாவட்ட ஆட்சியர்களையும், கடலோர மாவட்டங்களின் மாவட்ட வன அலுவலர்களையும், கடல் அரிப்பைத் தடுக்கவும், கரையோரப் பகுதிகளின் பாதுகாப்பை நிரந்தரமாக உறுதி செய்வதற்கான வழிமுறைகளை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு இந்தத் தருணத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். அத்தகைய நமது முயற்சிகள் அனைத்தும் மக்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்படும்போது மட்டுமே நமது செயல்கள் நாம் எதிர்பார்க்கும் நல்ல பலனை அளிக்கும் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

மேலும், வனவிலங்குகள், இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும், அனைத்து மாவட்ட ஆட்சியர்களும், மாவட்ட வன அலுவலர்களும் எப்போதும் ஒன்றிணைந்து செயல்படுமாறு இந்தக் கூட்டத்தின் வாயிலாக நான் உங்களை அறிவுறுத்துகிறேன். மனித வனவிலங்கு முரண்பாடுகள் உடனடியாகக் கையாளப்படுவதையும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இழப்பீட்டுத் தொகை காலதாமதமின்றி வழங்கப்படுவதையும் நீங்கள் உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

காலநிலை மாற்ற உத்திகள் உள்ளூர் மட்டத்தில் செயல்படுத்தப்பட்டு, அதனால் உள்ளூர் மக்கள் பாதுகாக்கப்படுவதை நீங்கள் உறுதிசெய்ய வேண்டும். சதுப்புநிலத் தோட்டங்கள், கடல் புற்கள், பவளப் பாறைகளை வளமையோடு மீட்டெடுப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். நமது மாநிலம் 14 ராம்சார் ஈரநிலங்கள் கொண்டு இந்திய அளவில் முதலிடத்தில் உள்ளது மகிழ்ச்சி அளிக்கக் கூடியது.

பசுமைத் தமிழ்நாடு இயக்கம் மூலம் சங்க கால மரங்களான 18 மர வகைகளைச் சேர்ந்த 14 இலட்சத்துக்கும் அதிகமான மரக்கன்றுகளைப் பொதுமக்களின் பங்கேற்புடன் நமது அரசு நட்டு வளர்த்துள்ளது என்று அறிகிறேன். அவ்வாறு நடப்பட்ட மரக்கன்றுகள் நல்ல முறையில் வளர அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் / மாவட்ட வன அலுவலர்களும் சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சங்ககால மரக்கன்றுகளை மீண்டும் நட்டு, நமது மண்ணின் வளத்தை மீட்டெடுப்பதில் பசுமைத் தமிழ்நாடு இயக்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது என்பதை இங்கே குறிப்பிடுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். பசுமைத் தமிழ்நாடு இயக்கம் கிராமப்புற, நகர்ப்புறச் சமூகங்களுக்கு குறிப்பாக, பெண்களுக்கு வேலைகளை வழங்குகிறது.

வன உரிமைச் சட்டம் தகுதியுடைய பழங்குடியினருக்கும், தகுதியுடைய மலைவாழ் மக்களுக்கும், தனியாருக்குமான அனுபவ உரிமைச் சான்று வழங்கவும், பொதுப்பயனுக்கான அனுபவ உரிமைச் சான்று வழங்கவும் வழிவகை செய்கிறது. இதுவரை 11 ஆயிரத்து 245 தனியர் அனுபவ உரிமைச் சான்றுகளும், 650 பொதுப் பயனுக்கான அனுபவ உரிமைச் சான்றுகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டத்தின்கீழ் இன்னும் பரிசீலனையில் உள்ள விண்ணப்பங்களின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர்களும், மாவட்ட வன அலுவலர்களும் இணைந்து செயல்பட்டு, விரைவில் முடிவெடுக்கவும் இந்தத் தருணத்தில் கேட்டு என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

குற்றங்களைக் குறைத்துவிட்டோம் என்பதாக அல்லாமல், குற்றம் நடைபெறாமல் தடுத்துவிட்டோம் என்பதாகத் தமிழ்நாடு காவல்துறையின் செயல்பாடு அமையவேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற **மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்** ஆற்றிய நிறைவுரை – 03.10.2023

உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கம்.

காலை முதல் பல்வேறு கருத்துக்கள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசப்பட்டிருக்கின்றன. இவை அனைத்தையும் உள்வாங்கிக் கொண்டு அனைவரும் செயல்பட வேண்டும் என்று உங்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு அரசாங்கத்தின் மிக முக்கியமான கடமையும் சாதனையும் – சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதுதான். அமைதியான மாநிலத்தில் தான் அனைத்துத் துறைகளும் வளரும். நான் அடிக்கடி வலியுறுத்துவது – குற்றங்களைக் குறைத்துவிட்டோம் என்பதாக அல்லாமல், குற்றம் நடைபெறாமல் தடுத்துவிட்டோம் என்பதாகத் தமிழ்நாடு காவல்துறையின் செயல்பாடுகள் அமைய வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்கள் பக்கமாக, எளியோர் பக்கமாகக் காவல்துறை இருக்க வேண்டும். இந்த அரசு நலிந்தோர், வறியோர், பெண்கள், குழந்தைகள் நலன் நாடக்கூடிய அரசாகும். ஒரு சாமானியர் தன்னுடைய விண்ணப்பம் / புகார் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கையுடன் காவல் நிலையத்தை நாடுகின்றார் என்றால், அந்த நம்பிக்கையினைக் காப்பாற்றுவது தான் ஒரு நல்ல ஆட்சியின் அடையாளம்.

ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் புகார் கொடுக்க வரும் மனுதாரர்களைக் கனிவுடன் நடத்துவதற்கும், அவர்களுக்கு வழிகாட்டவும் வரவேற்பாளர் பணி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வரவேற்பாளர்களை, அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணியை மட்டுமே செய்யச் சொல்ல வேண்டும். இவர்களை மற்ற பணிகளுக்காகப் பயன்படுத்துவதாக எனக்குத் தெரிய வருகிறது. அது கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும். பெறப்படும் அனைத்து விண்ணப்பங்கள் / புகார்களும் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டு, அதற்கான

ஒப்புகைச் சீட்டு மனுதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

அனைத்துக் காவல்துறை ஆணையர் / மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் ஒவ்வொரு புதன்கிழமையன்றும் குறைகேட்கும் கூட்டம் நடத்த வேண்டும் என்று கடந்த ஆண்டு நான் ஆணையிட்டேன். அன்றைய தினம் நீங்கள் மனுதாரர்களிடம் இருந்து நேரடியாக மனுக்களைப் பெற வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து அதிக மனுக்களோ அல்லது திரும்பத் திரும்ப ஒரே பொருள் குறித்துத் தொடர்ந்து மனுக்கள் வரும் நிலையில் அந்தக் காவல் நிலையங்களுக்கு நீங்களே நேரில் சென்று ஆய்வு செய்ய வேண்டும். காரணத்தைக் கண்டறிந்து அதனுடைய பிரச்சினையைப் புரிந்து, அதனை முழுமையாகத் தடுத்து, முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அரசு வழக்கறிஞர்கள், அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள், உதவி இயக்குநர்/ இணை இயக்குநர், குற்ற வழக்குகள் தொடர்வுத் துறை உள்ளிட்ட சட்ட அலுவலர்களுடன் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ள இனங்கள் குறித்து ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்ய வேண்டும். ∴போக்சோ வழக்குகளில் தடய அறிவியல் துறையின் ஆய்வறிக்கை மிக முக்கிய ஆதாரம் என்பதால் அதனை விரைந்து பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- காவல்துறைத் துணைத் தலைவர்கள் (DIG) மாதத்திற்கு ஒருமுறையும், மண்டல காவல்துறைத் தலைவர்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையும் அனைத்து வழக்குகளின் நிலை குறித்தும் ஆய்வு செய்ய வேண்டும்.
- நிலுவையில் உள்ள அனைத்துத் பிடியாணைகளையும் நிறைவேற்றிச் சட்டம் ஒழுங்கிற்குக் குந்தகம் விளைவிப்போரைக் கைது செய்து, தேவைப்பட்டால், பொது அமைதியை நிலைநாட்ட குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- குற்றவாளிகளுக்கு விரைவில் தண்டனைப் பெற்றுத் தந்தால் மட்டுமே பாதிக்கப்பட்டவர்களுக்குச் சட்ட நடவடிக்கைகள் மீது ஒரு நம்பிக்கை ஏற்படும். ஆகையால், காவல்துறை ஆணையர் / மாவட்டக் கண்காணிப்பாளர்கள் இதனை மாதந்தோறும் ஆய்வு செய்து, அரசுக்கு அறிக்கையை அனுப்ப வேண்டும்.
- நிலுவையில் உள்ள அனைத்து மனுக்கள், விசாரணை அதனுடைய இனங்கள், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டிய இனங்கள் ஆகியவற்றைக் காவல் நிலையங்களுக்கே சென்று ஆய்வு செய்வதோடு, அதன் தொடர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.
- கடந்த இரண்டரை ஆண்டுகளில் பெரிய அளவில் அசம்பாவித சம்பவங்கள்

ஏதுமின்றிச் சட்டம் ஒழுங்கு நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

- சாதிமத பூசல்கள் சிறிய அளவில் ஏற்படும் நிலையிலேயே கண்டறியப்பட்டு, முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்.

சட்டம் – ஒழுங்கு, சாதி உணர்வுகளைத் தூண்டக்கூடிய பிரச்சினைகளில் கவனமுடன், மாவட்ட நிருவாகத்திற்குக் கீழான அனைத்துத் துறைகளுடனும் ஒருங்கிணைந்து சுமூகமான முறையில் தீர்வு காண வேண்டும்.

- அடுத்து வரும் ஏழு, எட்டு மாதங்கள் அதிக கவனத்துடன் இருக்க வேண்டிய காலம். நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்தக் காலகட்டத்தில் காவலர் முதல் காவல்துறை உயரதிகாரிகள் வரை மிக எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் செயல்பட வேண்டும்.

- சமூக ஊடகங்களின் நிகழ்வுகளையும் கண்காணித்து வரவேண்டும்.

- அமைதி, சட்டம், ஒழுங்குகளை நிலைநாட்ட உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

இக்கூட்டத்தில், விவாதிக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள், அளவுகோல்களின் அடிப்படையில் நீங்கள் ஒவ்வொருவரும், தங்கள் பொறுப்பினை உணர்ந்து, உங்களுடைய மாவட்டத்திற்குச் சிறந்த தலைமையாகச் செயல்படுவீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

தங்கள் மாவட்டம் / மாநகரத்தைப் பாதுகாப்பானதாகவும், அமைதியானதாகவும் பாதுகாத்து நமது அரசிற்கு நற்பெயரை ஈட்டித் தாருங்கள் என்று கேட்டு என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

படமும் / செய்தியும்

மகாகவி பாரதியார் அவர்களின் நினைவு நாள்

மகாகவி பாரதியாரின் நினைவு நாளான, மகாகவி நாளையொட்டி 11.09.2023 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள மகாகவி பாரதியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த. வேலு, துணை மேயர் திரு. மு. மகேஷ் குமார், செய்தித்துறை இயக்குநர் திரு. த. மோகன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

ஏழை, எளிய மக்களுக்கு நலம்தரும் திட்டங்களில் எந்தத்தொய்வும், தாமதமும் இன்றிப் பணியாற்றுங்கள் என்பதுதான் எனது அன்புக் கட்டளை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 04.10.2023 அன்று தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் இரண்டாவது நாளாக நடைபெற்ற **மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில்** ஆற்றிய நிறைவுரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான மாலை வணக்கம்.

நேற்று தொடங்கிய இந்த மாநாட்டினுடைய இரண்டாம் நாளாகிய இன்று நாம் பல்வேறு துறைகளைச் சார்ந்த வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து நல்லதொரு பயனுள்ள கலந்தாய்வினை மேற்கொண்டோம்.

கொரோனா பெருந்தொற்று, கனமழை போன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்து மீண்டு, அதற்குப் பிறகு நமக்குக் கிடைத்த ஒன்றரை ஆண்டு காலத்தில், சிறப்பான திட்டமிடல், செயலாக்கம், நிதி மேலாண்மையின் மூலமாக இன்றைக்கு மாநிலத்தின் பொருளாதாரத்தைச் சரியான வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறோம். இந்தச் சவாலான பணியில் நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு வருவதை நான் நன்றி உணர்வோடு இங்கே நினைவுகூர விரும்புகிறேன்.

நமது அரசு, சிறந்ததொரு நிருவாகத்தை மக்களுக்கு வழங்கிட நிருவாக ரீதியில் எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். நமது நிருவாகக் கட்டமைப்பைமேலும்மேம்படுத்தவும்,தேவைப்படும் திருத்தங்களை மேற்கொள்ளவும், மக்கள் பயனடையவும், ஆக்கப்பூர்வமான கருத்துக்களைக் களப்பணியாற்றும் உங்களிடமிருந்து பெறுவதற்காகவும்தான், இதுபோன்ற மாநாடுகள் மிகவும் அவசியமாக அமைகின்றன.

எந்தவொரு திட்டத்தையும் முதலமைச்சரின் திட்டமாக, ஒரு கட்சி சார்ந்த திட்டமாகக் கருதாமல், அலுவலர்கள் அனைவரும் தங்கள் கனவுத் திட்டமாக, மக்களுக்கான திட்டமாக நினைத்து, அதை முழு ஈடுபாட்டோடு நிறைவேற்றினால்தான் அது மக்களுக்கு நன்மை பயக்கும். அப்போதுதான், அந்தத் திட்டத்தின் பயன் என்பது மிகப் பெரிய அளவில் இருக்கும்; உரிய முறையில் மக்களுக்கும் போய்ச் சேரும். அதனால்தான் திட்டங்களை அதிகாரிகளின் குழந்தைகள் என்பார்கள். அதிகாரிகள் நினைத்தால் அவை வளரும்; அதிகாரிகள் புறக்கணித்தால் அது மெலியும். அதிகாரிகள் என்பவர்கள் தனி மனிதர்களாக இருக்க முடியாது; செயல்படவும் முடியாது. அவர்கள் அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக இருந்து சொந்த விருப்பு வெறுப்புகளை மறந்து செயல்பட வேண்டும். அத்தகைய காலம்தான் பொற்காலமாக அமையும். அதுவே தலைசிறந்த ஆட்சியாகவும் அமையும்.

மாவட்ட ஆட்சியர்களின் மிக முக்கியமான பங்களிப்பு என்பது, அவர் எவ்வாறு பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து, நிருவாகத்தைக் கொண்டு செல்கிறார் என்பதில்தான் உள்ளது. நீங்கள்தான் மாவட்ட நிருவாகத்தின் தலைவர். உங்களால்தான் மாவட்டத்தில் இயங்கும் அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைக்க இயலும். அதனை நீங்கள் திறம்படச் செய்து, அரசுத் திட்டங்களின் மூலம் மக்கள் முழுப் பயனையும் பெறச் செய்ய வேண்டும்.

திட்டங்களை வகுக்கவும், அவற்றை நிறைவேற்ற உரிய வழிமுறைகளைச் சொல்லவும், துறைசாரா வல்லுநர் குழுக்களும் அவ்வப்போது அமைக்கப்பட்டு, ஆலோசனைகள் பெறப்பட்டு வருகின்றன. அதேபோல், மாநிலக் கொள்கை வளர்ச்சிக் குழுவும், பல்வேறு ஆலோசனைகளின் மூலமாக அரசை வழிநடத்திட உதவி வருகிறது.

அந்த வகையில், நமது அரசின் முன்னோடித் திட்டங்களில் ஏழை, எளிய மக்களிடையே, குறிப்பாக, மகளிரிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள திட்டம்தான் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம். சிறப்பு வாய்ந்த இந்தத் திட்டம், கடந்த மாதம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில்

ஏறக்குறைய ஒரு கோடியே அறுபத்து மூன்று இலட்சம் மகளிருக்கு, எந்தவிதச் சிரமுமின்றி, சீரிய முறையில் விண்ணப்பங்களை வழங்கி, பின்னர் பூர்த்தி செய்த படிவங்களைத் திரும்பப் பெற்றதே மாபெரும் சாதனையாகும்.

அதுமட்டுமல்ல: பெறப்பட்ட அந்த விண்ணப்பங்களைக் குறைந்த காலத்திற்குள் ஏற்கெனவே உள்ள தரவுகளுடன் கணினித் தொழில்நுட்ப உதவியுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டது. அதன்மூலம் தகுதியுள்ள சுமார் ஒரு கோடியே ஆறு இலட்சம் மகளிர் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுடைய வங்கிக் கணக்கில் உரிமைத் தொகை ரூபாய் ஆயிரத்தை வரவு வைத்தது அதைவிடப் மிகப் பெரிய சாதனையாகும். இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் உரிய பயனாளிகளை வெளிப்படையானத் தரவு சார்ந்த மேலாண்மை மூலம் தேர்ந்தெடுத்த முறை இந்திய வரலாற்றில், ஒரு முன்மாதிரியான முன்னெடுப்பாக விளங்கும். நமது மாநிலத்தின் நிருவாகத் திறமையை உலகிற்கே எடுத்துரைக்கும் மற்றுமொரு சான்றாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்ட முறை.

மகளிர் உரிமைத் தொகை பெற்ற மகளிரின் முகங்களிலே நீங்கள் கண்ட மலர்ச்சி, நிச்சயம் உங்களின் உழைப்பின் வெகுமதி. இத்திட்டம் குறிப்பிட்ட நாளில் வெற்றிகரமாகத் துவங்கிட சிறப்பானப் பங்களிப்பை வழங்கிய மாவட்ட ஆட்சியர்களாகிய உங்கள் ஒவ்வொருவரையும் நான் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில், இத்திட்டத்தில் விடுபட்டவர்கள் தற்போது விண்ணப்பம் அளித்து வருகிறார்கள். அவற்றையெல்லாம் முறையாக, விரைவாகப் பெற்று,ஆய்வுசெய்து,அவற்றின்மீதுவிதிகளின்படி தீர்வு காண வேண்டுமென்றும் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நமது அரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுநாள் வரை பல சிறப்பான முன்னோடித் திட்டங்களைத் தொடங்கிச் செயல்படுத்தி வருவதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். குறிப்பாக,

இந்தியாவுக்கே முன்னோடித் திட்டங்களாக, மகளிருக்கான விடியல் பயணம் – மக்களைத் தேடி மருத்துவம் – 'இல்லம் தேடிக் கல்வி' – 'இன்னுயிர் காப்போம் – நம்மை காக்கும் 48' – புதுமைப் பெண் – நான் முதல்வன் – முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – கலைஞரின் ஒருங்கிணைந்த அனைத்துக் கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம் – ஊட்டச்சத்தை உறுதி செய் போன்ற திட்டங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இதில் குறிப்பாக, மாணவர்களின் காலை உணவுத் திட்டத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந்தத் திட்டத்தில் உங்களது தனிப்பட்ட பங்களிப்பைப் பாராட்ட விரும்புகிறேன். இத்திட்டம் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுத்தப்பட நீங்கள் இதில் தொடர்ந்து தனிக் கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இதுபோன்ற நமது அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செம்மையாக, விரைந்து செயல்படுத்தி வரும் உங்கள் அனைவருக்கும் இந்தத் தருணத்தில் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், சில திட்டங்களில் அவ்வப்போது காணப்படும் சுணக்கத்தையும் நான் அடிக்கடி ஆய்வுக் கூட்டங்களின் வாயிலாக உங்களுக்குச் சுட்டிக்காட்டியும் இருக்கிறேன். அவற்றையெல்லாம் நீங்கள் மனதிலே நிலைநிறுத்தி, குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்குக் கால நிர்ணயம் என்ன என்பதை அறிந்து, அந்தக் காலத்திற்குள் அவற்றை முடித்திட வேண்டுமென்று இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் தொழில்துறையின் வளர்ச்சிக்காகப் பல கொள்கைகளையும் வெளியிட்டு, அந்நிய முதலீட்டாளர்களை நமது மாநிலத்திற்கு ஈர்த்து, அதன்மூலம் நமது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெருக்கிட அரசு அரும்பாடுபட்டு வருகிறது. ஒட்டுமொத்தமாக, நம்முடைய திட்டங்களின் மூலம் கல்வி, சமூகம், பொருளாதாரம் என்ற அனைத்துத் தளங்களிலும் நம்முடைய மாநிலம் தற்போது சரியான பாதையில் நடைபோட்டு வருகிறது.

நான் முன்னர் குறிப்பிட்ட திட்டங்களை மட்டுமல்ல; இந்த அரசின் மற்ற திட்டங்களின் பலன்கள் உரியவர்களை முழுமையாகச் சென்றடைய வேண்டுமானால், மாநில நிர்வாகம் மட்டுமல்ல, மாவட்ட நிர்வாகமும் தொய்வில்லாமல் தொடர்ந்து பணியாற்றிட வேண்டும். ஏழை, எளிய மக்களிடம் நேரடித் தொடர்பில் நீங்கள் இருக்க வேண்டும். திட்ட ஆய்வுக்கூட்டங்கள் நடத்துவது மட்டுமல்லாமல், அதன் பலன் எந்தளவு மக்களைச் சென்றடைந்துள்ளது; அதில் அவர்கள் சந்திக்கும்

சிக்கல்கள் என்ன என்பதை எல்லாம் நீங்கள் நேரடியாக அறிந்து, அவற்றை நீக்கிட வேண்டும்.

பல மாவட்டங்களில் நிலம் தொடர்பான பிரச்சினைகள், குறிப்பாக, நிலத்தை அளந்து காட்டுதல், பொது நிலத்தைப் பயன்படுத்துதல், கோயில் நிலங்கள் போன்ற பல விஷயங்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்ந்து காணப்படுகின்றன. சில சமயங்களில் அவை சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையாகவும் மாறி விடுகிறது. எனவே, நில அளவைத் துறை, வருவாய்த் துறை, உள்ளாட்சித் துறை மற்றும் காவல்துறை ஆகியவற்றை ஒருங்கிணைத்து, மாதந்தோறும் நிலம் தொடர்பான பிரச்சினைகளுக்கென மட்டுமே ஆய்வுக் கூட்டம் நடத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடிக்கடி அரசு மருத்துவமனைகளை ஆய்வு செய்யுங்கள். அங்கு நோயாளிகளுக்கு வழங்கப்படும் மருத்துவச் சேவைகளின் தரம் குறித்துக் கேட்டு அறியுங்கள். அதேபோல், மருத்துவர்களுக்கும் சில தேவைகள் இருக்கலாம்; அவற்றையும் அறிந்து தீர்வு காணுங்கள். கல்வியும், மருத்துவமும் இந்த அரசின் இரு முக்கியமான முன்னுரிமைப் பிரிவுகள் என்பதை உணர்ந்து பணியாற்றுங்கள்.

அடுத்தபடியாக, பல்வேறு அரசுத் திட்டங்கள் தொடர்பாக வழங்கப்படும் சுற்றறிக்கைகளின் முழு விவரங்கள் சில சமயங்களில் அனைத்துக் கிராம நிருவாக அலுவலர்களையும் சென்றடைவதில்லை என்று கேள்விப்பட்டேன். அரசு திட்டங்களின் விவரங்களை முழுமையாக அவர்களுக்குக் கொண்டு சேர்க்கும் வகையிலும், நடைமுறையில் காணும் சிக்கல்கள் குறித்தும் அறிந்துகொள்ள அவ்வப்போது கிராம நிருவாக அலுவலர்கள் அளவில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்துவதும் நல்ல பலனை அளிக்கும் எனக் கருதுகிறேன்.

“ஏழை, எளிய மக்களுக்கு நலம் தரும் திட்டங்களில் எந்தத் தொய்வும், தாமதமும் இன்றிப் பணியாற்றுங்கள்” என்பதுதான் எனது அன்புக் கட்டளை. அதனை நீங்கள் மனதிலே கல்வெட்டாகச் செதுக்கி வைத்துக் கொண்டு செயல்பட்டால் தமிழ்நாட்டு மக்களுக்கு அது வளர்ச்சியைத் தரும்; மகிழ்ச்சியைத் தரும்.

அரசு செயல்படுத்தும் சில திட்டங்களில் சிறுசிறு குறைகள் ஊடகங்களிலும், பொதுமக்கள் மத்தியிலும் சில சமயங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, மகளிருக்கான விடியல் பயணத்தில் பேருந்துகளின் எண்ணிக்கை, தரம், மருத்துவச் சேவைகளின் தரம், சாலைக் கட்டமைப்பு வசதிகளில், கழிவுநீர் கட்டமைப்புகளில் அரசிடமிருந்து பெற வேண்டிய அனுமதிகள், சான்றுகள் என்று குறிப்பிட்ட சில சேவைகளில் மக்களுடைய எதிர்பார்ப்பு முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

முதல்வரின் முகவரி துறையிலும், மேலும், நான் மாவட்டங்களில் மேற்கொள்ளும் பயணங்களிலும் தொடர்ந்து பெறப்படும் கோரிக்கை மனுக்களுக்கு முக்கியத்துவம் தாருங்கள். மேற்குறிப்பிட்ட அரசு சேவை குறைபாடுகள் எல்லாம் களையப்பட வேண்டுமென்றால், தலைமைச் செயலகத்தில் அமர்ந்து கொண்டு ஆணைகள் பிறப்பித்தால் மட்டும் போதாது. அந்த ஆணைகளின் செயலாக்கத்திற்கு மாவட்ட நிருவாகமும், முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். மாநில நிருவாகம் எப்படி மாவட்ட நிருவாகத்தைச் சார்ந்துள்ளதோ, அதுபோன்று மாவட்ட நிருவாகம் சிறப்பாகச் செயல்பட அனைத்து வட்டங்களிலும் / வட்டாரங்களிலும் உள்ள அலுவலர்கள் தங்கள் கடமைகளைச் சரிவர செய்திடல் வேண்டும். இந்த நோக்கத்தில்தான், “கள ஆய்வில் முதலமைச்சர்” என்ற திட்டத்தின் மூலம் மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று அங்குச் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கிய திட்டங்களைப் பற்றியும், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளைப் பற்றியும், நானே நேரடியாக ஆய்வு செய்து விவாதித்து வருகிறேன்.

ஒரு முக்கியமான சமூகப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அது, பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை. இது ஒரு சமூகக் குற்றம். இந்த அரசு பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான, எந்தவகையாக வன்முறையையும் சகித்துக் கொள்ளாது, கடும் நடவடிக்கை எடுக்கும் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இவ்வகைக் குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்கள் காவல் நிலையத்தில் புகார் மனு அளிக்கிறார்கள். இதன்மீது எடுக்கப்படும் தொடர் நடவடிக்கைகள் எந்த அளவிற்கு இருக்கின்றன என்பதை நீங்கள் மாதம் ஒருமுறை ஆய்வு செய்ய வேண்டும். இதற்கென ஒரு ஆய்வு நடைமுறையை உள்துறைச் செயலாளர் அவர்கள் வடிவமைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், காவல்துறைத் தலைவருக்கும் வழங்கி, அடுத்த மாதம் முதலே செயல்படுத்திடக் கேட்டுக் கொள்கிறேன்.

அரசின் பல்வேறு திட்டங்கள் எல்லா மாவட்டங்களுக்கும் பொதுவானதாக இருந்தாலும், சில மாவட்டங்களுக்கு, அம்மாவட்டங்களுக்குரிய சமூக, பொருளாதார சூழ்நிலைகளின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டிய சில பிரச்சினைகளும் இருக்கத்தான் செய்யும். அத்தகையபிரச்சினைகளை,அதற்கான தீர்வுகளை விவாதிக்கின்ற களமாக இம்மாநாடு உங்களுக்கு அமைந்திருக்கும் என்று நான் நம்புகிறேன்.

மாவட்ட நிருவாகத்தை வழிநடத்தும் பொறுப்பில் உள்ள நீங்கள், மக்களுக்கும், அரசுக்கும் பாலமாக இருக்க வேண்டும். வழக்கமான நடைமுறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, காலதாமதத்தைத் தவிர்க்கும் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதை உறுதி செய்யவேண்டும். சமீபத்தில், அரசுத் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கும்போது, அரசு அலுவலர்கள் தங்களைக் காண வரும் பொது மக்களை உட்கார வைத்து, அவர்கள் குறைகளைக் கேட்டறிய வேண்டும். அதிலேயே அவர்களுடைய பாதி குறை தீர்ந்த திருப்தி அவர்களுக்கு ஏற்படும் என்று நான் அப்போது குறிப்பிட்டிருந்தேன். அதையே உங்களுக்கும் இங்கே நான் சொல்ல விரும்புகின்றேன். இதனை நீங்கள் உங்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து சார்-நிலை அலுவலர்களுக்கும் அறிவுறுத்திட வேண்டும்.

மக்களாட்சித் தத்துவத்தின்படி, மக்கள்தான் நமது எஜமானர்கள். அவர்களுக்குச் சேவை ஆற்றிடத்தான் நாம் அனைவரும் பல்வேறு பொறுப்புகளை வகித்து வருகிறோம். இதனை நீங்கள் ஒருபோதும் மறந்திடக் கூடாது. ஒருசில மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர்களைப் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் தவிர, மற்ற நாட்களில் சந்திக்க இயலாத நிலை உள்ளது என்று அறிகிறேன். இது சரியல்ல. தலைமையகத்தில் நீங்கள் இருக்கும் நாட்களில் பொதுமக்களைச் சந்திப்பதற்குப் பார்வையாளர்கள் நேரம் என ஒதுக்கி, அவர்களைக் கட்டாயம் சந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலை விபத்துக்கள், இயற்கைப் பேரிடர்கள் ஏற்படும்போது நீங்களே களத்திற்குச் செல்ல வேண்டும். மக்களை மீட்டு நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு, அரசின் முகமாக; மக்களுக்கு உதவும் கரமாக நீங்கள் செயல்பட வேண்டும். நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வருவதால், தேர்தல் நடத்தை விதிமுறைகள் தொடங்குவதற்கு முன்னதாக உங்களது பணிகள் அனைத்தும் விரைந்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இவையனைத்தையும், எவ்வளவு விரைவாகவும், சிறப்பாகவும் நடத்திக் கொடுக்கிறோமோ, அந்த அளவுக்கு பேரும், மரியாதையும் கிடைக்கும். திட்டங்களின் சுணக்கமும் தவறு ஏற்படுமானால், அதன் மீதான விமர்சனம் எங்கள் மீதுதான் வரும். தேர்தல் என்பதால், மிக அதிகமாகவே வரும். உங்கள் கவனத்திற்கு வரும் புகாரை உடனடியாகக் களையுங்கள். அதைச் செய்தாலே விமர்சனங்கள் வராது. இதை மனதில் வைத்துச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் நீங்கள் தெரிவித்த ஆலோசனைகளும், கருத்துக்களும் அரசின் கவனத்தில் கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொண்டு, நிறைவாக, இந்தக் கூட்டத்தில் சில அறிவிப்புகளைத் தற்போது வெளியிட விரும்புகிறேன்.

முதலாவதாக, அரசுப் பள்ளி மாணவர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகளுக்குத் தற்போது மாணவர் ஒருவருக்கு மாதந்தோறும் உணவுக்காக வழங்கப்பட்டு வரும் தொகை ரூபாய் ஆயிரத்திலிருந்து, ரூபாய் ஆயிரத்து நானூறாக உயர்த்தி வழங்கப்படும். அதேபோல், அரசுக் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளில் தங்கிப் பயிலுவோருக்குத் தற்போது மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் ரூபாய் ஆயிரத்து நூறு என்பது இனி ஆயிரத்து ஐநூறு ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் 1,71,844 மாணவ, மாணவியர் பயன்பெறுவார்கள். இதனால் அரசுக்கு 68 கோடியே 77 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். இதனைக் கல்விக்காகச் செய்யும் ஒரு முதலீடு என்று கருதியே இந்த அரசு இதனை மேற்கொள்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, காவல்துறை அலுவலர்களுடன் நடைபெற்ற ஆலோசனைக்

கூட்டத்தில் பெறப்பட்ட கருத்துக்களின்படி, கள்ளச்சாராயத் தொழிலில் ஈடுபட்டு, மறுவாழ்வு பெறுவோர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 30 ஆயிரத்திலிருந்து, ரூபாய் 50 ஆயிரமாக வழங்கப்படும்.

மூன்றாவதாக, விசாரணைக் கைதிகளை நீதிமன்றங்களுக்கு அழைத்து வருவதில் பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளதால், அதனைக் களைய மாண்பமை உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெற்று வீடியோ-கான்பரன்சிங் முறையினைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

நான்காவதாக, ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் தங்கும் விடுதிகளைப் பழுதுநீக்கம் செய்து சீரமைக்கச் சிறப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் செயல்படுத்தப்படும்.

ஐந்தாவதாக, பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணிகளைத் துரிதப்படுத்த தேவையான அனுமதிகளை வழங்க தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு வழிகாட்டுக் குழு அமைக்கப்படும்.

இந்த அறிவிப்புகளோடு, சிறப்பாகப் பணியாற்றிவரும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், காவல்துறை கண்காணிப்பாளர்களுக்கும், மாவட்ட வன அலுவலர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 96ஆவது பிறந்த நாள்

படமும் \ செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 96ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 01.10.2023 அன்று, சென்னை, அடையாறு, சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் உள்ள சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

கடலூர் மாவட்டத்தில்
"அருட்பிரகாச வள்ளலார்" அவர்களின் பெயரில் புதிய பேருந்து நிலையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 05.10.2023 அன்று, இந்து சமய அறநிலையத்துறை சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற "வள்ளலார் – 200" ஓராண்டுத் தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில், கடலூர் மாவட்டம், வடலூரில் ரூ.99.90 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள வள்ளலார் சர்வதேச மையத்திற்கான ஆணையினை வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக்குழுவின் தலைவர் முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர் அவர்களிடம் வழங்கினார். மேலும், "வள்ளலாரின் இறை அனுபவங்கள்" என்ற நூலினை வெளியிட்டு, 52 வாரங்கள் முப்பெரும் விழாவினைச் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தியமைக்காகச் சிறப்புக்குழுவின் தலைவர், உறுப்பினர்களுக்குப் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்து, வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு, தமிழ்நாடு முழுவதும் 52 வாரங்கள் நடத்தப்பட்ட வள்ளலார் முப்பெரும் விழா நிகழ்ச்சிகளைத் தொகுத்து அமைக்கப்பட்ட சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை திறந்துவைத்து, அன்னதானத்தையும் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஆற்றிய உரை - 05.10.2023

அருட்பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் பிறந்த அக்டோபர் 5ஆம் நாள் இனி ஆண்டுதோறும் "தனிப்பெருங்கருணை நாள்" எனக் கடைபிடிக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார். அதனைத் தொடர்ந்து 2021ஆம் ஆண்டு முதல் அக்டோபர் 5ஆம் நாள் "தனிப்பெருங்கருணை நாளாகக்" கொண்டாடப்பட்டு வருகிறது.



2022-2023ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில், "உயிர்த்திரள் ஒன்றெனக்கூறித் தனிப்பெரும் கருணை ஆட்சி நடத்திய வள்ளல் பெருமானார் தருமசாலை துவக்கிய 156ஆவது ஆண்டு தொடக்கமும், 25.05.2022 வள்ளல் பெருமான் இவ்வுலகிற்கு வருவிக்க உற்ற 200ஆவது ஆண்டு தொடக்கமும், 05.10.2022 ஜோதி தரிசனம் காட்டுவித்த 152ஆவது ஆண்டும், 05.02.2023 அன்று வரவிருப்பதால் இம்மூன்று நிகழ்வுகளையும் இணைத்து அவரது 200ஆவது அவதார ஆண்டான அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை 52 வாரங்களுக்கு முக்கிய நகரங்களில் முப்பெரும் விழா எடுக்கப்படும். இதற்கென ஒரு சிறப்புக்குழு அமைக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, திருவருட்பிரகாச வள்ளலாரின் முப்பெரும்விழாவினைச்சிறப்புறநடத்திடும்வகையில் முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர் அவர்கள் தலைமையில் 14 உறுப்பினர்களைக் கொண்ட சிறப்புக்குழு அமைக்கப்பட்டு வள்ளலாரின் முப்பெரும் விழாவினை அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை, 52 வாரங்களுக்குத் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் சிறப்பாக நடத்திட செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

முதல் நிகழ்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று 05.10.2022 அன்று சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், வள்ளலார் முப்பெரும் விழாவினைத் தொடங்கி வைக்கும் வகையில், "வள்ளலார் – 200" இலச்சினை, தபால் உறை, சிறப்பு மலர் ஆகியவற்றை வெளியிட்டு, 52 வாரங்களுக்கான விழாக்களில் முதல் வார நிகழ்ச்சிகளையும், ஆண்டு முழுவதும் அன்னதானம் வழங்கும் நிகழ்வையும் தொடங்கி வைத்தார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 25.04.2023 அன்று, திருவருட்பிரகாச வள்ளலாரின் முப்பெரும் விழா, தொடர் அன்னதானத்தினைச் செயல்படுத்திடும் வகையில், தமிழ்நாடு அரசின் மானியமாக ரூ.3.25 கோடிக்கான காசோலையைச் சிறப்புக் குழுவின் தலைவர் அவர்களிடம் வழங்கினார்.

தமிழ்நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் வள்ளலாரின் பெருமையைப் பறைசாற்றுகின்ற வகையில் 52 வாரங்கள் நடத்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்குப் பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கி, அன்னதானத்தையும் தொடங்கி வைத்தனர்.

"வள்ளலார் – 200" ஓராண்டுத் தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், கடலூர் மாவட்டம், வடலூரில் ரூ.99.90 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள வள்ளலார் சர்வதேச மையத்திற்கான ஆணையினை வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுவின் தலைவர் அவர்களிடம் வழங்கினார். மேலும், "வள்ளலாரின் இறை அனுபவங்கள்" என்ற நூலினை வெளியிட்டு, 52 வாரங்கள் முப்பெரும் விழாவினைச் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தியமைக்காக வள்ளலார்

முப்பெரும் விழாச் சிறப்புக்குழுவின் தலைவர் முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர், உறுப்பினர்கள் முதுமுனைவர் சத்தியவேல் முருகனார், திரு.கே.என். உமாபதி, திரு. சிவ மெய்யப்பன், முனைவர் உலகநாயகி, திரு.மெய். அருள்நந்தி சிவம், திரு.கே.உமாபதி, திரு.என்.இளங்கோ, திரு.எம்.கலைச்செல்வன், திரு.ஜி.சந்திரகாசு ஆகியோருக்குப் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசுகளை வழங்கி, சிறப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து, வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு, தமிழ்நாடு முழுவதும் 52 வாரங்கள் நடத்தப்பட்ட வள்ளலார் முப்பெரும் விழா நிகழ்ச்சிகளைத் தொகுத்து அமைக்கப்பட்ட சிறப்புப் புகைப்படக் கண்காட்சியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து, அன்னதானத்தைத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"ஒத்தாரும், உயர்ந்தாரும், தாழ்ந்தாரும் எவரும் ஒருமை உளராகி உலகியல் நடத்தல் வேண்டும்" என்பதை அறநெறியாகக்கொண்டு வாழ்ந்து காட்டிய, அருட்திரு வள்ளலார் அவர்களின் 200ஆவது ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில், "தனிப்பெரும் கருணை நாளில்" இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த இனிய விழாவில் கலந்துகொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

பொதுவாக நூற்றாண்டு விழா என்றாலோ, பிறந்தநாள் விழாக்கள் என்றாலோ, அந்தக் குறிப்பிட்ட நாளில் மட்டுமே கொண்டாடுவார்கள். ஆனால் 'செயல்பாபு' என்று என்னால் அன்போடு அழைக்கப்படக்கூடிய மாண்புமிகு அமைச்சர் சேகர்பாபு அவர்களோ, மாதம் முழுவதும், ஆண்டு முழுவதும் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது நூற்றாண்டு விழாவை நாள்தோறும் நடத்திக் கொண்டு இருக்கிறார். மாதந்தோறும் விழாக்கள் நடத்தினால்தான் அவருக்கு திருப்தி!

ஏதோ கணக்குக்காக, கடமைக்காக அல்ல; எதையும் உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் நடத்துவார். அவரிடம் எந்தப் பணியை ஒப்படைத்தாலும், உள்ளார்ந்த ஈடுபாட்டுடன், மற்றவர்களைவிட வித்தியாசம் தெரிவது போல நடத்திக் காட்டுவார். அதற்கு எடுத்துக்காட்டுத்தான் இந்த விழா!

தந்தைப் பெரியார் பிறந்தநாளைச் சமூகநீதி நாளாகவும், அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளைச்

சமத்துவ நாளாகவும் அறிவித்த நமது திராவிட மாடல் அரசு, அருட்பிரகாச வள்ளலார் அவர்களின் பிறந்தநாளை தனிப்பெரும் கருணை நாளாக அறிவித்தது. வள்ளலார் பிறந்து 200 ஆண்டுகள், அவர் தொடங்கிய தருமச் சாலைக்கு 156 ஆண்டுகள், அவர் ஏற்றிய தீபத்துக்கு 152 ஆண்டுகள் ஆகியவற்றை இணைத்து முப்பெரும் விழாவாக, கடந்த ஆண்டு அக்டோபர் 5ஆம் நாள் கொண்டாடினோம்.

அந்த விழாவில் கலந்துகொண்டு, 'வள்ளலார் - 200' விழாவுக்கான இலச்சினையை வெளியிட்டோம். அஞ்சல் உறை, சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. ஆண்டுதோறும், அன்னதானம் வழங்குவதற்கான நிகழ்ச்சியையும் நான் அன்றைக்குத் தொடங்கி வைத்தேன். அதற்காக ரூ.3.25 கோடிக்கான காசோலையும் வழங்கப்பட்டது. அது ஒருநாள் விழாவாக மட்டும் நடத்தி முடித்துவிடவில்லை. ஆண்டு முழுவதும் நடைபெறும் என்று அமைச்சர் திரு.சேகர்பாபு அறிவித்தார். ஆண்டு முழுவதும் எப்படி நடத்துவார்கள் என்பதை அறிய நானும் ஆர்வமாக இருந்தேன். அந்தப் பட்டியலை வாங்கிப் பார்த்த பிறகுதான் எனக்கே மலைப்பாக இருந்தது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல், இந்த ஆண்டு அக்டோபர் மாதம் வரையிலான 52 வாரங்களும், தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் முப்பெரும் விழா நடத்த முடிவு செய்யப்பட்டது. இதற்காக முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர் தலைமையில் 14 உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இவர்களது ஆலோசனைப்படி 52 வாரங்களும் நிகழ்ச்சிகள் நடந்து முடிந்திருக்கின்றன.

சென்னையில், நான் கலந்துகொண்டது முதல் நிகழ்ச்சி. இதன் தொடர்ச்சியாக 50 வாரங்களாக 50 நகரங்களில் வள்ளலார் – முப்பெரும் விழா நடைபெற்றுள்ளது. இப்போது இங்கு நான் கலந்து கொள்ளும் இந்த நிறைவு விழா, 52ஆவது நிகழ்ச்சி!

என்னைப் பொறுத்தவரையில் இது நிறைவு விழா மட்டுமல்ல: நிறைவான விழா!

வள்ளல் பெருமானாருக்கு நாம் ஆற்றவேண்டிய கடமையை, மரியாதையை நிறைவாக ஆற்றி இருக்கிறோம். தொடர் அன்னதானங்கள் 21 மண்டலங்களில் நடைபெற்றுள்ளன.

பசிப்பிணிப் போக்க அணையா அடுப்பை உருவாக்கிய அண்ணல் பெயரால் அரசின் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கு வள்ளலார் வாழ்க்கைத் தொடர்பாகக் கட்டுரை, பேச்சு, ஓவியப் போட்டிகள் நடத்தி, அதில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்குப் பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

அறிவுப் பசியையும், வயிற்றுப் பசியையும் போக்கும் விழாக்களாக இவை அமைந்துள்ளன. இதனை ஆர்வத்துடன் செய்து காட்டியுள்ள மாண்புமிகு அமைச்சர் திரு. சேகர்பாபு அவர்களையும், இந்து சமய அறநிலையத்துறை முதன்மைச்செயலாளர் திரு. மணிவாசன் அவர்களையும், சிறப்புப்பணி அலுவலர் திரு. குமரகுருபரன் அவர்களையும், ஆணையர் திரு. முரளீதரன் அவர்களையும், கூடுதல் ஆணையர் திரு. சங்கர் அவர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களையும் நான் பாராட்டுகிறேன். உங்கள் அனைவரின் சார்பில் அவர்களுக்கெல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் காலக்கட்டத்துக்குத் தேவையான மிகமுக்கியமான வழிகாட்டிதான் அருட்திரு வள்ளலார் அவர்கள். இறையியல் என்பது அவரவர் விருப்பம்! அவரவர் தனிப்பட்ட உரிமை! ஆனால் அந்த இறையியலை – ஆன்மீக உணர்வை ஒரு கூட்டம் அரசியலுக்குப் பயன்படுத்தி, அதன் மூலமாகக் குளிர்காயப் பார்க்கிறது.

அரசியல் வேறு – ஆன்மீகம் வேறு என்பதை பகுத்தறிந்து பார்க்கும் பகுத்தறிவாளர்கள்தான் தமிழ்நாட்டு மக்கள். அந்த மக்களைக் குழப்ப சிலர் முயற்சித்து வரும் காலத்தில், வள்ளலார் அவர்கள் நமக்கு அறிவுத் திறவுகோலாகக் காட்சி அளிக்கிறார்கள்.

சாதியும், மதமும், சமயமும், பொய்யென ஆதியில் உணர்த்தியவர் அருட்பெருஞ்சோதி இராமலிங்க வள்ளலார் அவர்கள், கண்மூடி வழக்கம் எல்லாம் மண்மூடிப் போக எனப் பாடியவர் அவர்.

"சாதியிலே, மதங்களிலே, சமய நெறிகளிலே, சாத்திரச் சந்தடிகளிலே, கோத்திரச் சண்டையிலே, ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர் அலைந்து அலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே" என்று பாடியவர் வள்ளலார் பெருமான் அவர்கள்.

அனைத்துயிரும் ஒன்று என்ற வள்ளல் பெருமானாரின் எண்ணத்தை இன்று நாம் விதைக்க வேண்டும். சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் 419ஆவது வாக்குறுதியாக 'வடலூரில் வள்ளலார் சர்வதேச மையம்' அமைக்கப்படும் என்று சொல்லி இருந்தோம்.

"சாதி, சமய நல்லிணக்கத்தைப் பேணும் வகையில் அருட்பிரகாச வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கப் போதனைகளைப் போற்றும் வகையில், இது அமையும்" என்று சொல்லப்பட்டது. அந்த மையத்தின் ஆணையினை உங்கள் முன்னால் வழங்கியிருக்கிறோம். விரைவாக அந்தப் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு மிகச் சிறப்பாக அது கட்டிமுடிக்கப்படும்.

சென்னையில் முதன்முதலாக வள்ளலார் நகரை உருவாக்கியவர் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள். நாம் ஆட்சிக்கு வந்ததும் வள்ளலார் பிறந்தநாளைத் தனிப்பெரும் கருணை நாளாக அறிவித்துக் கொண்டாடி வருகிறோம்.

வள்ளலாரின் அறிவு ஒளியில் இதுபோன்ற பிளவுசக்திகள் மங்கிப் போவார்கள். நாம் வள்ளலாரை உயர்த்திப் பிடிப்பது, சிலருக்குப் பிடிக்கவில்லை. பெரியாரையும் போற்றுகிறோம், வள்ளலாரையும் கொண்டாடுகிறார்களே! என்பதுதான் அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. திராவிட மாடல் அரசு என்று சொல்லிக் கொள்கிறார்கள். கோவில்கள் அனைத்தையும் பொன்போல போற்றிப் பாதுகாக்கிறார்களே – இவர்களை என்ன சொல்லிக் குற்றம் சாட்டுவது என்று சிலருக்குக் குழப்பமாக இருக்கிறது.

இரண்டு நாட்களுக்கு முன்பு, தெலங்கானா மாநிலத்தில் தேர்தல் பரப்புரை செய்ய வருகை தந்த மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் – தமிழ்நாட்டுக் கோவில்களைப் பற்றிப் பேசி இருக்கிறார்கள். அவர் மத்தியப் பிரதேசத்திற்குச் சென்று பேசினாலும் – அந்தமானில் பேசினாலும் – தெலங்கானாவில் பேசினாலும் – தமிழ்நாட்டைப் பற்றித்தான் பேசுகிறார். அவரால் மறக்க முடியாத மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது.

"தமிழ்நாட்டில் உள்ள இந்து கோவில்களை, தி.மு.க. அரசு கைப்பற்றி ஆக்கிரமித்துள்ளது. கோவில் சொத்துக்கள் மற்றும் வருமானங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகிறது" என்று பகிரங்கமாக அவர் பேசி இருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டை நான் திட்டவட்டமாக மறுக்கிறேன்.

மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு நான் எனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனை ஒரு தமிழ் நாளிதழ் தலைப்புச் செய்தியாக

வெளியிட்டுள்ளது. அந்த நாளிதழின் நிருவாகி ஒருவர், புகழ்பெற்ற திருக்கோவில் ஒன்றில் அறங்காவலர்களில் ஒருவராக இருக்கிறார். அப்படியானால் அவர், அந்தக் கோவிலை ஆக்கிரமித்துள்ளார் என்று அர்த்தமா? அதே நாளிதழில் கடந்த ஜூன் மாதத்தில் அறநிலையத் துறையின் சிறப்பான செயல்பாடு பற்றி ஒரு கட்டுரையும் வந்திருக்கிறது.

அந்தக் கட்டுரையை நான் படிக்கிறேன். அந்தக் கட்டுரைக்கு வைக்கப்பட்டிருக்கக்கூடிய தலைப்பு: "கோவில் உண்டியல் பணம் எங்கும் போகாது!" யூகப் பேச்சுக்களும், உண்மை நிலையும் அதில் அடங்கும். கோவில்களில் உண்டியல் வைக்கப்பட்ட காலம் முதல் இன்று வரை பக்தர்களின் காணிக்கைகள் பத்திரமாகத்தான் இருக்கின்றன. மிகுந்த முன்னெச்சரிக்கையுடனே கையாளப்படுகின்றன. காணிக்கை குறித்த பதிவேடுகள் எண்ணி முடிக்கப்பட்ட மறுநாளே அறநிலையத்துறை அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு – அங்குள்ள பதிவேடுகளில் ஏற்றப்படுகின்றன. அதிலிருந்து ஒரு நகல் தணிக்கைப் பிரிவுக்கும் அனுப்பப்படுகிறது. தனியார் நிறுவனங்களில் இல்லாத அளவுக்குக் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் கடைபிடிக்கப்படுகின்றன" இப்படிச் சொல்வது இந்த ஸ்டாலின் அல்ல, அந்த நாளிதழின் வெளியீட்டாளரே சொல்லி இருக்கிறார்.

இன்னொன்றையும் சொல்கிறார் அவர்... எந்த நாளிதழ் என்று பெயர் சொல்ல விரும்பவில்லை. உங்களுக்கே புரியும். அதில் என்ன சொல்கிறார் என்றால், "ஒரு சிலர் அவரவர் கற்பனைச் சிந்தனைக்கு ஏற்றாற்போல உண்டியல் காணிக்கைகள் இந்த அமைச்சருக்குப் பத்து சதவிகிதம் போகிறது – அந்த அமைச்சருக்கு 10 சதவிகிதம் போகிறது எனச் சொல்வது – அவர்களின் அறியாமையன்றி வேறில்லை" என்று சொல்வதும் இந்த ஸ்டாலின் அல்ல, அந்த நாளிதழின் வெளியீட்டாளரே சொல்லி இருக்கிறார்.

அதே நாளேட்டில்தான் பிரதமர் சொன்ன பொய்யை தலைப்புச் செய்தியாகப் போட்டிருக்கிறார்கள்.

பொறுப்பு வாய்ந்த இந்திய நாட்டின் பிரதமர் அவர்கள் தவறான அவதூறு செய்தியைச் சொல்வது சரியா? ஒரு மாநிலத்தின் செயல்பாடு குறித்து, இன்னொரு மாநிலத்தில் போய் பேசுவது முறையா? தர்மமா? தி.மு.க. ஆட்சிக்கு வந்தது முதல் கோவில்களை அரசு ஆக்கிரமித்தது போலவும், வருமானங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்படுவது போலவும் பொய்யான செய்தியை இந்திய நாட்டின் பிரதமர் கட்டமைக்க வேண்டிய அவசியம் என்ன? அவர் யாருக்காகப் பேசுகிறார்? யாருடைய குரலை எதிரொலிக்கிறார்? இந்த இரண்டு ஆண்டு காலத்தில் ரூ.3,500 கோடிக்கும் அதிகமான மதிப்பிலான கோவில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இது தவறா? சொல்லுங்கள் இது தவறா? 1,000 கோவில்களுக்குக் குடமுழுக்கு விழா நடத்தி இருக்கிறோம். இது தவறா?

1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான, வரலாற்றுச் சிறப்புமிக்க 112 திருக்கோயில்களைப் பழமை மாறாமல் சீர்செய்வதற்கும் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுத் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தவறா?

ஆதிதிராவிடர், பழங்குடியினர்கள் வசிக்கும் பகுதியிலுள்ள 1,250 திருக்கோயில்கள், 1,250 கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிகளையும் சேர்த்து இந்த நிதியாண்டில் மட்டும் 5,078 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இது தவறா?

எதைத் தவறு என்கிறார் பிரதமர்? பிரதமர் அவர்களின் பார்வையில்தான் தவறு இருக்கிறது. எங்களைப் பொறுத்தவரைக்கும், 'எல்லோர்க்கும் எல்லாம்' என்ற பொதுத் தன்மையுடனான ஆட்சியை நடத்தி வருகிறோம். கருணையுள்ள ஆட்சியை நடத்தி வருகிறோம். அதனால்தான் கருணை வடிவிலான வள்ளலாரைப் போற்றுகிறோம்.

அதற்கு அடையாளமாக வள்ளலார் - 200 நிகழ்ச்சியில் ஓர் அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன்.

கடலூர் மாவட்டத் தலைநகரில் 17 ஏக்கரில் அமைக்கப்பட இருக்கின்ற புதிய பேருந்து நிலையத்திற்கு "அருட்பிரகாச வள்ளலார்" அவர்களின் பெயர் சூட்டப்படும் என்பதை மகிழ்ச்சியோடும், பெருமையோடும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலார் வழியில், வாடிய உயிர்கள் அனைத்தையும் வாழ வைக்கும் ஆட்சியாகத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்றைக்கும் செயல்படும்! இது உறுதி!

உயர்தர வேலைவாய்ப்பு அளிக்கும் "உலகளாவிய தொழில்நுட்ப, புத்தாக்க மையம்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
திறந்து வைத்தார் – 05.10.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 05.10.2023 அன்று சென்னை, போரூரில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிட்டாச்சி குழுமத்தின் துணை நிறுவனமான ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தால், எரிசக்தித்துறையில் தனித்திறன் வாய்ந்த 2,500க்கும் மேற்பட்ட நபர்களுக்கு உயர்தர வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள உலகளாவிய தொழில்நுட்ப, புத்தாக்க மையத்தைத் (Global Technology & Innovation Centre) திறந்து வைத்தார்.

தமிழ்நாடு பல பொருளாதாரக் குறியீடுகளில் அகில இந்திய அளவில் முன்னணி மாநிலமாக விளங்கி வருகிறது. இந்நிலையைத் தக்க வைத்துக் கொள்ளவும், பெரும் அளவிலான முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கி அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுடன், மாநிலத்தில் பரவலான வளர்ச்சியை உறுதி செய்திடவும் தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு, வர்த்தகத்துறை பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

வணிக நடைமுறைச் சட்டம் / விதிகளில் பெருமளவிலான சீர்திருத்தங்களை மேற்கொண்டு, அனுமதிகள் பெறுவதை இலகுவாக்கியதன் விளைவாக, தொழில் செய்வதற்கு உகந்த மாநிலங்களின் தரவரிசையில், 14ஆம் இடத்திலிருந்த தமிழ்நாடு, வெகுவாக முன்னேறி தற்போது 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. குறிப்பிட்ட ஒரு சில துறைகளை மட்டும் சார்ந்து இல்லாமல், பல்வேறு துறைகள் குறிப்பாக வளர்ந்துவரும் துறைகளான மின் வாகனங்கள், மின்கலன்கள், பசுமை எரிசக்தி, வான்வெளி, பாதுகாப்பு போன்றவற்றில் அதிக முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது. முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதை ஊக்குவிப்பதற்கு, துறைவாரியாகக் கொள்கைகளை வெளியிட்டுள்ள தமிழ்நாடு அரசு, உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகள் கொண்ட தொழில் பூங்காக்களையும் (Sector Specific Policies) அமைத்து வருகிறது.

2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி அடைந்திட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கினை எய்துவதற்காக, உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தியதன் விளைவாக, இவ்வரசு பொறுப்பேற்றது முதல் இதுநாள் வரை, 4,15,282 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.2,97,196 கோடி மதிப்பிலான 241 முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

முதலீடுகளை ஈர்ப்பதற்கான முயற்சிகளின் அடுத்த கட்டமாக, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை 2024ஆம் ஆண்டு ஜனவரி 7, 8 ஆகிய தேதிகளில், சென்னையில் சிறப்பான முறையில் நடத்தி, பெருமளவிலான முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு, வர்த்தகத்துறை மேற்கொண்டு வருகின்றது.

ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் (M/s. Hitachi Energy India Limited)

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிட்டாச்சி குழுமம், உலகெங்கிலும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட துணை நிறுவனங்களைக்கொண்டஉலகளாவியஃபர்ச்சூன் (Global Fortune) 500 நிறுவனங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. அதன் துணை நிறுவனங்களில் ஒன்றான ஹிட்டாச்சி எனர்ஜி நிறுவனம், சுவிட்சர்லாந்தினைத் தனது தலைமையிடமாகக் கொண்டுள்ளது. இதன் துணை நிறுவனமான ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் முன்னதாக பிப்ரவரி 2023இல், தனது எரிசக்தி திட்டத்தினைச் சென்னையில் தொடங்கியுள்ளது.

தற்போது, இந்நிறுவனம், சென்னை, போரூரில் ஒரு உலகளாவிய தொழில்நுட்ப, புத்தாக்க மையத்தை அமைத்துள்ளது. 3 இலட்சம் சதுர அடி பரப்பளவு கொண்ட இந்தத் தொழில்நுட்ப, புத்தாக்க மையத்தில், சுமார் 50,000 சதுர அடியில் ஒரு பிரத்யேக ஆய்வகமும் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் எரிசக்தித்துறையில் முனைவர் பட்டம், முதுகலைப் பட்டம் பெற்ற 2,500 தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு உயர்தர வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் இந்த உலகளாவிய தொழில்நுட்ப, புத்தாக்க மையத்தைத் திறந்து வைத்தார். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் கனவுத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மாணவ, மாணவியர்களுக்கு அந்நிறுவனத்தில் உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்புக்கான பயிற்சி (Internship) பெறுவதற்கு அனுமதிக் கடிதங்களையும் வழங்கினார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், 30க்கும் மேற்பட்ட உலகளாவிய திறன் மையங்கள் (Global Capability Centres - GCCs) தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ளன. உலகளவில்

தமிழ்நாட்டின் போட்டித்தன்மையை வெகுவாக அதிகரிக்க இவை பெரிதும் உதவும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 05.10.2023 அன்று சென்னை, போரூரில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிட்டாச்சி குழுமத்தின் துணை நிறுவனமான ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் உலகளாவிய தொழில்நுட்ப, புத்தாக்க மையத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான காலை வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உலகில் ஃபார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகவும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட துணை நிறுவனங்களைக்கொண்ட குழுமமாகவும், பல்வேறு தொழில் உற்பத்தி மையங்களைக் கொண்டதுமான இந்த ஹிட்டாச்சி நிறுவனம், உலகப் புகழ்பெற்ற தொழில் நிறுவனங்களில் ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கிறது!

இந்த நிறுவனம், தனது எரிசக்தி உற்பத்தி திட்டத்தினைக் கடந்த பிப்ரவரி மாதம் தமிழ்நாட்டில் துவக்கியதன் தொடர்ச்சியாகத்தான் இந்த விழா அமைந்துள்ளது.

இந்தக் குழுமம் தனது உலகளாவிய தொழில்நுட்ப, புத்தாக்க மையத்தை தமிழ்நாட்டில், குறிப்பாகச் சென்னையில் துவக்க இருக்கும் செய்தியானது, தமிழ்நாட்டிற்கும், எங்கள் ஆட்சிக்கும், எனக்கும் பெருமை தருவதாக அமைந்திருக்கிறது. இதற்காக, உங்கள் குழுமத்திற்கும், ஹிட்டாச்சி எனர்ஜி நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பு அதிகாரிகளுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏழே மாத இடைவெளியில், தமிழ்நாட்டில் நீங்கள் துவங்கி இருப்பது, தமிழ்நாட்டில் நல்லாட்சி நடைபெறுவதற்கான அடையாளம். எங்கள் ஆட்சி மீதும், எங்கள் தமிழ்நாட்டின் மீதும் நீங்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு, என்னுடைய நன்றி! இந்த நம்பிக்கையை மேலும் வளர்க்க நாங்கள் விரும்புகிறோம். பெருமளவிலான முதலீடுகளை ஈர்க்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறோம். தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம், மாநிலத்தின் பொருளாதாரத்தைத் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல பொருளாதார வல்லுநர்களுடன் கலந்தாலோசனைகள் மேற்கொண்டு, எங்களது அரசு பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன.

முதலீடுகளை ஈர்க்கும் வகையில், உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளுடன் துறை சார்ந்த தொழில் பூங்காக்களை அமைத்து வருகிறோம். வளர்ந்து வரும் துறைகளில் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் துறை சார்ந்த கொள்கை அறிக்கைகளை வெளியிட்டு வருகிறோம்.

அந்த வகையில் மாநிலத்தில்,

- ஆராய்ச்சி, மேம்பாட்டுத் திட்டங்கள்,
- புத்தாக்கத் திட்டங்கள்,
- திறன் மேம்பாட்டு மையங்கள் ஆகிய திட்டங்களை பெருமளவில் ஈர்ப்பதற்காகத் திட்டங்கள் தீட்டினோம்.

இவ்வாறான செயல்பாடுகள் மூலம், இந்தத் துறையில் பெருமளவு முதலீடுகளை ஈர்ப்பதற்கான எங்கள் தரப்பு முயற்சியே இது. உலக அளவில் ஏற்பட்டு வரும் தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச்சிக்கு ஏற்ப, நமது தொழில்துறையும், மாற்றங்களை மேற்கொண்டு அதே வேகத்தில் பயணம் மேற்கொள்வது இன்றியமையாத ஒன்று. இதற்கான முயற்சிகளை ஊக்கப்படுத்தி, இந்தத் துறையில் முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்தில்தான், "தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கொள்கை - 2022" கடந்த ஆண்டு ஜூலை மாதம் என்னால் வெளியிடப்பட்டது.

இந்தக் கொள்கை வெளியிட்ட பிறகு, ஆராய்ச்சி, மேம்பாடு, புத்தாக்கம், புத்தொழில்கள், உலகளாவிய திறன் மேம்பாட்டு மையங்கள் போன்ற துறைகளில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. தொழில்துறை, கல்வியாளர்கள், புத்தாக்கம் மேற்கொள்வோர், புத்தொழில் நிறுவனங்களுக்கு இது மிகப்பெரும் வாய்ப்புகளை வழங்குகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாக, ஆராய்ச்சி, மேம்பாடு தொடர்பான உலகளாவிய திறன் மையங்கள் (குளோபல் கேப்பபிலிட்டி சென்டர்ஸ்) அதிகரித்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக, 30க்கும் மேற்பட்ட GCC-க்கள், தமது புதிய நிறுவனங்களையோ அல்லது விரிவாக்கத் திட்டங்களையோ நிறுவியுள்ளன. உற்பத்தித் துறையில், உலக அளவில் சிறந்து விளங்கும் தமிழ்நாடு, இவ்வாறான GCC, ஆராய்ச்சி & மேம்பாடு ஆகிய துறைகளில், நல்ல வளர்ச்சி பெற்று வருவது மாநிலத்திற்குப் பெருமை அளிக்கக்கூடிய ஒன்று. மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மிகப்பெரிய பயனை ஏற்படுத்தும். இந்த வேகத்தில் தமிழ்நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடைவதைக் காணும் போது, "2030ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் பொருளாதார மாநிலம்" என்ற எங்கள் இலக்கினை அடையும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்ற நம்பிக்கை எங்களுக்கு வளர்ந்து கொண்டே போகிறது.

தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழுவின் வழிகாட்டுதலுடன், மாநிலப் பொருளாதார, புள்ளியியல் துறை சார்பில் சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது கிடைத்த புள்ளிவிவரங்களை வைத்து, ஊடகங்கள் சிறப்புக் கட்டுரைகளை எழுதி இருந்தன.

தமிழ்நாடு வெகு விரைவில் 1 டிரில்லியன் பொருளாதாரத்தை அடைந்திடும் என்று ஊடகங்கள் கூறியுள்ளன எங்களுக்கு நம்பிக்கை அளிப்பதாக உள்ளது. நான் அரசுமுறைப் பயணமாக ஜப்பான் நாட்டிற்குச் சென்றபோது, எனக்குக் கிடைத்திட்ட வரவேற்பும், உற்சாகமும், நான் தமிழ்நாட்டில்தான் இருக்கிறேனோ என்று ஒரு நிமிடம் என்னை யோசிக்க வைத்தது. தமிழ்நாட்டிற்கும், ஜப்பானுக்குமான தொடர்புகள் மிக மிக அதிகம். தமிழ்நாட்டில், அதிக அளவில் ஜப்பானியர்கள் வசித்து வருகிறார்கள்.

இந்தியாவுக்குள், தமிழ்நாடு எப்போதுமே, ஜப்பானிய முதலீடுகளுக்கு உகந்த முன்னணி மாநிலமாக விளங்குகிறது. ஹிட்டாச்சி உட்பட, எண்ணற்ற ஜப்பான் நிறுவனங்கள் தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்து, தங்கள் திட்டங்களை இங்கு நிறுவியுள்ளார்கள். ஜப்பான் - இந்தியா முதலீடு மேம்பாட்டுக் கூட்டாண்மைத் திட்டத்தின்கீழ், இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள 12 தொழில் நகரியங்களில், 3 நகரியங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. அந்த வரிசையில், ஹிட்டாச்சி நிறுவனம் தனது தொழிற்சாலைகளைத் தமிழ்நாட்டில் நிறுவி வருவதோடு மட்டுமின்றி, அவற்றைப் பெருமளவில் விரிவாக்கம் மேற்கொண்டு வருவதும் மகிழ்ச்சி தருகிறது. சென்னையில் வரவிருக்கும் இதுபோன்ற உலகத் தரம் வாய்ந்த புத்தாக்கம், தொழில்நுட்ப மையங்கள், நமது உள்ளூர் திறன்களுக்கு உலக அளவில் எவ்வளவு வாய்ப்புகள் உள்ளன என்பதற்கான எடுத்துக்காட்டு. இந்த அதிநவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியதற்காக ஹிட்டாச்சி எரிசக்தி நிறுவனத்திற்கு என் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புத்தாக்க, தொழில்நுட்ப மையம் அவர்களின் உள்ளடக்கிய வளர்ச்சிப் பயணத்திற்கு உறுதுணையாக நின்று, அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு வழிவகுத்திட வேண்டும். அதன்மூலம், உங்களின் எதிர்கால திட்டங்களை, தமிழ்நாட்டில் மேலும், மேலும் நிறுவிட வேண்டும் என்றும் நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

3 இலட்சம் சதுர அடியில் அமைய உள்ள இந்த புத்தாக்க, தொழில்நுட்ப மையத்தில், 50,000 சதுர அடியில், சிறப்பு ஆய்வகமும் அமைத்துள்ளது. எரிசக்தித்துறையில், நிபுணத்துவம் பெற்ற, தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட உயர்தர வேலைவாய்ப்புகளை இந்தத் திட்டம் வழங்க உள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலமாக 2,500 பேர்களுக்கு உயர் வேலைவாய்ப்பு கிடைக்கும். தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்கள், தொழில் வல்லுநர்கள், இளம் தொழில் முனைவோருக்கு, அதிநவீன, மேம்பட்ட தொழில்நுட்பங்களில் பயிற்சி அளித்திட நாங்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

மேம்பட்ட உற்பத்தி முறைக்கான திறன்மிகு மையங்கள், தொழில் புத்தாக்க மையங்கள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தசோ சிஸ்டம், ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த சீமென்ஸ், அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான ஜி.இ.ஏவியேஷன் உடன் இணைந்து இந்த மையங்களைத் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. திருப்பெரும்புதூர், ஓசூரில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காக்களில் உலகத்தரம் வாய்ந்த தொழில் புத்தாக்க மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வசதி வாய்ப்புகளை அனைத்துத் தொழில் நிறுவனங்களும் பயன்படுத்தித் தங்களின் தொழில் வளர்ச்சியை மேம்படுத்திக் கொள்ளுங்கள்

என்று நான் கேட்டுக்கொள்கிறேன். உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை வருகிற ஜனவரி மாதம் சென்னையில் நடத்த இருக்கிறோம். உலகம் முழுவதும் இருந்து பல்வேறு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வர இருக்கின்றன. அதற்கு முன்னதாகவே ஹிட்டாச்சி நிறுவனம் இந்தத் தொழில்நுட்ப மையத்தைத் தொடங்கி இருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது.

பொதுவாக முதலீடுகளை ஈர்ப்பதற்கு நிறுவனங்களுக்கு – அரசு அழைப்பு விடுப்பது ஒரு நடைமுறை! ஆனால் ஹிட்டாச்சி போன்ற நிறுவனங்கள் தமிழ்நாட்டுடனும், தமிழ்நாடு அரசுடனும், நெருக்கமான நிறுவனமாக இருக்கின்ற காரணத்தால், அழைப்பு விடுக்கத் தேவையில்லை. உங்களைப்போன்ற நிறுவனங்களுடன் இணைந்துதான் முதலீட்டாளர் மாநாட்டை நாங்கள் நடத்தயிருக்கிறோம். உங்களைப்போன்ற பிற ஜப்பானிய தொழில் நிறுவனங்களையும் அந்த மாநாட்டில் பங்கேற்கச் செய்வீர்கள் என நான் எதிர்பார்க்கிறேன். உங்களது தொழில் முயற்சிகள் வெற்றிபெற என்னுடைய வாழ்த்துக்களை மீண்டும் ஒரு முறை தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

பேரறிஞர் அண்ணா அவர்களின் 115ஆவது பிறந்த நாள்

படமும் / செய்தியும்

பேரறிஞர் அண்ணா அவர்களின் 115ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில், 15.09.2023 அன்று சென்னை, அண்ணா சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின், திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் திரு. மு.மகேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. தாயகம் கவி, திரு. இ.பரந்தாமன், திரு. ஜட்ரீம் ஆர். மூர்த்தி, திரு. ஜே.ஜே.எபிநேசர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் மரு. இரா. செல்வராஜ், இ.ஆ.ப., பெருநகரச் சென்னை மாநகராட்சி பணிக்குழுத் தலைவர் திரு. நே. சிற்றரசு ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

ரூ.1 இலட்சம் மானியத்தில் பெண் ஓட்டுநர்கள், திருநங்கை ஓட்டுநர்களுக்குப் புதிய ஆட்டோ ரிக்ஷாக்கள் வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 05.10.2023 அன்று, சென்னை, தீவுத்திடலில் நடைபெற்ற விழாவில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின்கீழ்ச் செயல்படும் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள், தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 500 பெண் ஓட்டுநர்கள், திருநங்கை ஓட்டுநர்களுக்குப் புதிய ஆட்டோ ரிக்ஷா / தொழில்முறை டாக்சி வாகனம் வாங்குவதற்கு ரூ.1 இலட்சம் மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ், 148 பெண் ஓட்டுநர்கள், 2 திருநங்கை ஓட்டுநர்களுக்குப் புதிய ஆட்டோ ரிக்ஷாக்களை வழங்கும் விதமாகக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

2022-2023ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை மானியக் கோரிக்கையில் "தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற பெண் ஓட்டுநர்கள், சொந்தமாக ஆட்டோ ரிக்ஷா வாகனம் வாங்குவதை ஊக்குவிக்கவும், அவர்களுக்கான சுயதொழில் வாய்ப்பினை உருவாக்கவும், அவர்களின் வருமானம் ஈட்டும் திறன், வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் பொருட்டும், 500 பெண் ஓட்டுநர்களுக்குப் புதியதாக ஆட்டோ ரிக்ஷா வாகனம் வாங்கும் செலவினத்தில் தலா ரூ.1 இலட்சம் மானியமாக வழங்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் 10.07.2023 அன்று தலைமைச் செயலகத்தில், பத்துப் பெண் பயனாளிகளுக்குப் புதிய ஆட்டோ ரிக்ஷாக்களுக்கான பதிவு ஆவணங்கள், அனுமதி ஆவணங்கள் வழங்கப்பட்டு இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் புதிய ஆட்டோ ரிக்ஷாக்களை வழங்கினார் – 05.10.2023

மேலும், 15.08.2023 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திருநங்கை ஓட்டுநர்களுக்கும் இம்மானியத் திட்டத்தினை நீட்டித்து அறிவிப்பு வெளியிட்டார்.

அதன் தொடர்ச்சியாக, வாரியத்தில் பதிவு பெற்ற 500 பெண் ஓட்டுநர்களுக்கு மின்சாரம் / சி.என்.ஜி. / எல்.பி.ஜி. மூலம் இயங்கக்கூடிய ஆட்டோ ரிக்ஷா வாகனம் வாங்க தலா ரூ.1 இலட்சம் மானியம் வழங்கும் திட்டத்தினைத் தொழில்முறை டாக்சி வாகனம் வாங்குவதற்கும், திருநங்கை ஓட்டுநர்களுக்கும் நீட்டித்து 16.08.2023 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

அதன்படி, சென்னை, தீவுத்திடலில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 148 பெண் ஓட்டுநர்கள், 2 திருநங்கை ஓட்டுநர்களுக்குப் புதிய ஆட்டோ ரிக்ஷா / தொழில்முறை டாக்சி வாகனம் வாங்குவதற்கு ரூ.1 இலட்சம் மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ் வாங்கப்பட்ட புதிய ஆட்டோ ரிக்ஷா வாகனங்களை வழங்கும் விதமாகக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். மேலும், பெண் ஓட்டுநர்கள், திருநங்கை ஓட்டுநர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கினார்.

2023-2025ஆம் ஆண்டுகளில்

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் ரூ.17,140 கோடி மதிப்பீட்டில் 991 பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 07.10.2023 அன்று தலைமைச் செயலகத்தில், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் அனுமதி வழங்கிடும் உயர்நிலைக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 07.05.2022 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் விதி எண்.110இன் கீழ் "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தினை அறிவித்தார்கள். இது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் 22.08.2022 அன்று எழுதிய கடிதத்தில் அவர்களது தொகுதிகளில் நீண்டகாலமாக நிறைவேற்றப்படாத 10 முக்கிய கோரிக்கைகளைச் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டச் செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பான அரசாணை 28.09.2022 அன்று வெளியிடப்பட்டது. அதன்படி மாவட்ட ஆட்சியர் தலைமையிலான சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய மாவட்ட அளவிலான குழு சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளை ஆய்வு செய்து 1,896 பணிகளை அரசுக்குப் பரிந்துரை செய்தது.

பரிந்துரைக்கப்பட்ட பணிகள் சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டு அனைத்துத் துறைகளிடமிருந்தும் இது தொடர்பான விரிவான அறிக்கைகள் பெறப்பட்டன. அதன்படி, நடைமுறையில் உள்ள திட்டங்களுடன் இணைத்துச் செயல்படுத்தப்பட்டுவரும் பணிகள், 2023-2024ஆம் ஆண்டில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளும் பணிகள், என வகைப்படுத்தப்பட்டு அப்பணிகளுக்கு 08.09.2023 அன்று அரசு தலைமைச்செயலாளர் அவர்கள் தலைமையிலான பணிகளைத் தேர்வு செய்யும் குழு ஒப்புதல் அளித்தது.

இதனைத்தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின் அனுமதி வழங்கிடும் உயர்நிலைக்குழு கூட்டத்தில், இத்திட்டத்தின் கீழ், 2023-2024ஆம் ஆண்டில் 234 சட்டமன்றத் தொகுதிகளில் 788 பணிகள் ரூ.11,239 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளன. மேலும், 2024-2025ஆம் ஆண்டில் 203 பணிகள் ரூ.5,901 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

தமிழ்நாட்டு மக்களின் உணவுத் தேவைக்காக மட்டுமல்ல, மனித உயிர்களின் உயிர்த் தேவைக்கும் அவசியமானது காவிரி நீர்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
அரசினர் தனித் தீர்மானத்தை
முன்மொழிந்து ஆற்றிய
உரை – 09.10.2023

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !

தமிழ்நாட்டின் வாழ்வாதாரமாக இருக்கக்கூடிய காவிரி நதிநீர் உரிமையைக் காக்கும் கடமையை நோக்கிய நமது சிந்தனையை - எண்ணத்தை - இன்னும் சொன்னால் கட்டளையை இடக்கூடிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாளாக இது அமைந்திருக்கிறது.

ஆளும் கட்சியாக இருந்தாலும் - எதிர்க்கட்சியாக இருந்தாலும் - காவிரி நதிநீர் உரிமையைக் காப்பதில் திராவிட முன்னேற்றக்கழகம் என்றும், எப்போதும் எந்தச் சூழலிலும் உறுதியாக இருக்கும் என்ற உறுதிமொழியை இந்த மாமன்றத்திற்கு முதலில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு காவிரி டெல்டா உழவர்களுக்காக மேட்டூர் அணையானது சீராகத் திறந்து விடப்பட்டு வருகிறது. 2021ஆம் ஆண்டு மேட்டூர் அணை திறப்பதற்கான குறிப்பிட்ட ஜூன் 12ஆம் நாள் திறக்கப்பட்டது. 2022ஆம் ஆண்டில் முன்கூட்டியே மே மாதம் 24ஆம் நாள் மேட்டூர் அணை திறக்கப்பட்டது.

காவிரி டெல்டா பகுதியில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள வாய்க்கால்கள் திட்டமிடப்பட்டு முறையாகத் தூர்வாரப்பட்டதனால் காவிரி நீர் கடைமடை வரை சென்று பயிர்கள் செழித்தன. இதன்பயனாக, 2021-2022ஆம் ஆண்டில் 46.2 இலட்சம் டன் அளவிலும், 2022-2023ஆம் ஆண்டில் 45.9 இலட்சம் டன் அளவிலும் காவிரி பாசனப் பகுதியில் நெல் உற்பத்தி செய்யப்பட்டு மிகப் பெரிய சாதனையைப் படைத்தோம். உற்பத்தியும் பெருகியது. உற்பத்திப் பரப்பும் விரிவடைந்தது. இந்த சாதனையானது இந்த ஆண்டும் தொடர்ந்தது.

இந்த ஆண்டில், 1 ஜூன், 2023 அன்றைய நிலவரப்படி, மேட்டூர் அணையில் இருந்த 69.7 டி.எம்.சி. நீரளவையும், தென்மேற்குப் பருவமழை முன்னறிவிப்பையும் கருத்தில்கொண்டு, 12.06.2023 அன்று மேட்டூர் அணையைக் குறுவைப் பாசனத்திற்காகத் திறந்து வைத்தோம். மேட்டூர் அணையின் நீர் இருப்பு 50 டி.எம்.சி.க்கும் மேலாக உள்ளபோது, உழவர்கள் பருவத்தே பயிர் செய்ய ஏதுவாக, மேட்டூர் அணை ஜூன் 12ஆம் நாள் திறப்பது வழக்கமாக உள்ளது. அதனை முறைப்படித் திறந்து வைத்தோம்.

திறந்துவிடப்பட்ட நீரும் கடைமடைப் பகுதிகள் வரை சென்றடைந்தது. நமது வேளாண் பெருமக்களும் கடந்த ஆண்டுகளைப்போலவே குறுவைப் பயிரை இந்த ஆண்டும் சிறப்பாகப் பயிரிடுவதற்கான அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டார்கள்.

இத்தகைய நிலையில் செயற்கையான ஒரு நெருக்கடியைக் கர்நாடக மாநில அரசு உருவாக்கி வருகிறது. கர்நாடக மாநில அரசு நமக்கு வழங்க வேண்டிய உரிய தண்ணீரை இந்த மாதத்தில் திறந்து விடவில்லை. இது தொடர்பாக நாம் எடுத்த முயற்சிகளை இந்த மாமன்றத்தில் விரிவாகச் சொல்ல வேண்டியதை, என்னுடைய கடமையாக நான் கருதுகிறேன்.

கடந்த ஜூன் மாதத்தில் பில்லிகுண்டுலுவில் இருந்து நமக்கு கிடைக்க வேண்டிய 9.19 டி.எம்.சி.க்கு பதிலாக, 2.833 டி.எம்.சி மட்டுமே வரப்பெற்றோம்.

இதனைத்தொடர்ந்து 03.07.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்கள் மாண்புமிகு ஒன்றிய ஜல்சக்தி அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்தார்.

மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி மாதவாரியாக ஜூன், ஜூலை மாதத்தில் வழங்க வேண்டிய நீரினை உடனடியாக அளித்திட கர்நாடகாவிற்கு உத்தரவிடுமாறு வலியுறுத்தினார்கள். மீண்டும் 5ஆம் தேதியும் ஒன்றிய அமைச்சரைச் சந்தித்து மாண்புமிகு தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்.

தென்மேற்குப் பருவமழை பொய்த்துப் போனதால், 2023-2024 பாசன ஆண்டானது ஒரு பற்றாக்குறை ஆண்டு என்ற காரணத்தைக்கூறி, இதன் பின்னரும் கர்நாடகா நமக்கு அளிக்க வேண்டிய நீரினை அளிக்கவில்லை. இதனால் குறுவைப் பயிர் பாதிக்கப்படும் என்ற சூழ்நிலையில், 19.07.2023 அன்று மாண்புமிகு ஒன்றிய ஜல்சக்தி அமைச்சர் அவர்கள் இப்பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு, உச்சநீதிமன்ற உத்தரவின்படி மாதவாரியாகத் தமிழ்நாட்டிற்கு அளிக்க வேண்டிய நீரை அளிக்க கர்நாடகாவிற்கு உத்தரவிட காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை அறிவுறுத்துமாறு மாண்புமிகு தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

இதனைத்தொடர்ந்து, ஜூலை 20ஆம் தேதி அன்று மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் மாண்புமிகு ஒன்றிய ஜல்சக்தி அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து, இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வலியுறுத்தினார்கள். இதன் பின்னரும், கர்நாடக மாநில அரசு உச்சநீதிமன்ற உத்தரவைப் பின்பற்றவில்லை.

ஜூலை 27ஆம் தேதி அன்று, கர்நாடகாவின் 4 அணைகளின் மொத்தக் கொள்ளளவு 30 ஆண்டு சராசரியில் 84 விழுக்காடாகவும், அந்த அணைகளின் நீர்வரத்து 30 ஆண்டு சராசரியில் 51 விழுக்காடாகவும் இருந்த போதிலும், பில்லிகுண்டுலுவில் 13 விழுக்காடு மட்டுமே நீர் வரப்பெற்றது.

இதைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டிற்கு உடனடியாக நீர் வழங்குமாறு கர்நாடகாவிற்கு உத்தரவிடுமாறு காவிரி நீர் மேலாண்மை ஆணையத் தலைவரிடம் கோரப்பட்டது. தமிழ்நாடு அரசு மேற்கொண்ட இந்தத் தொடர் முயற்சிகளையடுத்து, ஜூலை 25 அன்று, கபினி அணையிலிருந்து வினாடிக்கு 11,000 கன அடி நீரினை அடுத்த 6 நாட்களுக்குத் திறக்குமாறு கர்நாடக மாநில அரசுக்கு உத்தரவிடப்பட்டது.

ஜூலை 31 அன்று நடைபெற்ற காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவின் 83ஆவது கூட்டத்தில் தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி கர்நாடகா அளிக்க வேண்டிய நீரை வழங்க உத்தரவிடுமாறு கோரியது. இருப்பினும், பில்லிகுண்டுலுவில் ஆகஸ்ட் 1 முதல் அடுத்த 7 நாட்களுக்கு வினாடிக்கு 10,000 கன அடி நீரினை மட்டுமே திறக்க கர்நாடகாவிற்கு உத்தரவு அளித்தது.

கர்நாடக அரசு நமக்கு வழங்க வேண்டிய நீரின் பற்றாக்குறையைச் சரிசெய்யுமாறு ஒன்றிய ஜல்சக்தி அமைச்சகத்திற்கு அறிவுறுத்திட ஆகஸ்ட்

4 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதினேன்.

இதனையடுத்து ஆகஸ்ட் 10 அன்று நடைபெற்ற காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவின் கூட்டத்தில், பில்லிகுண்டுலுவில் வினாடிக்கு 15,000 கனஅடி என்ற அளவில் ஆகஸ்ட் 11 முதல் அடுத்த 15 நாட்களுக்கு வழங்குமாறு கர்நாடகாவிற்கு உத்தரவிடப்பட்டது.

ஆகஸ்ட் 11 அன்று நடந்த கூட்டத்தில் 15 ஆயிரம் கன அடி என்பதை 10 ஆயிரம் கன அடியாக ஆணையமே குறைத்துக் கொண்டது. இதனை ஏற்காமல் தமிழ்நாடு அரசின் உறுப்பினர்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வெளிநடப்புச் செய்தார்கள்.

இதுதொடர்பாக உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர்களோடு கலந்தாலோசித்து, கர்நாடகா உடனடியாக 24,000 கனஅடி நீரை வழங்கவும், பற்றாக்குறையான 28.849 டி.எம்.சி நீரையும் வழங்கவும் உத்தரவிடுமாறு கோரி, ஆகஸ்ட் 14 அன்று தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் ஒரு மனுவினைத் தாக்கல் செய்தது. இவ்வழக்கினை விசாரித்த உச்சநீதிமன்றம், இது தொடர்பாக ஒரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு உத்தரவிட்டது.

இதனையடுத்து, ஆகஸ்ட் 15 அன்று நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில், வினாடிக்கு 5,000 கன அடி நீரை 15 நாட்களுக்கு வழங்க கர்நாடகாவிற்கு உத்தரவிடப்பட்டது.

இந்தக் கூட்டங்களில், ஏற்கெனவே நிலுவையிலுள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய கர்நாடகாவிற்கு உத்தரவிடுமாறு நாம் வலியுறுத்திய போதிலும், எவ்வித உத்தரவையும் ஆணையம் வழங்வில்லை.

எனவே, செப்டம்பர் 19 அன்று மாண்புமிகு தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்த நாடாளுமன்ற கட்சித் தலைவர்களுடன் மாண்புமிகு ஒன்றிய ஜல்சக்தி அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்துக் கோரிக்கை மனுவை அளித்தார். உடனடியாக 12,500 கனஅடி நீரை அடுத்த 15 நாட்களுக்கு வழங்க கர்நாடகாவிற்கு உத்தரவிடுமாறு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு அறிவுறுத்துமாறு கோரினார்கள். ஆனால், இந்த மனு மீது ஒன்றிய அரசு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனிடையே, செப்டம்பர் 19 அன்று கர்நாடகா அரசு உச்சநீதிமன்றத்தில் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் தனது 22, 23, 24ஆவது கூட்டங்களில் எடுத்த முடிவினை மீண்டும் மறுபரிசீலனை செய்ய உத்தரவிடுமாறு கோரி ஒரு மனு தாக்கல் செய்தது. இம்மனுக்களை விசாரித்த உச்சநீதிமன்றம் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் வழங்கிய உத்தரவுகளைப் பின்பற்றுமாறும் இவ்வழக்குடன் தொடர்புடைய அனைத்து மனுக்களை முடித்து வைப்பதாகவும் ஆணையிட்டது.

காவிரி நீர் மேலாண்மை ஆணையம் செப்டம்பர் 29 அன்று நடைபெற்ற தனது 25ஆவது கூட்டத்தில், பில்லிகுண்டுலுவில் வினாடிக்கு 3,000 கன அடி நீரை வழங்க கர்நாடகாவிற்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த அளவையும்விடக் குறைவாகவே கர்நாடகா தற்போது பில்லிகுண்டுலுவில் அளித்து வருவதால், தமிழ்நாடு அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத்துறை அவர்கள், தலைவர், காவிரி நீர் மேலாண்மை ஆணையம் அவர்களுக்கு, 06.10.2023 அன்று எழுதிய கடிதத்தில் கர்நாடகா ஆணையத்தின் உத்தரவைப் பின்பற்றாததைச் சுட்டிக்காட்டி, ஆணையம் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், காவிரி நீர் முறைப்படுத்தும் குழு 11.10.2023 அன்று அடுத்த கூட்டத்தை நடத்த உள்ளது. அதாவது, இன்னும் இரண்டு நாட்களில் நடத்த உள்ளது.

இக்கூட்டத்தில், பற்றாக்குறை ஆண்டாகிய 2023-2024இல், ஏற்கெனவே குழுவும், ஆணையமும், நிர்ணயித்துள்ள அளவில் கர்நாடகா அளிக்க வேண்டிய நீரளவில் உள்ள குறைபாட்டை ஈடுசெய்யவும், அடுத்த 10-15 நாட்களுக்கு அளிக்கவேண்டிய நீரையும் சேர்த்து வழங்க வலியுறுத்த உள்ளோம். மேலும், சட்ட வல்லுநர்களிடம் ஆலோசித்து, தேவைப்படின் தக்க சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

தமிழ்நாடு அரசு, காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டங்களிலும், காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவின் கூட்டங்களிலும், தொடர்ந்து வலுவாக வாதிட்டு வந்துள்ளதால், 2023-2024 பற்றாக்குறை ஆண்டாக இருக்கும் போதிலும் 01.06.2023 முதல் 03.10.2023 வரை பில்லிகுண்டுலுவில் 46.1 டி.எம்.சி. நீர் பெறப்பட்டுள்ளது.

இந்தப் பாசன ஆண்டு பற்றாக்குறை ஆண்டாக இருந்துவரும் நிலையில், 05.10.2023 வரை, 90.25 டி.எம்.சி. நீர் மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காகத் திறந்து விடப்பட்டுள்ளது. இதன் மூலம், காவிரி டெல்டாவில் 6 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை, சம்பா சாகுபடிக்களுக்காக, முறைப்பாசனம்- Turn system-படி நீர்ப் பங்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் எஞ்சியுள்ள நாட்களுக்கு நாம் நமக்கு உரிய நீரைப் பெற்று, குறுவைப் பயிரையும், அடுத்து நடவு

செய்யப்பட உள்ள சம்பாப் பயிரையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் உள்ளது.

எனவே, நமது வேளாண், பொதுமக்களின் நலன் காக்க ஒன்றிய அரசை வலியுறுத்திப் பின்வரும் தீர்மானத்தை இந்தப் பேரவை நிறைவேற்ற வேண்டும் என்று கோருகின்றேன். தமிழ்நாட்டு மக்களின் உணவுத் தேவைக்காக மட்டுமல்ல - மனித உயிர்களின் உயிர்த் தேவைக்கும் அவசியமானது காவிரி நீர்!

அதனைத் தமிழ்நாட்டு மக்களுக்குப் பெற்றுத் தருவதில் எந்தச்சூழலிலும் விட்டுக்கொடுக்காமல் வாதிட்டுப் பெற்றுத் தருவோம்.

ஒன்றிய அரசானது, இதில் முறையாகச் செயல்பட்டு தமிழ்நாட்டு மக்களுக்குக் காவிரி நீரைப் பெற்றுத் தர வேண்டும். இதற்கான அனைத்துவித முயற்சிகளையும் தி.மு.க. அரசு தயங்காமல் செய்யும் என்று மாமன்ற உறுப்பினர்களுக்கு உறுதி அளிக்கிறேன். அதே உணர்வுடன் இந்தத் தீர்மானத்தை இப்பேரவையின் சார்பில் நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே, ஒரு தீர்மானம் வரையப்பட்டு அதன் நகல் மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள அரசினர் தனித்தீர்மானத்தின் வடிவத்தினைச் செம்மைப்படுத்தி, திருத்தப்பட்ட தீர்மானத்தினை நான் இப்போது முன்மொழிகிறேன்.

அரசினர் தனித் தீர்மானம்

"தமிழ்நாட்டின் விவசாயத்திற்கு அடித்தளமாக விளங்கும் காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட மாண்பமை உச்சநீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பில் வரையறுக்கப்பட்டுள்ளபடி தமிழ்நாட்டிற்குத் தண்ணீரைத் திறந்துவிடுமாறு கர்நாடக அரசிற்கு உத்தரவிட ஒன்றிய அரசை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது."

நான் முன்மொழிந்த மேற்காணும் திருத்தப்பட்ட தீர்மானத்தினை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக ஏற்று, நிறைவேற்றித் தருமாறு வேண்டிக் கேட்டு அமைகிறேன்.

உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 155ஆவது பிறந்த நாள்

படமும் \ செய்தியும்

உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 155ஆவது பிறந்த நாளையொட்டித் தமிழ்நாடு அரசின் சார்பில் 02.10.2023 அன்று சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகள் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **ஆர்.என். ரவி** அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களும் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

சிறுவணிகர்களுக்கான "புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டம்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் விதி 110இன்கீழ், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், வணிக வரி சமாதானத் திட்டம் தொடர்பாக அளித்த அறிக்கை - 10.10.2023

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள வணிகர் பெருமக்களுக்கு மற்றும் நிறுவனங்களுக்கும், வணிகவரித் துறைக்கும் இடையே உள்ள வரி நிலுவை, மேல்முறையீடுகள் குறித்த பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு நல்ல வாய்ப்பாகவும், சிறு வணிகர்களின் நலன் காத்திடுவதற்கான மேலும் ஒரு முன்னோடி நடவடிக்கையாகவும், இந்த அரசு செயல்படுத்த உள்ள 'புதிய வரி நிலுவைத்தொகை சமாதானத் திட்டம்' பற்றிய அறிவிப்பை 110 விதியின்கீழ் வெளியிட விரும்புகின்றேன்.

தமிழ்நாடு அரசுக்கு வணிகர்கள் செலுத்த வேண்டிய வரி நிலுவைத் தொகை தொடர்பாக 2 இலட்சத்து 11 ஆயிரத்து 607 கேட்பு வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவற்றில் சம்பந்தப்பட்ட வணிகர்கள், வணிக நிறுவனங்களின் எண்ணிக்கை 1,42,569. இவற்றில் நிலுவையாக உள்ள தொகை ரூ.25,000 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு மிக அதிக எண்ணிக்கையில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், வணிகவரித்துறையின் பணிச்சுமை அதிகரிப்பதோடு, நமது வணிகர்களும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். தமிழ்நாடு அரசுக்கு வரவேண்டிய வருவாயும் பெருமளவில் நிலுவையாக உள்ளது.

இவற்றில் பெரும்பான்மையான வழக்குகள் தமிழ்நாடு வணிகவரிச்சட்டம், தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச்சட்டம் ஆகியவற்றின் கீழ் நிலுவையில் உள்ள வழக்குகள். மேற்கூறிய இரு முக்கிய சட்டங்கள், பல இதர சட்டங்களையும் உள்ளடக்கி, கடந்த 01.07.2017 முதல் நாடு முழுமைக்கும் ஜி.எஸ்.டி (GST) சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது. இருந்தாலும், ஏற்கெனவே வழக்கத்திலிருந்த மேற்கூறிய வரிச்சட்டங்களின்கீழ் அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய வரி, அதன் மீதான வட்டி, அபராதம் ஆகியன இன்னமும் பல வணிகர்களின் பெயரில் நிலுவையில் இருந்து வருகின்றன.

இந்த நிலுவைத்தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் சலுகைகள் வழங்கப்பட்டு, இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வணிகர்கள் நீண்ட நாட்களாக முன்வைத்து வருகிறார்கள்.

இந்தக் கோரிக்கைகளை கவனமுடன் பரிசீலித்து, இத்தகைய பழைய நிலுவைத்தொகைகளை வசூலிப்பதில் ஒரு சமாதானத் திட்டத்தை அறிவித்து செயல்படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது. கடந்த ஆண்டுகளில் இந்த நிலுவைத் தொகைகள் குறித்துப் பல சமாதானத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு இருந்தாலும், புதியதோர் அணுகுமுறையோடும், கூடுதல் சலுகைகளோடும் இந்தத் திட்டம் இப்போது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ், வரி மதிப்பீட்டு ஆண்டில் ரூபாய் ஐம்பதாயிரத்திற்குக் குறைவாக வரி, வட்டி, அபராதத் தொகை செலுத்த வேண்டிய வணிகர்களுக்கு இந்நிலுவைத் தொகையானது முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்படும். ஒவ்வொரு வரி மதிப்பீட்டு ஆண்டிலும் ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு உட்பட்ட நிலுவை இனங்களுக்கு வரி செலுத்துவதிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படும்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் சிறு வணிகர்களுக்கு இவ்வாறு முழுமையாக வரி நிலுவைத் தள்ளுபடி செய்யப்படுவது இதுதான் முதல் முறை என்பதை நான் இங்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அரசின் இந்த முடிவால் 1,40,398 வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள 95,502 சிறு வணிகர்கள் தமது நிலுவைத்தொகை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்பட்டு பலனடைவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படி நிலுவைத்தொகை தள்ளுபடி செய்யப்பட்ட வணிகர்கள் தவிர இதர வணிகர்கள், நிறுவனங்கள் அனைவரும்,

- ரூபாய் ஐம்பதாயிரம் முதல் ரூபாய் பத்து இலட்சம் வரை நிலுவையில் உள்ளவர்கள்,
- ரூபாய் பத்து இலட்சம் முதல் ரூபாய் ஒரு கோடி வரை வரி நிலுவையில் உள்ளவர்கள்,
- ரூபாய் ஒரு கோடி முதல் ரூபாய் பத்து கோடி வரை நிலுவையில் உள்ளவர்கள்,
- ரூபாய் பத்து கோடிக்கு மேலாக நிலுவையில் உள்ளவர்கள் - என நான்கு வரம்புகளின்கீழ்க் கொண்டுவரப்படுவர்.

மேற்கூறிய நான்கு வரம்புகளில் முதல் வரம்பில் உள்ளவர்கள் மொத்த நிலுவைத் தொகையில் 20 விழுக்காட்டைக் கட்டி நிலுவை வழக்குகளில் இருந்து வெளிவரலாம். அல்லது நிலுவையில் உள்ள வணிகவரி, வட்டி, அபராதத் தொகையில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டுத் தொகையைக் கட்டி நிலுவை வழக்குகளில் இருந்து வெளிவரலாம்.

இதர மூன்று வரம்புகளில் உள்ள வணிகப் பெருமக்களும், நிலுவையில் உள்ள வணிகவரி, வட்டி, அபராதத் தொகையில் குறிப்பிட்ட விழுக்காட்டைக் கட்டினால் நிலுவை வழக்குகளில் இருந்து வெளிவரும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவர்களுள், வரி விதிப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்களும், வரி விதிப்பை ஏற்றுக் கொள்ளாமல் மேல் முறையீடு செய்து இருப்பவர்களுக்கும் எனத் தனித்தனியாக நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் மேலும் ஒரு முக்கியச் சலுகையாக,நிலுவைத் தொகையினை வணிகர்கள் கட்ட முன்வரும் நாள் வரை அவர்களது கணக்கில் ஏற்றப்பட ஏதுவான திரண்ட வட்டித் தொகையும் (Accrued Interest) முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் வணிகப் பெருமக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில் செயல்படுத்தப்பட இருக்கும் இந்தத் திட்டம் வரும் 16.10.2023 முதல் நடைமுறைக்கு வரும். நான்கு மாத காலம் நடைமுறையில் இருக்கும். அதாவது 2024ஆம் ஆண்டு பிப்ரவரி 15ஆம் தேதி வரை இந்தச் சமாதானத் திட்டம் நடைமுறையில் இருக்கும்.

அரசின் இத்தகைய முன்னோடி முயற்சியை முழுமையாக வணிகர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும், நிலுவையில் உள்ள வழக்குகளுக்குத் தீர்வு காண்பதோடு, தமிழ்நாடு அரசுக்குச் சேர வேண்டிய வருவாயையும் அளித்து, வணிகப் பெருமக்கள் மென்மேலும் தொழில் வளர்த்து வளம் பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

இஸ்லாமிய சிறைவாசிகளை சட்டரீதியாக உரிய வகையில் முன்விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்,
இஸ்லாமிய சிறைவாசிகளின் முன்விடுதலை
தொடர்பான சிறப்புக் கவன ஈர்ப்பிற்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்
அளித்த பதில் – 10.10.2023

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயுள் சிறைவாசிகளாகச் சிறையிலே அடைபட்டிருக்கக்கூடிய கைதிகளை விரைவில் விடுதலை செய்திட வேண்டுமென்ற ஒரு நல்லெண்ணத்தோடு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே இந்த அவையிலே நம்முடைய எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.எம்.எச்.ஜவாஹிருல்லா, திரு.கு.செல்வப்பெருந்தகை, திரு.சிந்தனைச்செல்வன், திரு.சின்னத்துரை, திரு.ராமச்சந்திரன், திரு.ஜி.கே. மணி, திரு.ஜெகன் மூர்த்தி, திரு.பூமிநாதன் ஆகிய 9 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்தக் கருத்துக்களுக்கு எந்தவித மாறுபாடுகளை, வேறுபாடுகளை நாங்கள் எடுத்துசொல்லத் தயாராக இல்லை. அவை அனைத்தையும் நாங்கள் முழுமனதோடு, இந்த அரசின் சார்பில் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்; காத்திருக்கிறோம்.

ஆயுள் சிறைவாசிகளின் முன்விடுதலை தொடர்பாக உரிய விளக்கங்களை இந்த மாமன்றத்துக்கு நான் முதலில் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டுச் சிறைவாசிகளில் பத்து ஆண்டுகள், இருபது ஆண்டுகள் தண்டனை முடித்த ஆயுள் தண்டனை சிறைவாசிகள், வயது முதிர்ந்த சிறைவாசிகள், பல்வேறு இணைநோய்கள் இருக்கக்கூடிய உடல்நலம் குன்றிய சிறைவாசிகள், தீராத நோயுற்ற, மனநலம் குன்றிய சிறைவாசிகள், மாற்றுத்திறனாளி சிறைவாசிகள் ஆகியோரின் நிலையை மனிதாபிமான அடிப்படையில் கருத்தில்கொண்டு ஆராய வேண்டுமென்பதற்காகத்தான், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் திரு.என். ஆதிநாதன் அவர்களின் தலைமையின்கீழ் 6 பேர் அடங்கிய ஒரு குழு 22.12.2021இல் இந்த அரசால் அமைக்கப்பட்டது.

உச்சநீதிமன்றத் தீர்ப்புகள், இதுதொடர்பாகத் தற்போது நடைமுறையில் உள்ள சட்டம், விதிகளின் அடிப்படையில், இவர்களின் வழக்குகளை ஆராய்ந்தும், அவர்களின் முன்விடுதலைக்கு உரிய பரிந்துரை வழங்க ஏதுவாகவும் இக்குழு அரசால் அமைக்கப்பட்டது. இந்தக்குழு தன்னுடைய அறிக்கையினை 28.10.2022 அன்று அரசுக்கு அளித்தது. அந்த அறிக்கையில் 264 ஆயுள்தண்டனை சிறைவாசிகள் மட்டுமே குழுவால் முன்விடுதலைக்கு அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டனர்.

அதன் அடிப்படையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 115ஆவது பிறந்த நாளினை முன்னிட்டு, “ஆயுள் தண்டனைச் சிறைவாசிகளை முன்விடுதலை செய்வதற்குப் பரிசீலனை செய்யும் பொருட்டு” 11.08.2023 அன்று முதற்கட்டமாகத் தகுதியுள்ள 49 ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் நேர்வுகள் அரசால் பரிசீலனை செய்யப்பட்டு, தொடர்புடைய கோப்புகள் 24.08.2023 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. அவர்களில் 20 சிறைவாசிகள் இஸ்லாமிய சிறைவாசிகள் ஆவார்கள். மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டவுடன், அனைத்துச் சிறைவாசிகளும் விடுதலை செய்யப்படுவார்கள் என்பதை இந்த மாமன்றத்துக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஓய்வு பெற்ற மாண்பமை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. ஆதிநாதன் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட மீதமுள்ள ஆயுள் தண்டனை சிறைக்கைதிகள் விடுதலை குறித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். சிறைக் கைதிகளின் முன்விடுதலை தொடர்பாக அரசின் சார்பாக மேலும் சில கருத்துக்களை இந்த அவையில் நான் முன்வைக்க விரும்புகிறேன்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு அரணாக விளங்கிய நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் ஆகியோரது வழியில் என்றென்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில், நான் 13.09.2021இல் அறிவித்தவாறு, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய 113ஆவது

பிறந்த நாளை முன்னிட்டு சிறையில் நீண்ட கால சிறைவாசம் அனுபவித்து வரும் ஆயுள் தண்டனைக் கைதிகளின் தண்டனையைக் குறைத்து நல்லெண்ணம் மற்றும் மனிதாபிமானம் அடிப்படையில் குறைத்து முன் விடுதலை செய்ய உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதேபோல், அறிவுரைக் கழக (Advisory Board) திட்டத்தின்கீழ் 14 ஆயுள் தண்டனைச் சிறைவாசிகளும், மருத்துவக் காரணங்கள், நீதிமன்ற ஆணைகளின்படி 15 ஆயுள்தண்டனை சிறைவாசிகளும், ஏற்கெனவே முன்விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அந்த வகையில், 566 ஆயுள் தண்டனைச் சிறைவாசிகளின் நேர்வுகள் பரிசீலனை செய்யப்பட்டு, 08.10.2023 வரை 335 ஆயுள் தண்டனைச் சிறைவாசிகள் முன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 9 பேர் இஸ்லாமிய சிறைவாசிகள் ஆவார்கள். "இஸ்லாமிய கைதிகள் யாருமே விடுதலை செய்யப்படவில்லை; அதற்கான முயற்சிகள் எடுக்கப்படவில்லை" என்ற தோற்றத்தைச் சிலர் ஏற்படுத்தப் பார்க்கிறார்கள். இந்த விஷயத்தில் சட்டரீதியான முறைப்படி தமிழ்நாடு அரசு உரிய வகையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை இந்த அவைக்கு நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த அக்கறையோடு இந்தப் பிரச்சினை குறித்து எடுத்துப் பேசினார். இன்றைக்கு இஸ்லாமிய சிறைவாசிகள் முன்விடுதலை பற்றி அ.தி.மு.க. பேசுவதால், நான் அவர்களைப் பார்த்து ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். நீங்கள் 10 ஆண்டுகாலம் ஆட்சியில் இருந்தபோது இந்த விஷயத்தில் கண்ணை மூடிக்கொண்டு இருந்ததற்கு என்ன காரணம்? அதை நான் இப்போது அறிய விரும்புகிறேன்.

தருமபுரியில் பேருந்தில் பயணித்த மாணவிகளை உயிரோடு பட்டப்பகலில் எரித்தவர்களை எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முன்விடுதலை செய்த உங்களுடைய ஆட்சியில், ஏன் இஸ்லாமிய சிறைவாசிகளை முன்விடுதலை செய்ய ஒரு துரும்பைக்கூட கிள்ளிப் போடவில்லை என்பதுதான் ஆணவத்தோடு அல்ல; அடக்கத்தோடு நான் கேட்க விரும்புகிற கேள்வி. ஆட்சியில் இருந்த போது இஸ்லாமிய சிறைவாசிகளின் விடுதலை பற்றித் துளியும் நடவடிக்கை எடுக்காமல், அதுமட்டுமல்ல; குடியுரிமைத் திருத்தச் சட்டம், தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு எல்லாவற்றையும் கண்மூடி ஆதரித்த அ.தி.மு.க., இப்போது இஸ்லாமிய சிறைவாசிகள் மீது காட்டக்கூடிய திடீர் பாசம் ஏன் என்று இங்கு இருக்கக்கூடிய அனைவருக்கும் தெரியும்; எங்களுக்கும் தெரியும். அதைவிட சிறுபான்மை சகோதர, சகோதரிகளுக்கு மிக நன்றாகவே தெரியும் என்பதை மாத்திரம் இங்கே பதிவு செய்து, இந்த விளக்கத்தோடு எனது உரையை நிறைவு செய்கிறேன்.

படமும் / செய்தியும்

தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் அவர்களின் 119ஆவது பிறந்த நாள்

தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் அவர்களின் 119ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், 27.09.2023 அன்று சென்னை, எழும்பூரில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, அருகில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

சென்னை, திரு.வி.க.நகரில் ரூ.6.27 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையம் புனரமைக்கும் பணி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 12.09.2023 அன்று, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தான்தோன்றி அம்மன் கோயில் தெருவில் ரூ.11.30 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்ட ஆனந்தன் பூங்காவைத் திறந்து வைத்து, ரூ.6.27 கோடி மதிப்பீட்டில் திரு.வி.க. நகர் பேருந்து நிலையம் புனரமைக்கும் பணி மற்றும் கொளத்தூர் பகுதியில் ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள 20 மறுசீரமைப்புப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எஸ்.ஆர்.பி. கோயில் (வடக்கு) பகுதியில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.6.27 கோடி மதிப்பீட்டில் பணியாளர்கள் அறைகள், முதலுதவி அறை, பயணிகள் காத்திருக்கும் அறை, கடைகள், கழிப்பறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தொடங்கி வைத்தார் – 12.09.2023

வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் புனரமைக்கப்படவுள்ள திரு.வி.க.நகர் பேருந்து நிலையப் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, திரு.வி.க.நகர் மண்டலம், தான்தோன்றி அம்மன் கோவில் தெருவில், மூலதன நிதியின்கீழ், ரூ.11.30 இலட்சம் செலவில் நடைபாதை வசதி, பசுமைப் புல்வெளி,

நீரூற்றுக்கு 20 HP மோட்டார், பெஞ்சுகள், மின் வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் புனரமைக்கப்பட்டுள்ள ஆனந்தன் பூங்காவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

பின்னர், திரு.வி.க. நகர் மண்டலம், பூம்புகார் நகர் 4ஆவது குறுக்குத் தெரு பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மூலதனப் பராமரிப்பு நிதியின்கீழ் ரூ.1.26 கோடி மதிப்பீட்டில், திரு.வி.க.நகர் 4ஆவது தெருவில் ஒருங்கிணைந்த குழந்தைகள் மையம், ஜெய்பீம் நகர் 1ஆவது தெருவில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம், தீட்டித்தோட்டம் 1ஆவது தெருவில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம், குருசாமி தெருவில் அமைந்துள்ள ஜார்ஜ் காலனி பூங்கா, சென்னை சதுக்கம், சென்னை 1ஆவது தெருவில் அமைந்துள்ள கென்னடி சதுக்கம் பூங்கா, பல்லவன் சாலையில் அமைந்துள்ள கே.கே.ஆர். அவென்யூ பூங்கா, ஜவஹர் நகர் 5ஆவது பிரதான சாலையில் அமைந்துள்ள மாநகராட்சிப் பூங்கா, மஹாவீர் நகரில் அமைந்துள்ள பூங்கா, அஞ்சுகம் நகர் 4ஆவது தெருவில் அமைந்துள்ள பூங்கா ஆகியவற்றைச் சீரமைக்கும் பணிகள்;

ராம் நகர் 2ஆவது பிரதான சாலையில் அமைந்துள்ள விளையாட்டுத் திடலில் நடைபாதை அமைத்தல், இதர மேம்படுத்தும் பணிகள், பூம்புகார் நகர் 4ஆவது தெருவில் அமைந்துள்ள பூங்காவிற்கு நடைபாதை நீட்டிப்புப் பணி, பல்லவன் சாலையில் அமைந்துள்ள தாங்கல் மயான பூமியில் LPG தகன மேடையாக மாற்றும் பணி, எஸ்.ஆர்.பி. கோவில் வடக்குத் தெருவில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் கல்யாண மண்டபத்தில் தரைத்தளத்தில் பாத்திரங்கள் கழுவும் அறை, இதர உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணி, சுப்பிரமணியபுரம் 2ஆவது தெருவில் உள்ள வார்டு அலுவலகத்தை மேம்படுத்தும் பணி, சீனிவாசா நகர் 3ஆவது தெருவில் அமைந்துள்ள சென்னை தொடக்கப்பள்ளி வளாகத்தில் பழுது பார்த்தல், மேம்படுத்தும் பணி, அஞ்சுகம் நகர் 18ஆவது தெருவில் அமைந்துள்ள அம்மா உணவகத்தைப் பழுது பார்த்து மேம்படுத்தும் பணி, ஹரிதாஸ் நகர் 1ஆவது தெருவில் அமைந்துள்ள தாமரைக் குளத்தைப் பழுது பார்த்து மேம்படுத்தும் பணி, காமராஜர் நகரில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை மேம்படுத்தும் பணி, நேர்மை நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள சுகாதார ஆய்வாளர் அலுவலகத்தை மேம்படுத்தும் பணி, எஸ்.ஆர்.பி. கோவில் வடக்குத் தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப் பள்ளியை மறுசீரமைக்கும் பணி ஆகிய 20 மறுசீரமைப்புப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

படமும்/செய்தியும்

மகளிர் பிரிவு கால்பந்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஊக்கத்தொகை

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஒடிசா மாநிலம், புவனேஸ்வரில் 20.09.2023 முதல் 30.09.2023 வரை நடைபெற்ற ஹீரோ ஜூனியர் தேசிய சாம்பியன்ஷிப் 17 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவு கால்பந்து ஆணையத்தின் மூலம் தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.22 இலட்சம் உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளைச் சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 05.10.2023 அன்று வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்குத் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு – 11.09.2023

தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்குத் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்பட வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்தது. இந்நிலையில் தேவேந்திர குல வேளாளர் கல்வியாளர் குழு, தேவேந்திரர் பண்பாட்டுக் கழகம், திரு.இம்மானுவேல் சேகரனாரின் மகள் திருமதி சூரிய சுந்தரி பிரபா ராணி, அன்னாரது பேரன் திரு.சக்கரவர்த்தி ஆகியோர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து இக்கோரிக்கையினை வலியுறுத்தினர்.

தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்கள் 1924ஆம் ஆண்டு அக்டோபர் 9 அன்று பிறந்தார். இவரது சொந்த ஊர் முதுகுளத்தூர் வட்டம், செல்லூர் கிராமம் ஆகும். இவர் 1942இல் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்துகொண்டு சிறைவாசம் சென்றார். மேலும் ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்காகவும் போராடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையில், தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் சமூகப் பங்களிப்பினைப் போற்றும் வகையில் அவரது பிறந்தநாள் நூற்றாண்டினையொட்டி அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்ட இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் சுமார் ரூ.3 கோடி மதிப்பீட்டில் திரு. இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்குத் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் தமிழ்நாடு அரசின் சார்பில் கட்டப்படும்.

படமும் / செய்தியும்

முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களின் 132ஆவது பிறந்த நாள்

முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களின் 132ஆவது பிறந்த நாளை முன்னிட்டுத் தமிழ்நாடு அரசின் சார்பில் 29.09.2023 அன்று, சென்னை தங்கசாலை, மணிக்கூண்டு அருகில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு முன்பாக அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர், துணை மேயர், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

சென்னை, கொளத்தூரில் ரூ.27.03 கோடி மதிப்பீட்டில் 162 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அடிக்கல் நாட்டினார் – 12.09.2023

இராஜாதோட்டம் திட்டப்பகுதியில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் பழைய கட்டடம்

இராஜாதோட்டம் திட்டப்பகுதியில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்படவுள்ள புதிய கட்டடம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 12.09.2023 அன்று, சென்னை, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராஜாதோட்டம் திட்டப் பகுதியில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ரூ.27.03 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 162 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புர ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வீட்டுவசதியினை ஏற்படுத்தித் தரும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது. நகர்ப்புர ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த

குடிநீர், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவ வசதி, திடக்கழிவு மேலாண்மை, பொது வெளியிடம் போன்ற வசதிகளுடன் வீட்டுவசதி ஏற்படுத்துவது அவசியம் என்று கருதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 01.09.2021 அன்று, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரினைத் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று பெயர் மாற்றம் செய்து ஆணையிட்டார். குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கொளத்தூர், இராஜாதோட்டம் திட்டப்பகுதியில் 162 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்

கொளத்தூர், இராஜாதோட்டம் திட்டப்பகுதியில் 1975ஆம் ஆண்டு 326 சதுர அடியில் தரை, 2 தளங்களுடன் கட்டப்பட்ட 84 குடியிருப்புகள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தது. அப்பழைய குடியிருப்புகளை அகற்றி ரூ.27.03 கோடி மதிப்பீட்டில் தூண் மற்றும் 9 தளங்களுடன் 162 புதிய குடியிருப்புகள் கட்டும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இப்புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளில், ஒவ்வொரு குடியிருப்புகளும் 410 சதுர அடிப் பரப்பளவில், பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையலறை, தனித்தனியே குளியலறை, கழிப்பறை ஆகிய வசதிகளுடன் கட்டப்படவுள்ளது. ஒவ்வொரு வீட்டிற்கும் மின்சார வசதி, குடிநீர் வசதி ஏற்படுத்தித் தரப்படவுள்ளது. இத்திட்டப்பகுதியில் இரண்டு மின்தூக்கிகள், மின்னாக்கி (Generator) வசதிகள், மழைநீர்க் கால்வாய்கள், தெரு விளக்குகள், கான்கீரிட் சாலைகள் போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்படவுள்ளன.

இங்குக் கட்டப்படும் குடியிருப்புகள் ஏற்கெனவே இருந்த 84 குடியிருப்புதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். மீதமுள்ள குடியிருப்புகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு வழங்கப்படும். ஒரு குடியிருப்பிற்கான கட்டுமானத் தொகை 17 இலட்சம் ரூபாயாகும். இக்குடியிருப்பிற்குத் தமிழ்நாடு அரசு மானியம் 7 இலட்சம் ரூபாயும், ஒன்றிய அரசு மானியம் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், ஏற்கெனவே இங்கு வசித்த மறுகட்டுமானப் பயனாளிகளின் நலன் கருதி மீதமுள்ள தொகையில், ரூ.7.67 இலட்சம் தமிழ்நாடு அரசே ஏற்றுப் பயனாளிகளின் பங்களிப்புத் தொகையை ரூ.83 ஆயிரம் என நிர்ணயித்து அரசு ஆணையிட்டுள்ளது.

மீதமுள்ள 78 குடியிருப்புகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு வழங்கப்படவுள்ளது. அவர்களுக்கு 7 இலட்சம் ரூபாயாக நிர்ணயிக்கப்பட்ட பயனாளிப் பங்களிப்புத் தொகையைத் தமிழ்நாடு அரசு கவனமுடன் பரிசீலித்து 2 இலட்சம் ரூபாயை குறைத்து 5 இலட்சம் ரூபாயாக நிர்ணயித்துள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் மறு குடியமர்வு செய்யவுள்ள குடியிருப்புதாரர்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையினை 8,000 ரூபாயிலிருந்து 24,000 ரூபாயாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உயர்த்தி வழங்க உத்தரவிட்டிருந்தார். அதன்படி, இராஜாதோட்டம் திட்டப்பகுதியில் மறுகுடியமர்வு செய்யப்படவுள்ள 84 குடியிருப்புதாரர்களுக்கு கருணைத் தொகையாக தலா ரூ.24 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.20.19 இலட்சத்திற்கான காசோலைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் 30.08.2022 அன்று வழங்கப்பட்டது.

இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை ரூ.1,583.41 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 15,505 அடுக்குமாடிக் குடியிருப்புகள் வீடற்ற ஏழை, எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

காவல்துறை அதிகாரிகளுக்கு காந்தியடிகள் காவலர் விருது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மதுவிலக்கு அமலாக்கப் பணியில் பாராட்டத்தக்கவகையில் பணியாற்றியமைக்காக திரு. கோ.சசாங்சாய், இ.கா.ப., காவல் கண்காணிப்பாளர், விழுப்புரம் மாவட்டம், திரு. ப.காசிவிஸ்வநாதன், காவல் துணைக் கண்காணிப்பாளர், மத்திய நுண்ணறிவுப்பிரிவு, தெற்கு, சென்னை, திரு. கா.மு.முனியசாமி, காவல் ஆய்வாளர், செங்குன்றம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு, ஆவடிக் காவல் ஆணையரகம், திரு. அ.பாண்டியன், காவல் உதவி ஆய்வாளர், மத்திய நுண்ணறிவுப் பிரிவு, மதுரை மண்டலம், திரு. ஜெ.ரங்கநாதன், தலைமைக் காவலர் 318, இராணிப்பேட்டை காவல் நிலையம், அயல்பணி மத்திய நுண்ணறிவுப் பிரிவு, இராணிப்பேட்டை ஆகியோருக்கு காந்தியடிகள் காவலர் விருது வழங்க உத்தரவிட்டுள்ளார். இவ்விருது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் நாள், குடியரசு தினத்தன்று வழங்கப்படும். இவ்விருதுடன், பரிசுத்தொகையாக ரூ.40,000 ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும்.

127 காவல்துறை பணியாளர்களுக்கு "அண்ணா பதக்கங்கள்"

தமிழ்நாட்டில் காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, சிறைத்துறை, ஊர்க்காவல் படை, விரல்ரேகைப் பிரிவு, தடய அறிவியல் துறைகளில் சிறப்பாகப் பணியாற்றிய அலுவலர்கள், பணியாளர்களை அங்கீகரிக்கும் வகையிலும், பணியில் ஈடுபாடு, அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததைப் பாராட்டும் வகையிலும், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15ஆம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு, காவல்துறையில் தலைமைக் காவலர் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான 100 பணியாளர்கள், அலுவலர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் தீயணைப்பு வீரர் முதல் மாவட்ட அலுவலர் வரையிலான 8 பணியாளர்கள், அலுவலர்களுக்கும், சிறைத் துறையில், முதல்நிலைச் சிறைக்காவலர் முதல் சிறை கண்காணிப்பாளர் வரையிலான 10 பணியாளர்கள், அலுவலர்களுக்கும், ஊர்க்காவல் படையில் ஊர்க்காவல் படைவீரர் முதல் படைத்தளபதி வரையிலான 4 ஊர்க்காவல் படை அலுவலர்களுக்கும், விரல்ரேகைப் பிரிவில் 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களுக்கும், தடய அறிவியல் துறைப் பிரிவில் 2 அலுவலர்கள் துணை இயக்குநர், அறிவியல் அலுவலர் ஆகியோருக்கும், அவர்களின் மெச்சத்தகுந்த பணியினை அங்கீகரிக்கும் வகையில் "மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் அண்ணா பதக்கங்கள்" வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஆணை – 14.09.2023

மேலும், சாயல்குடி காவல் சரக எல்லைக்குட்பட்ட பகுதியில், கூட்டுப் பலாத்காரம், கொள்ளைக் குற்றத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு தலைமறைவான குற்றவாளிகளை 25.03.2022 அன்று கைது செய்யும் பணியில் ஈடுபட்டபோது திரு. கே.நவநீத கிருஷ்ணன், உதவி ஆய்வாளர், தீவிர குற்றத்தடுப்புப் பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம், எதிரிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டு இடது தொடையில் பலத்த வெட்டுக்காயம் அடைந்தபோதும், சற்றும் தளர்வில்லாமல் தனது தைரியச் செயலினால் இரண்டு எதிரிகளையும் கைது செய்ய உதவியாக இருந்துள்ளார். இந்தத் தாக்குதலில் தலைமைக் காவலர் திரு. கருப்பசாமி என்பவரின் உயிரைக் காப்பாற்ற மிகவும் உதவியாக இருந்துள்ளார். திரு. கே.நவநீத கிருஷ்ணன், உதவி ஆய்வாளர் அவர்களின் துணிச்சலையும், செயலையும் பாராட்டி அவருக்குக் காவல்துறையின் வீரதீரச் செயலுக்கான "மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் அண்ணா பதக்கம்" வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

வேலூர் மாவட்டத்தில் ரூ.79.70 கோடிச் செலவில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 1,591 வீடுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
திறந்து வைத்தார் - 17.09.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 17.09.2023 அன்று, பொது மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் வேலூர் மாவட்டம், மேல்மொணவூர், இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் நடைபெற்ற விழாவில், 13 மாவட்டங்களில் உள்ள 19 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் ரூ.79.70 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 1,591 வீடுகளைத் திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் உள்ள 29 மாவட்டங்களில் 104 தற்காலிக முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு, 19,498 குடும்பங்களைச் சார்ந்த 58,272 நபர்கள் தங்கவைக்கப்பட்டு வசித்து வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2021-2022 சட்டமன்ற கூட்டத் தொடரின்போது பேரவையில் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு இனி பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை அமைத்துத் தருவதை இந்த அரசு உறுதி செய்யும் என்று அறிவித்ததுடன், இலங்கை அகதிகள் முகாம் என்பதை இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என்று பெயர் மாற்றம் செய்தும் அறிவித்தார்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்திரப் பணக்கொடை, துணிமணிகள், பாத்திரங்கள், கல்வி உதவித் தொகை ஆகிய நலத்திட்டங்களை உயர்த்தப்பட்ட விகிதத்தில் வழங்கப்படும் என அறிவித்ததுடன், இலவச சமையல் எரிவாயு இணைப்பு, அடுப்பு, சமையல் எரிவாயு மானியம், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குச் சமுதாய முதலீட்டு நிதி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும் எனவும் அறிவித்தார். இத்திட்டங்கள் அனைத்தும் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இலங்கைத் தமிழர்களது முகாம்களில் மிகவும்

பழுதடைந்த நிலையில் உள்ள 7,469 வீடுகள் புதியதாகக் கட்டித்தரப்படும் எனவும் அறிவித்திருந்தார். அவற்றில் முதற்கட்டமாக, 3,510 வீடுகள் புதியதாகக் கட்டித்தரப்படும் எனவும் அறிவிக்கப்பட்டு, அதற்காக ரூ.176.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, 20 மாவட்டங்களில் உள்ள 35 இலங்கைத் தமிழர் முகாம்களில் 3,510 புதிய வீடுகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் கட்டப்பட்டு வருகிறது. அவற்றில், தற்போது 13 மாவட்டங்களில் உள்ள 19 முகாம்களில் ரூ.79.70 கோடிச் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 1,591 வீடுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வேலூர் மாவட்டத்தில் நேரடியாகவும், இதர 12 மாவட்டங்களில் காணொலிக் காட்சி வாயிலாகவும் திறந்து வைத்தார். மேலும், மேல்மொணவூர், இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாம் இல்லவாசிகளுக்குப் புதிய குடியிருப்புகளை வழங்கிடும் அடையாளமாக 5 குடும்பத்தினருக்குக் குடியிருப்புக்கான சாவிகளையும், 8 வகையான வீட்டு உபயோகப் பொருட்களையும், மரக்கன்றுகளையும், மாணவர்களுக்குக் கல்வி உபகரணங்களையும் வழங்கினார்.

19 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் கட்டப்பட்டுள்ள 1,591 வீடுகளைத் திறந்து வைத்தல்

வேலூர் மாவட்டம், மேல்மொணவூர் முகாமில் ரூ.11 கோடிச் செலவில் 220 வீடுகளும், ஈரோடு மாவட்டம், பவானிசாகர் முகாமில் ரூ.21 கோடிச் செலவில் 420 வீடுகளும், சேலம் மாவட்டத்தில் ரூ.13.22 கோடிச் செலவில், பவளத்தானூர் முகாம், அத்திக்காட்டானூர் முகாம், குறுக்குப்பட்டி ஆகிய முகாம்களை ஒருங்கிணைக்கப்பட்டு 244 வீடுகளும், தம்மப்பட்டி முகாமில் 20 வீடுகளும், விருதுநகர் மாவட்டத்தில் மொத்தம் ரூ.7.02 கோடிச் செலவில், செவலூர் முகாமில் ரூ.3.11 கோடிச் செலவில் 62 வீடுகளும், அனுப்பன்குளம் முகாமில் ரூ.40 இலட்சம் செலவில் 8 வீடுகளும், குல்லூர்ச்சந்தை முகாமில் ரூ.3.51 கோடிச் செலவில் 70 வீடுகளும், கோயம்புத்தூர் மாவட்டம், கோட்டூர் முகாமில் ரூ.5.60 கோடிச் செலவில் 112 வீடுகளும், திருவண்ணாமலை மாவட்டம், புதிப்பாளையம், பையூர் முகாம்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ரூ.5.57 கோடிச் செலவில் 111 வீடுகளும், சிவகங்கை மாவட்டம், ஒக்கூர் முகாமில் ரூ.4.51 கோடிச் செலவில் 90 வீடுகளும், தூத்துக்குடி மாவட்டம், தாப்பாத்தி முகாமில் ரூ.2.60 கோடிச் செலவில் 52 வீடுகளும், தருமபுரி மாவட்டம், சின்னாறு அணை முகாமில் ரூ.2.51 கோடிச் செலவில் 50 வீடுகளும், கிருஷ்ணகிரி மாவட்டம், பாம்பாறு அணை முகாமில் ரூ.1.86 கோடியில் 37 வீடுகளும், திருநெல்வேலி மாவட்டம், சமூகரெங்கபுரம் முகாமில் ரூ.1.77 கோடிச் செலவில் 35 வீடுகளும், மதுரை மாவட்டம், திருவாதவூர் முகாமில் ரூ.1.51 கோடிச் செலவில் 30 வீடுகளும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், வாழவந்தான்கோட்டை முகாமில் ரூ.1.51கோடிச் செலவில் 30 வீடுகளும் என மொத்தம் 1,591 வீடுகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.கஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. மேலும், மேல்மொணவூரில் இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாம்களில் கட்டப்பட்டுள்ள வீட்டினையும் நேரடியாகச் சென்று திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இலங்கைத் தமிழர் முகாம்களில் குடிநீர், மின்சாரம், கழிப்பிடம், சாலை வசதிகள் புதியதாகவும் ஏற்கெனவே உள்ளவற்றை உடனுக்குடன் சீர்படுத்தியும் தரப்படும் என்று அறிவித்திருந்தார். அதன்படி, மேற்படி 13 மாவட்டங்களில் உள்ள 19 முகாம்களில் ரூ.11.33 கோடிச் செலவில் இதர அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு, முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் மதிப்புடன், மேம்படுத்தப்பட்ட, பாதுகாப்பான வாழ்க்கை வாழ்வதை இந்த அரசு மீண்டும் உறுதி செய்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், காணொலிக் காட்சி வாயிலாகப் பிற மாவட்டங்களில் உள்ள முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுடன் கலந்துரையாடினார். அப்போது பயனாளிகளிடம், பிள்ளைகளின் படிப்புக் குறித்தும், தற்போது கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளின் வசதிகள் மற்றும் அடிப்படைத் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். அதற்குப் பதிலளித்த பயனாளி ஒருவர், தன்னுடைய குடும்பம் இம்முகாமில்நீண்டகாலமாகவசித்துவருவதாகவும், தற்போது கட்டப்பட்டு வழங்கப்பட்டுள்ள வீடு நல்ல வசதியாக உள்ளது என்றும், அங்கன்வாடி, நூலகம், பொது விநியோக அங்காடி உள்ளிட்ட அனைத்து வசதிகள் உள்ளது என்றும் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது என்றும் தெரிவித்துத் தங்களுடைய நன்றியைத் தெரிவித்தனர்.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 13 மாவட்டங்களில் 19 இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாம்களில் கட்டப்பட்ட புதிய குடியிருப்புகளின் புகைப்படத் தொகுப்பினைப் பார்வையிட்டார்.

புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கைத் திட்டத்தின்கீழ் 8 நிறுவனங்களுக்கு ரூ.10.85 கோடிப் பங்கு நிதி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
வழங்கினார் – 20.09.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 20.09.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் தமிழ்நாட்டின் புத்தொழில் சூழமைவை மேம்படுத்தும் வகையில் 50க்கும் மேற்பட்ட செயல் திட்டங்களை உள்ளடக்கிய "தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை – 2023" வெளியிட்டார். மேலும், தமிழ்நாடு பட்டியலினத்தவர்/பழங்குடியினர் புத்தொழில் நிதித் திட்டத்தின்கீழ் 8 நிறுவனங்களுக்கு ரூ.10.85 கோடிப் பங்கு நிதி வழங்குவதற்கான ஒப்புதல் ஆணைகளையும் வழங்கினார்.

தமிழ்நாட்டின் புத்தொழில் சூழமைவை (Startup Eco System) மேம்படுத்தும் வகையிலும், தமிழ்நாட்டினை மிகச் சிறந்த புத்தொழில் சூழமைவு கொண்ட இடங்களில் ஒன்றாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் "தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை – 2023" உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையானது 2030க்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாகத் தமிழ்நாட்டினை உருவாக்க வேண்டும் என்ற இலக்கினை அடைவதில் புத்தொழில் நிறுவனங்களின் பங்களிப்பினை ஊக்குவிப்பதற்கும் அடிப்படையாக இருக்கும்.

இப்புதிய புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கையானது, தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களின் உருவாக்கத்தை அதிகரிப்பதற்கும், அந்நிறுவனங்களின் விரிவாக்கத்திற்கு உறுதுணையாகவும் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், மாநிலத்தின் மொத்த

உள்நாட்டு உற்பத்திக் குறியீடு (GDP) மற்றும் சமூக மூலதனம் (Social Capital) இரண்டிலும் அவற்றின் பங்களிப்புகளை அதிகரிப்பதற்கும் உந்து சக்தியாக இருக்கும்.

புத்தொழில் சார்ந்த அறிவாற்றலை மேம்படுத்துதல், மாநிலத்தின் புத்தாக்க சூழமைவினை வலுப்படுத்துதல், முதலீட்டு சூழமைவினை வலுப்படுத்துதல், சந்தை அணுகுதலுக்குத் தேவையான வாய்ப்புகளை உருவாக்குதல், தொழில்முனைவு தளம் சார்ந்த செயல்பாட்டாளர்களை ஒருங்கிணைத்தல், புத்தொழில் ஆதரவு சேவை மையங்களை அமைத்தல், அனைவரையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த புத்தொழில் முனைவு வளர்ச்சியினை உறுதி செய்தல் ஆகிய ஏழு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு, 50க்கும் மேற்பட்ட செயல்திட்டங்களுடன் இக்கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

"தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கை – 2023" சிறப்பம்சங்கள்

புத்தொழில் வரையறை திருத்தம்: தற்பொழுது "புத்தொழில்" என்பதற்கான வரையறை அம்சங்களுடன், பட்டியலினத்தவர் / பழங்குடியினச் சமூகத்தினர், பிற துறைகளில் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள புதுமையான மாதிரிகளைப் பயன்படுத்தித் தாங்கள் சார்ந்த சமூகங்களின் பொருளாதார, சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விதமாக ஒரு நிறுவனத்தினை உருவாக்கினால், அந்த நிறுவனமும் புத்தொழில் என்று மாநில அரசால் அங்கீகரிக்கப்படும்.

இணை நிதியம் (Co-Creation Fund): பிற துணிகர முதலீட்டு நிறுவனங்களின் (Venture capital firms) வழியாக முதலீடு செய்யும் பெரு நிதியம் (Fund of Funds) ஒன்று ரூ.100 கோடி மதிப்பில் உருவாக்கப்படும். இந்தப் பெரு நிதியமானது வட்டார அளவில் செயல்படும் புத்தொழில் நிறுவனங்கள், ஊரக வாழ்வாதார மேம்பாடு, பசுமைத்தொழில்நுட்பம், பெண்களால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்படும் தனியார் துணிகர முதலீட்டு நிறுவனங்களில் முதலீடு செய்வதற்குச் சிறப்புரிமை அளிக்கும்.

ஸ்டார்ட்–அப் தமிழா: மாநிலத்தில் புத்தொழில் முனைவு மற்றும் முதலீட்டுப் பண்பாட்டினை பரவலாக்கும் விதமாக "ஸ்டார்ட் அப் தமிழா" என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிக்கப்படும்.

ஸ்மார்ட் கார்டு: தொடக்க நிலையில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பல்வேறு நிறுவனங்களிடம் இருந்து நியாயமான விலையில் பெறக்கூடிய வகையில் அத்தகைய தொகுப்பு அடங்கிய ஸ்டார்ட் அப் ஸ்மார்ட் கார்ட் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

சமூக நீதி தொழில் வளர் மையம்: ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சார்ந்தவர்களால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான பயிற்சிகள், ஆலோசனைகள், வழிகாட்டல்களை அளிக்கும் சமூக நீதி தொழில் வளர் மையம் நிறுவப்படும்.

பெண்களுக்கான சிறப்புத் தொழில் வளர் மையம்: புத்தொழில் முனைவில் ஈடுபடும் பெண்களின் பிரத்யேக தேவைகளைக் கருத்தில் கொண்டு பல்வேறு சிறப்பம்சங்களுடன் ஒரு தொழில் வளர் மையம் அமைக்கப்படும்.

மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர்களுக்கான திட்டங்கள்: மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர்களால் உருவாக்கப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.5 இலட்சம் மானியம், டான்சீட் (Tanseed) திட்டத்தில் சிறப்புரிமை, இலவச தொழில் வளர் காப்பான் போன்ற வாய்ப்புகள் வழங்கப்படும்.

டான் ஃபண்ட் (TANFUND): 'டான் ஃபண்ட்' என்ற பெயரில் உலகளாவிய துணிகர முதலீட்டாளர்களைத் தமிழ்நாட்டில் இயங்கும் புத்தொழில் நிறுவனங்களுடன் இணைக்கும் முதலீட்டு உதவித் தளம் தொடங்கப்படும்.

உலகச் சந்தைகள் ஒருங்கிணைப்பு: தமிழ்நாட்டில் இயங்கும் புத்தொழில் நிறுவனங்கள் வாய்ப்புகள் நிறைந்த பல்வேறு உலக நாடுகளிலும் கால் பதிக்க உதவும் வகையில் உலகிலுள்ள பல்வேறு முக்கிய நகரங்களிலும் புத்தொழில் ஒருங்கிணைப்பு மையங்கள் தொடங்கப்படும்.

மேலும், பெருநிறுவனங்களில் பணிபுரியும் அனுபவமும், ஆற்றலும் மிக்கவர்களைத் தொழில் முனைவோர்களாக மாற்ற உதவும் EIR (Entrepreneur-in-Residence) திட்டம், பல்வேறு தொழில்துறைகள் சார்ந்து இயங்கும் புத்தொழில் முனைவோர்களை அவர்கள் சம்பந்தப்பட்ட துறை வல்லுநர்கள், முதலீட்டாளர்கள், பிற துறைசார் செயல்பாட்டாளர்களுடன் இணைக்கும் 'துறைசார் ஒருங்கிணைப்பு' திட்டம் என ஐம்பதுக்கும் மேற்பட்ட செயல் திட்டங்கள் இந்தக் கொள்கை வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பட்டியலினத்தவர் / பழங்குடியினர் புத்தொழில் நிதி

புதுயுக தொழில்முனைவில் அனைத்துச் சமூகத்தினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை அடைவதற்காகத் தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு பட்டியலினத்தவர் / பழங்குடியினர் புத்தொழில் நிதித்திட்டம், தமிழ்நாடு புத்தொழில், புத்தாக்க இயக்கத்தின் வழியாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பிரிவுகளைச் சார்ந்த தொழில்முனைவோர்களால் தொடங்கி நடத்தப்பட்டு வரும் புத்தொழில் நிறுவனங்களுக்குப் பங்கு முதலீடாக அல்லது பிணையில்லாக் கடனாக நிதி வழங்க கடந்த நிதி ஆண்டில் ரூ.30 கோடி நிதியுடன் இந்த நிதியம் தொடங்கப்பட்டது. இந்த நிதி ஆண்டில் ரூ.50 கோடியாக இந்நிதியம் உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பட்டியலினத்தவர் / பழங்குடியினர் புத்தொழில் நிதித் திட்டத்தின்கீழ்த் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 புத்தொழில் நிறுவனங்களில் ரூ.10.85 கோடி பங்கு முதலீடு செய்வதற்கான ஒப்புதல் ஆணைகளைப் பயனாளிகளிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

அரசு முதலீடு செய்வதால் அந்த நிறுவனங்களின் மீதான நம்பகத்தன்மை அதிகரிப்பதோடு, அவர்களின் சந்தை விரிவாக்கத்திற்கும் உறுதுணையாக இருக்கும். சென்னை, கோயம்புத்தூர், திருப்பூர், இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த இந்த நிறுவனங்களில் 2 புத்தொழில் நிறுவனங்கள் பெண் தொழில்முனைவோர்களால் நடத்தப்படுகின்றது. பழங்குடியினரால் நடத்தப்படும் ஒரு புத்தொழில் நிறுவனமும் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

பதப்படுத்தப்பட்ட கருவாடு வகைகளை, அதன் மணம் வெளியில் வராத வண்ணம் தனித்துவமான பேக்கிங் செய்து சந்தைப்படுத்தும் லெமூரியன் நிறுவனம் (Lemurian Ventures), வேளாண் நிலங்களில் பயன்படுத்துவதற்கேற்ற டிரோன் கருவிகளைத் தயாரிக்கும் வாயுரதா (Vayuratha) நிறுவனம், சினிமா தயாரிப்புத் துறையில் நவீனத் தொழில்நுட்பத்தினைக் கொண்டியங்கும் 70 எம்.எம் டிஜிவெர்ஸ் (70 mm Digiverse) நிறுவனம், காய்கறிகளைக் கொண்டு மால்ட் உணவு வகைகளைத் தயாரிக்கும் வேர்வைபுட்ஸ் (Vervai foods) நிறுவனம்,தோடா பழங்குடியினரின் கைவேலைப்பாடு செய்த துணிகளை இணைய வழியில் சந்தைப்படுத்தும் ஐகேம் டெக்னாசிஸ் (Icam Technosys) நிறுவனம், உற்பத்தித் துறையில் இயங்கும் KSU ஹார் நெக்ஸன் (KSU Harnexon) நிறுவனம், ஐஓடி தொழில்நுட்பத் துறையில் இயங்கும் என்து டெக்னாலஜிஸ் (Enthu Technologies) மற்றும் ஆக்கம் டெக்னாலஜிஸ் (Auckam Technologies) ஆகிய எட்டு நிறுவனங்களுக்குப் பங்கு முதலீட்டு ஒப்புதல் ஆணைகள் வழங்கப்பட்டன.

பொருளாதாரம், புள்ளியல் துறை மதிப்பீடு, ஆய்வுத் துறைகளை இணைத்துக்கொண்டு மாநிலத் திட்டக்குழு செயல்படவேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
மாநிலத் திட்டக்குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை - 22.09.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரும், மாநிலத் திட்டக்குழுத் தலைவருமான திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், தலைமையில் 22.09.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், மாநிலத் திட்டக்குழுவின் நான்காவது கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக மாநிலத் திட்டக்குழுவால் தயாரிக்கப்பட்ட வரைவு கொள்கைகள், தயாரிக்கப்பட்டு வரும் கொள்கைகள், அரசின் முன்னோடித் திட்டங்களான மகளிருக்கான இலவச நகரப் பேருந்து பயணத் திட்டமான விடியல் பயணம், இல்லம் தேடிக் கல்வி, மக்களைத் தேடி மருத்துவம் ஆகியவற்றின் பயன்கள் மகளிர், மாணவர்கள், பொதுமக்களைச் சென்றடைந்தது தொடர்பான ஆய்வு முடிவுகள் குறித்தும் விளக்கப்பட்டன. மேலும், மாநிலத் திட்டக்குழுவால் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கைகள், நடத்தப்பட்ட பயிலரங்கங்கள், நடப்பில் உள்ள ஆய்வுகள், எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் விவரிக்கப்பட்டன.

மாநிலத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் அவர்கள் மூன்றாவது திட்டக்குழுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுரைகளின்படி மேற்கொள்ளப்பட்ட பணிகள், மாநிலத் திட்டக்குழுவில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் பற்றி விவரித்தார்.

மாநிலத் திட்டக்குழுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

கழக ஆட்சியின் கொள்கை வகுப்புக்கு அடித்தளமாக இருக்கிற திட்டக்குழுவினருடன் கலந்துரையாடல் நடத்துவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். உங்களோடு உரையாடுவது எனக்கு மனநிறைவாகவும் இருக்கிறது. ஏன், வழிகாட்டுவதாகவும் அமைந்திருக்கிறது.

இந்த ஆட்சி செல்ல வேண்டிய பாதையையும், செல்லும் பாதை சரியானது தானா? என்பதையும் அறிவுறுத்தும் அமைப்பாகத் திட்டக்குழு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதற்காகத் திட்டக்குழு துணைத் தலைவர் திரு.ஜெயரஞ்சன் அவர்களுக்கும், திட்டக்குழுவின் முழு நேர, பகுதி நேர உறுப்பினர்களுக்கும், என்னுடைய பாராட்டுக்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக ஜெயரஞ்சன் அவர்கள், அரசின் வழிகாட்டிகளில் ஒருவராகச் செயல்பட்டு வருகிறார். முக்கியக் கொள்கைகளை வகுப்பதற்கு முனைப்புடன் வழிகாட்டுதல் வழங்குகிறீர்கள். முக்கியத் திட்டங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்த துணை நிற்கிறீர்கள். அரசுக்கும் - மக்களுக்கும் இடைவெளி ஏற்பட்டுவிடாமல் - அனைவருக்கும் அனைத்தும் கிடைப்பதற்குத் திட்டக்குழு சீர்மிகு பணியாற்றி வருகிறது எனத் திட்டக்குழுவின் தலைவர் என்ற முறையில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

சில முக்கியமான கொள்கைகளை வகுக்கும் பணி உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- ✶ மின் வாகனக் கொள்கை, தொழில் - 4.0 கொள்கை, குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கொள்கை, துணி நூல் கொள்கை, கைத்தறிக் கொள்கை, சுற்றுலாக் கொள்கை, தமிழ்நாடு மருத்துவ உரிமைக் கொள்கை, தமிழ்நாடு பாலின மாறுபாடு உடையோருக்கான நலக் கொள்கை - ஆகியவற்றைத் தயாரித்து நீங்கள் வழங்கி இருக்கிறீர்கள்.
- ✶ கழிவு மேலாண்மைக் கொள்கை, தமிழ்நாட்டின் நிலையான நிலப் பயன்பாட்டுக் கொள்கை, நீர்வள ஆதாரக் கொள்கை, வேலைவாய்ப்பு, திறன் கொள்கை, வீட்டு வசதிக் கொள்கை

என்பன போன்றவற்றையும் விரைந்து இறுதி செய்திட வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

நான் மிக முக்கியமாகக் கருதுவது அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் மக்களுக்கு எந்த வகையில் பயனளித்து வருகிறது என்பது தொடர்பாக நீங்கள் தரும் ஆய்வறிக்கைகள்தான்.

- ✶ மகளிருக்கு இலவச விடியல் பயணத் திட்டத்தை நாம் நிறைவேற்றினோம். இந்தத் திட்டத்தின் மூலமாகப் பெண்கள் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார மாற்றங்கள், உயர்வுகள் என்னென்ன என்பதைத் திட்டக் குழு அறிக்கையாகக் கொடுத்த பிறகு தான் அந்தத் திட்டத்தின் விரிந்த பொருள் அனைவரையும் சென்றடைந்தது. மாதம் தோறும் ரூ.800 முதல் ரூ.1,200 வரை சேமிக்கிறார்கள் என்பதைவிட - பெண்களுக்குப் பொருளாதார சுதந்திரம் கிடைத்துள்ளது. சமூகத்தில் அவர்களது பங்களிப்பு அதிகமாகி இருக்கிறது. வேலைகளுக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. இதன் மூலமாகச் சமூக உற்பத்தியும் - உழைப்பும் உற்பத்திக் கருவிகளும் அதிகமாகி இருக்கிறது. இவை பற்றி எல்லாம் ஆங்கில ஊடகங்கள் அதிகமாக எழுதத் தொடங்கியது.
- ✶ இல்லம் தேடிக் கல்வி என்பது கல்வியைப் பரவலாக்கவும், சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் பள்ளிக்குள் கொண்டு வரவும் பயன்பட்டுள்ளது.
- ✶ மக்களைத் தேடி மருத்துவம் திட்டமானது அனைவருக்கும் சுகாதாரம் என்பதை உறுதி செய்துள்ளது. வீட்டுக்கே அரசு செல்கிறது என்ற நிருவாகப் பரவலாக்கல் நடந்துள்ளது. மருத்துவ உரிமை நிலைநாட்டப்பட்டு உள்ளது.
- ✶ 'நான் முதல்வன்' திட்டமானது - தமிழ்நாட்டு மாணவர்களைக் கல்வியில் - அறிவாற்றலில் - திறமையில் - தன்னம்பிக்கையில் சிறந்தவர்களாக மாற்றி வருகிறது. பத்து இலட்சம் பேருக்கு என்று சொன்னோம். ஆனால், 13 இலட்சம் பேருக்கு இந்த ஆண்டு பயிற்சி வழங்கி இருக்கிறோம். மிகப் பெரிய பயிற்சி நிறுவனங்கள் மூலமாகப் பல்லாயிரக்கணக்கில் பணம் கட்டி அறிந்து கொள்ள வேண்டிய திறமைகளை அரசு கட்டணமின்றி வழங்கி வருகிறது.

இதன்மூலம், 1 இலட்சத்து 74 ஆயிரத்து 183 மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை இன்னும் எப்படிச் செழுமைப்படுத்தலாம் என நீங்கள் பரிந்துரைகளை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

'விடியல் பயணம் திட்டம்', 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' ஆகியவை சமூகத்தில் எத்தகைய தாக்கத்தை, மாற்றத்தை ஏற்படுத்தியது என நீங்கள் ஆய்வு செய்து அளித்த அறிக்கைகள் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது.

அதேபோல, 'நான் முதல்வன்' திட்டத்தின் தாக்கம் குறித்தும் நீங்கள் அறிக்கை வழங்க வேண்டும். ஒவ்வொரு திட்டத்தின் பயன்பாடு என்பதும் மிகமிக அதிகம். செலவினத்தின் அடிப்படையில் எந்தவொரு திட்டத்தையும் அளவிடாமல், பயன்பாட்டின் அடிப்படையில் அளவிட வேண்டும் என்பதைத் திட்டக்குழு வழிகாட்டி வருகிறது. இது அரசு அதிகாரிகளுக்கும் மிகச் சிறந்த சிந்தனைத் திறப்பாக உள்ளது.

இப்பொழுது மகளிருக்கு ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்கி வருகிறோம். ஒவ்வொரு மகளிருக்கும் ஆயிரம் ரூபாய் கிடைப்பது எத்தகைய மகிழ்ச்சியை வழங்கி வருகிறது

என்பதை ஊடகங்களில் வரும் செய்திகள் மூலமாக அறிகிறேன். அனைத்து ஊடகங்களும் பெண்களிடம் பேட்டிகள் எடுத்து வெளியிட்டு வருகிறார்கள். பேட்டி அளிக்கும் அனைவரும் மகிழ்ச்சியுடன்தான் பேட்டி தருகிறார்கள்.

முகநூலில் ஒருவர் எழுதி இருக்கிறார். "எங்கள் கிராமத்தில் 300 பெண்களுக்கு ஆயிரம் ரூபாய் வந்துள்ளது. அப்படியானால் எங்கள் கிராமத்திற்குள் ரூ.3 இலட்சம் வந்துள்ளது. ரூ.3 இலட்சம் எங்கள் கிராமத்திற்குள் வந்திருப்பதன் மூலமாக எங்கள் கிராமத்தில் பணப்புழக்கம் அதிகமாகி இருக்கிறது. எங்கள் கிராமத்து வளர்ச்சிக்காக ரூ.3 இலட்சம் முதலீடு செய்யப்பட்டுள்ளது" என்று அவர் எழுதி இருக்கிறார்.

கிராமப்புற ஆய்வில் ஆர்வம் கொண்ட துணைத் தலைவர் நம்முடைய ஜெயரஞ்சன் அவர்கள் இப்படி, பல கோணங்களிலும் ஆராய்ந்து 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' சமூகத்தில் ஏற்படுத்துகிற தாக்கம் குறித்து அறிக்கைகள் கொடுக்கலாம்.

மேலும், மிக முக்கியமான 2 வேண்டுகோள்களை உங்களிடம் வைக்க விரும்புகிறேன்.

- ✶ பொருளாதாரம் மற்றும் புள்ளியல் துறை இருக்கிறது. மதிப்பீடு மற்றும் ஆய்வுத் துறை இருக்கிறது. இவற்றையும் இணைத்துக் கொண்டு மாநிலத் திட்டக்குழு செயல்படவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஒருங்கிணைப்பு மிக மிக அவசியம்.
- ✶ பல்வேறு ஆலோசனைகளை நீங்கள் வழங்கி வருகிறீர்கள். இவற்றை அரசுத் துறைகள் முழுமையாகவும் சரியாகவும் பயன்படுத்துகிறதா, பின்பற்றுகிறதா என்ற ஆய்வையும் நீங்கள் செய்ய வேண்டும். புள்ளி விவரங்களாக மட்டுமல்ல, கள ஆய்வுகளின் மூலமாகவும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

நவம்பர் 23 : கவிஞர் சுரதா அவர்கள் பிறந்த நாள்

"வீரத் தாய் நாடே"

ஊனாகி அந்த ஊனில்
உயிரேறி வடிவம் பெற்று
நானாகித் தமிழ னாகி
நடமாடும் என்னைத் தாங்கும்
தேனான நாடே! இன்பத்
திருக்குறள் நாடே! நீல
வானேந்தும் நாடே உன்றன்
மடியன்றோ எனக்குத் தொட்டில்

தாய்நாடே! உன்னை வேண்டித்
தவிட்டையும் தின்பேன்; இன்பத்
தாய்நாடே! உன்னை மீட்கத்
தணல்மீதும் நிற்பேன்; அன்புத்
தாய்நாடே! மாற்றார் நஞ்சைத்
தரினும்யான் ஏற்பேன்; வீரத்
தாய்நாடே! உன்னைக் காக்கச்
சாகவும் அஞ்ச மாட்டேன்.

நன்றி : **சுரதா கவிதைகள்** எனும் நூலிலிருந்து...

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நூற்பாலைகளின் மின்கட்டண முறைகள் மாற்றி அமைப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆணை – 23.09.2023

கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், 2022-2023 முதல் 2026-2027ஆம் நிதியாண்டு வரையிலான காலத்திற்கான பல ஆண்டு கட்டண (Multi Year Tariff) மின்கட்டண மனுவை, மாண்பமை. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் (TNERC) முன்பு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO) சமர்ப்பித்தது.

இதனால் ஏற்பட்ட மின்கட்டண மாற்றம் குறித்து, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் அமைப்புகள் தெரிவித்த கோரிக்கைகளைப் பரிசீலித்து, அவர்களது நலனைப் பாதுகாக்கும் வகையில் கட்டணத்தை மாற்றி அமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தினார்கள். இதன்படி, TANGEDCOவிற்கு ஆண்டிற்கு ரூ.2,000 கோடி வருவாய் குறைந்தாலும், தொழில்முனைவோரின் நலனைக் கருத்தில் கொண்டு, தொழிற்சாலைகளுக்கு 50 கிலோவாட் வரை உத்தேசித்திருந்த நிலையான கட்டணத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.100லிருந்து ரூ.75 எனவும் – 50 கிலோவாட்டுக்குமேல் 100 கிலோவாட் வரை உத்தேசித்திருந்த நிலையான கட்டணத்தை, ரூ.325லிருந்து ரூ.150 எனவும், 100 கிலோவாட் முதல் 112 கிலோவாட் வரை உத்தேசித்திருந்த மாதம் நிலையான கட்டணத்தை ஒன்றுக்கு ரூ.500லிருந்து ரூ.150 எனவும், 112 கிலோவாட்டுக்கு மேல் உத்தேசித்திருந்த நிலையான கட்டணத்தை, மாதம் ஒன்றுக்கு ரூ.600லிருந்து ரூ.550 எனவும், TNERCயின் ஒப்புதல் பெற்று மாற்றியமைக்கப்பட்டது.

இதன் பின்னர், தொழில் மேம்பாட்டிற்கான மேலும் நடவடிக்கையாக, குறு, சிறு, நடுத்தரத் தொழில் பிரிவு நுகர்வோர்களின் கோரிக்கைகளை ஏற்று, தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கான (LT IIIB) உச்சநேர நுகர்விற்கான மின்கட்டணத்தை 25 சதவீதத்திலிருந்து 15 குறைத்து ஆணையிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தக் குறைக்கப்பட்ட கட்டணங்களுக்கான கூடுதல் மானியமாக ஆண்டிற்கு ரூ.145 கோடி தமிழ்நாடு அரசு வழங்குகிறது. இதனால் சுமார் 3.37 இலட்சம் தாழ்வழுத்த தொழிற்சாலை நுகர்வோர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் பல ஆண்டு மின்கட்டண ஆணையின்படி, 2023 ஜூலை மாதத்தைப் பொறுத்த வரையில், 2022 ஏப்ரல், 2023 ஏப்ரல் ஆகியவற்றின் நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்களின்படி கணக்கிட்டால், 4.7 சதவீதம் மின்கட்டணம் உயர்த்தப்பட வேண்டும். இந்த நடைமுறையை ஆய்வு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின்

அவர்கள் மாண்பமை ஆணையத்தின் உத்தரவை செயல்படுத்தும்போது பொதுமக்களும் தொழில் துறையினரும் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். இதன்படி கட்டண உயர்வு விகிதம் மறுஆய்வு செய்யப்பட்டு, சென்ற ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கட்டணம் உயர்த்தப்பட்ட நிலையில், 2022 ஏப்ரல் மாதத்தின் விலைக் குறியீட்டு எண்ணிற்குப் பதிலாக, சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் விலைக் குறியீட்டு எண் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதனால் கட்டண உயர்வின் அளவு 4.7 ரூபாயிலிருந்து 2.18 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தொழில்களின் நலம் காக்க தமிழ்நாடு அரசு எடுத்துள்ள பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்து, குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், நூற்பாலைகளின் கோரிக்கைகள் தொடர்பாக மாண்புமிகு நிதி, மனிதவள மேம்பாடு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் ஆகியோர்கள் முன்னிலையில் 21.07.2023 அன்று தலைமைச் செயலகத்தில் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஜவுளித் தொழிலின் நிலைத் தன்மையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்றனர்.

தமிழ்நாட்டில் தொழில்துறையிலும் ஜவுளித்துறையிலும் தற்போது நிலவி வரும் இடர்பாடுகளை ஆராய்ந்து, ஒன்றிய அரசின் பார்வைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய கோரிக்கைகளைக் கடிதம் மூலம் தெரிவித்தும், மின்கட்டணம் தொடர்பான தொழிற்சாலைகளின் கோரிக்கைகளைப் பரிசீலித்தும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தினார்கள். அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன.

1. பருவகாலத் தேவைக்கு ஏற்ப மாறும் தன்மையுள்ள மின்பளுவைக் கொண்ட தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு நிலை கட்டணத்தைக் குறைத்துக் கொள்ளும் வகையில், அனுமதிக்கப்பட்ட மின்பளுவினைக் குறைத்துக்கொள்ளவும், மேலும், தேவைப்படும்போது அனுமதிக்கப்பட்ட மின்பளுவிற்குள் உயர்த்திக்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக எவ்வித கூடுதல் கட்டணமும் செலுத்த வேண்டியது இல்லை. இச்சலுகையை ஆண்டு ஒன்றுக்கு நான்கு முறை பயன்படுத்திக் கொள்ளலாம்.

2. சூரிய ஒளி சக்தி மேற்கூரை மின் உற்பத்தி செய்ய மின் இணைப்புகளுக்கு 15 சதவிகித மூலதன மானியம் வழங்கப்படும்.

3. 12 கிலோ வாட்க்கு குறைவாக உள்ள குறு, சிறு தொழிற்சாலைகளுக்கு வீதப்பட்டி IIIBலிருந்து IIIA1 வீதப்பட்டிக்கு மாற்றுவது குறித்து மாண்பமை தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் கருத்துரு பெற்றபின் பரிசீலிக்கப்படும்.

படமும்/செய்தியும்

பணி ஆய்வுக் கூட்டம்

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், 07.10.2023 அன்று தலைமைச் செயலகத்தில், அரசு பெருநகரச் சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுவாரியம், நெடுஞ்சாலைத்துறை, சென்னை பெருநகரக் காவல்துறை ஆகிய உயர் அலுவலர்களுடன் சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் நடைபெற்றுவரும் சாலைப்பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 24.09.2023 அன்று, கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:8, துளசி நகரில் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் 2.04 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டு வரும் தார்ச் சாலைப் பணியினையும், வார்டு எண்: 5, நஞ்சப்பா நகரில் உள்ள வி.கே.வி நகரில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் 2.21 கிலோமீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டு வரும் தார்ச் சாலைப் பணியினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளின் முன்னேற்றம் குறித்து வாரந்தோறும் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடத்தி, பணி முன்னேற்றம் குறித்த அறிக்கையினை அளிக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருந்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 19.09.2023 அன்று தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசும்போது, மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் வாரியப் பணிகள், மின்வாரியப் பணிகள் எனப் பல்வேறு பணிகள் காரணமாக மட்டுமல்லாமல், பொதுவாகப் பழைய சாலைகளின் நிலை போதிய பராமரிப்பு இல்லாமல் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள், இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்றும், நம் மாநிலச் சாலைகள் தரமானதாக, மக்கள் பாராட்டப்படும் வகையில் அமைக்கப்படவேண்டும் என்றும் அன்றைய ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு செயலாளர்களும், துறைத் தலைவர்களும் இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்றும், இதனைக் கள ஆய்வு செய்தும், பணி முன்னேற்றக் கூட்டங்கள் நடத்தியும் உறுதி செய்ய திட்டமிடவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

மேலும், சுற்றுப்பயணம் செய்ய அனைத்து மாவட்டங்களிலும், இது தொடர்பாக நேரடியாக ஆய்வு செய்ய முடிவு செய்திருப்பதாகவும், சாலைப்பணிகள் மேற்கொள்ளும் துறைகள் அனைத்தும் துரிதமாக, தரமாகப் பணிகளை மேற்கொண்டு முடிக்கவேண்டும் என்றும் கண்டிப்போடு தெரிவித்திருந்தார்.

அதன் அடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.09.2023 அன்று சென்னை, மாநகரில் சாலைப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து, கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பில், மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண் 8, துளசி நகர் சாலைப் பணி

மாநகராட்சி வார்டு எண்:8, துளசி நகரில் 2023-2024ஆம் ஆண்டிற்கான மாநில நிதிக் குழு நிதியின்கீழ் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் 2.04 கி.மீ. நீளத்திற்குத் தார்ச் சாலை அமைக்கப்பட்டு வரும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இப்பணிகள் 05.09.2023 அன்று தொடங்கப்பட்டு நிறைவுறும் தருவாயில் உள்ளன.

கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண் 5, நஞ்சப்பா நகர் சாலைப் பணி

அதனைத் தொடர்ந்து, மாநில நிதிக் குழு நிதியின் கீழ் வார்டு எண்: 5, நஞ்சப்பா நகரில் உள்ள வி.கே.வி. நகரில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் 2.21 கிலோமீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டு வரும் தார்ச் சாலைப் பணியினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

வி.கே.வி. நகரில் 25 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதற்கு அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்ததோடு, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ.1,000 வழங்கியதற்கும் தங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

சாலைப் பணிகளை ஆய்வு மேற்கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், அனைத்துப் பணிகளையும் வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாகத் தாமதப்படுத்தாமல் முடிக்கப்பட வேண்டும் என்றும், நகராட்சி நிருவாகத் துறை, நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை ஆகிய துறைகளின் அலுவலர்கள், போக்குவரத்து காவல்துறை, மின்வாரியம், குடிநீர் வழங்கல் வாரியம், தொலைதொடர்புத் துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றி, சாலைப் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர், மாநகராட்சி ஆணையர் உள்ளிட்ட அலுவலர்களை அறிவுறுத்தினார்.

ரூ.150 கோடிச் செலவில் 37 மாவட்டங்களிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் 1,000 புதிய வகுப்பறைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 26.09.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் குழந்தை நேயப் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.150 கோடிச் செலவில் 37 மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 1,000 புதிய வகுப்பறைகளைத் திறந்து வைத்தார். மேலும், கிராம ஊராட்சிக்குப் பொதுமக்கள் வரி / கட்டணங்கள் செலுத்துவதற்கான இணையதளம், தமிழ்நாடு எளிமைப்படுத்தப்பட்ட ஊராட்சிக் கணக்குகள் திட்டத்திற்கான இணையதளம் ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார்.

கல்விக்கு முக்கியத்துவம் அளித்திடும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், எண்ணும் எழுத்தும், இல்லம் தேடிக் கல்வி, பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற பல்வேறு வரலாற்று முன்னெடுப்புகளை நிறைவேற்றி வருவதன் தொடர்ச்சியாக, ஊராட்சி ஒன்றியத் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளுக்குச் சுமார் ரூ.800 கோடி மதிப்பீட்டில் 6 ஆயிரம் புதிய வகுப்பறைகள் கட்டப்படும் என்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார். இத்திட்டம் “குழந்தை நேயப் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்” என்று ஊரகப் பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டம், காட்பாடியில் 01.02.2023 அன்று நடைபெற்ற அரசு விழாவில், குழந்தை நேயப் பள்ளி உட்கட்டமைப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தொடங்கி வைத்தார் – 26.09.2023

மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்ப் புதிய வகுப்பறைகள் கட்டும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, 8 மாதக் காலத்தில் முதற்கட்டமாக, குழந்தை நேயப் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.150 கோடிச் செலவில் தமிழ்நாட்டின் 37 மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 1,000 புதிய வகுப்பறைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

இக்கட்டடங்கள் அனைத்தும் குழந்தை நேயச் சிறப்பு அமைப்புகளான உயர்த்தப்பட்ட மேற்கூரை, விசாலமான தாழ்வாரம், காற்றோட்டமிக்க ஜன்னல் வசதிகள், வழுக்காத தரைகள், கற்றலை ஊக்குவிக்கும் சுவர் ஓவியங்கள், வாழ்க்கைப் பாடங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

கிராம ஊராட்சிகளுக்குச் செலுத்த வேண்டிய வரி, கட்டணங்கள் இணையவழி மூலம் செலுத்தும் வசதியைத் தொடங்கி வைத்தல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 2022-2023ஆம் ஆண்டிற்கான மானியக்

கோரிக்கையில், கிராம ஊராட்சிகளுக்குப் பொதுமக்கள் செலுத்த வேண்டிய வீட்டுவரி, தொழில்வரி, குடிநீர்க் கட்டணம், உரிமக் கட்டணம் போன்றவற்றைத் தற்போது ஊராட்சி அலுவலகங்களுக்கு நேரில் சென்றோ, ஊராட்சிச் செயலர் மூலமோ செலுத்த வேண்டியுள்ளது. இச்சேவைகள் அனைத்தும் இணைய வழியில் பெறும் வகையில் வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, பொதுமக்கள் கிராம ஊராட்சிகளுக்குச் செலுத்த வேண்டிய வீட்டுவரி, தொழில்வரி, குடிநீர்க் கட்டணம், வரியல்லாத கட்டணங்கள் போன்றவற்றை இணைய வழியில் செலுத்தும் வகையில் தேசிய தகவலியல் மையத்தால் (National Informatics Centre) உருவாக்கப்பட்டுள்ள https://vptax.tnrd.tn.gov.in/ என்ற வரி செலுத்தும் முனையத்தை (Online Tax Portal) பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று தொடங்கி வைத்தார்.

இவ்விணையதளத்தின் மூலமாக இணைய வழிக் கட்டணம் (Online Payment), ரொக்க அட்டைகள் (Debit / ATM Cards Payment), கடன் அட்டைகள் (Credit Card Payment), யுபிஐ கட்டணம் (UPI Payment) மூலம் செலுத்திட முடியும்.

இதன்மூலம், பொதுமக்கள் எளிதாக 24x7 முறையில் எந்நேரத்திலும் வரி / கட்டணம் செலுத்திட இயலும். இதன்மூலம் ஊராட்சிப் பணியாளர்களின் பணிச்சுமைப் பெருமளவு குறைவதோடு, கிராம ஊராட்சியின் பொறுப்புணர்வும், வெளிப்படைத் தன்மையும் உறுதி செய்யப்படும். மேலும், பெறப்படும் வருவாய் இனங்களின் மூலம் கிராம ஊராட்சியின் அடிப்படை வசதிகளையும் மேம்படுத்த இயலும்.

தமிழ்நாடு எளிமைப்படுத்தப்பட்ட ஊராட்சிக் கணக்குகள் திட்டத்தின் புதிய இணையதளத்தைத் தொடங்கி வைத்தல்

கிராம ஊராட்சிகள் தற்போது ஊராட்சியின் பொதுநிதி, மின் கட்டணம், குடிநீர்க் கட்டணம், அரசின் திட்டப் பணிகள் போன்ற பல்வேறு பொறுப்புகளை மேற்கொள்ள 11 வகையான கணக்குகளைப் பராமரித்து வருவது கடினமான செயலாக உள்ளதால், அதனை எளிமைப்படுத்தும் விதமாகத் தமிழ்நாடு எளிமைப்படுத்தபட்ட ஊராட்சிக் கணக்குகள் திட்டத்தை உருவாக்கி, 3 கணக்குகளை மட்டுமே பராமரிக்கும் நிலையினை இந்தியன் வங்கியின் ஒத்துழைப்புடன் ஏற்படுத்தியுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு எளிமைப்படுத்தப்பட்ட ஊராட்சிகள் கணக்குகள் திட்டத்தின் TNPASS என்ற புதிய இணையதளத்தைத் தொடங்கி வைத்தார்.

இதன்மூலம், கிராம ஊராட்சித் தலைவர்கள் மேற்கூறிய கணக்குகளின் இருப்பு விவரங்களை அறிய வங்கி அலுவலரைச் சார்ந்து இருத்தலைக் குறைத்து, ஊராட்சிக்குத் தேவையான பணிகளை நிதி இருப்பிற்கு ஏற்ப உடனடியாக மேற்கொள்ளவும், நிதிப் பரிவர்த்தனைகளை நிகழ்நேரத்தில் அறிந்திடவும் இயலும்.

தமிழ் கற்பிக்கும் தன்னார்வலர்களுக்கான ஆசிரியர் பட்டயப் பயிற்சியில் பதிவு செய்வதற்கான இணைய இணைப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 26.09.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல், டிஜிட்டல் சேவைகள் துறையின் தமிழ்ப் பரப்புரைக் கழகத் திட்டத்தின்கீழ், தமிழ் கற்பிக்கும் தன்னார்வலர்களுக்கான ஆசிரியர் பட்டயப் பயிற்சியில் பதிவு செய்வதற்கான இணைய இணைப்பு, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் ஒருங்கிணைந்த இணையதளத்தினையும் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார் – 26.09.2023

தமிழ்ப் பரப்புரைக் கழகத் திட்டத்தின்கீழ், தமிழ் கற்பிக்கும் தன்னார்வலர்களுக்கான ஆசிரியர் பட்டயப் பயிற்சியில் பதிவு செய்வதற்கான இணைய இணைப்பு தொடங்கி வைத்தல்

அயலக மாணவர்களின் தமிழ்க்கற்றல் கற்பித்தலுக்காக தமிழ்ப் பரப்புரைக் கழகத்தை செப்டம்பர் 2022இல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் பணிகளைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் செயல்படுத்தி வருகிறது. இதில் திறன்கள் அடிப்படையிலான பாடப்புத்தகங்கள், கற்றல் துணைக்கருவிகள், கட்டணமில்லா இணையவழி வகுப்புகள் முதலான பல வசதிகள் 34 நாடுகளிலும் 16 இந்திய மாநிலங்களிலும் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் 160 தொடர்பு மையங்கள் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தத் தொடர்பு மையங்களில், மாணவர்களுக்குத் தன்னார்வலர்கள் தமிழ் பயிற்றுவித்து வருகின்றனர். தமிழ் மொழியின் அடிப்படைகளையும் முறையான கற்பித்தல் பயிற்சியையும் இவர்களுக்கு வழங்கினால் தமிழ் மொழிக் கற்பித்தலை இன்னும் மேம்படுத்த முடியும் எனப் பல அயலகத் தமிழ்ச்சங்கங்களும் பள்ளிகளும் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில், தமிழ்ப் பரப்புரைக்கழகத்தின் மற்றொரு முக்கியமான முன்னெடுப்பாகத் தமிழ் கற்பிக்கும் தன்னார்வலர்களுக்கான இணையவழி ஓராண்டு ஆசிரியர் பட்டயப்பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டது.

இந்தப் பட்டயப் பயிற்சியைத் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வழங்க 12.01.2023 அன்று நடைபெற்ற அயலகத் தமிழர் தினவிழாவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. தற்போது இந்தப் பட்டயப் பயிற்சியைத் தொடங்குவதற்கான பணிகள் முடிவடைந்து, இந்தக் கல்வித்திட்டத்தில் பதிவு செய்வதற்கான இணைய இணைப்பை (http://tva.reg.payil.app/) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றைய தினம் தொடங்கி வைத்தார். மேலும், இப்பட்டயப் பயிற்சி குறித்த குறிப்பேட்டினை (Brochure) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல், டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் ஒருங்கிணைந்த இணையதளத்தினைத் தொடங்கி வைத்தல்

எல்காட் நிறுவனம் தகவல் தொழில்நுட்ப வன்பொருள் கொள்முதல், தகவல் தொழில்நுட்பப் பூங்கா மேலாண்மை, தகவல் தொடர்பு உள்கட்டமைப்புச் சேவைகள், ஆதார் பதிவு சேவைகள், மாநிலத் தரவு மையத்தில் மென்பொருள் பதிவேற்றம், தரவுப் பதிவேற்றம் சேவைகளுக்கான முகமை ஆகும். எல்காட் நிறுவனம் மின்னாளுகைச் சேவைகளின் முதுகெலும்பாக இருக்கும் மாநில தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்புச் சேவைகளையும் வழங்கி வருகிறது. தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களுக்கு வழித்தட அனுமதி வழங்குவதற்கான ஒரு இணையதளத்தை எல்காட் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

எல்காட் நிறுவனத்திற்கும், அரசுத் துறைகளுக்கும், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள பிற பங்குதாரர்களுக்கும் இடையே வெளிப்படையான, விரைவான, திறமையான முறையில் சேவைகளை வழங்குவதற்கு தானியங்கு நெறிப்படுத்தப்பட்ட தொடர்புகளை (Automated streamlined interactions) வழங்கும் ஒருங்கிணைந்த இணையதளத்தை (https://erp.elcot.in/) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த ஒருங்கிணைந்த இணையதளத்தின் வாயிலாக, IT/ITeS நிறுவனங்கள் நிலம், இட ஒதுக்கீடு, FSI மற்றும் அடமானக் கடனைப் பெற NOC வழங்குதல் ஆகியவற்றுக்கு விண்ணப்பிக்கவும், அரசுத் துறைகள் தகவல் தொழில்நுட்ப வன்பொருள் தயாரிப்புகளை விலை ஒப்பந்தம், குறிப்பிட்ட கொள்முதல் அடிப்படையில் வாங்கிடவும், தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்கள் புதிய ஒப்புதல்கள், ஏற்கெனவே உள்ள தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பை முறைப்படுத்துவதற்கு விண்ணப்பிக்கவும், நிரந்தரப் பதிவு மையங்கள் மூலம் குடிமக்கள் ஆதார் பதிவு, புதுப்பித்தல் சேவைகளைப் பெறவும், அரசு துறைகள் தங்கள் தரவுப் பதிவேற்றத் தேவைகளுக்கு விண்ணப்பிக்கவும் வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எல்காட் ஒருங்கிணைந்த இணையதளம் கணினிகள், மடிக்கணினிகள், (லேப்டாப்கள்), கையடக்கக் கணினிகள் (டேப்லெட்டுகள்), திறன்பேசிகள் (ஸ்மார்ட் போன்கள்) போன்ற அனைத்து சாதனங்களுடனும் இணக்கமானது.

தகவல் தொழில்நுட்பப் பூங்கா மேலாண்மை, வன்பொருள் கொள்முதல், தரவுப் பதிவேற்றத் தேவைகள், வழித்தட அனுமதி வழங்குதல், தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பை முறைப்படுத்துதல், ஆதார் பதிவு, புதுப்பித்தல் சேவைகள் ஆகியவற்றுக்கான தகவல் பலகைகள் மூலம் இந்த இணையதளம் உடனடி, பயனுள்ள சேவை வழங்கலை உறுதிப்படுத்தும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 10,205 இளைஞர்களுக்குப் பணி நியமனம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாகத் தொகுதி-4 பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட 10,205 இளைஞர்களுக்குப் பணிநியமன ஆணைகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை - 27.09.2023

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"அரையணா காசாக இருந்தாலும் அரசாங்க காசு"- என்று கிராமங்களில் சொல்வார்கள். ஏனென்றால், அரசாங்க வேலைக்கு இருக்கின்ற மவுசு, எந்தக் காலத்திலும் குறையாது.

போட்டித் தேர்வுகளில் தேர்வு பெற்று, எப்படியாவது ஒரு அரசுப் பணியை வாங்கிவிட வேண்டும் என்பது, படித்த இளைஞர்களுடைய ஒரு பெரிய கனவு!

அந்த அடிப்படையில், இன்றைக்கு உங்களுடைய இலட்சியக் கனவு நிறைவேறி இருக்கிறது என்றே சொல்லவேண்டும். அதனுடைய அடையாளம்தான், இப்போது உங்கள் கையில் இருக்கின்ற பணி நியமன ஆணைகள்.

இந்த நொடி, உங்களுக்கும் – உங்கள் அப்பா, அம்மாவிற்கும் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்குமோ,

அதே மகிழ்ச்சியோடுதான் நானும் இங்கே உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். ஒருவருக்கு வேலை கிடைக்கிறது என்றால், அது ஒட்டுமொத்த குடும்பத்திற்கும் பயனளிக்கும்.

இன்னும் சொல்லவேண்டும் என்று சொன்னால், பல தலைமுறைக்கும் பயனளிக்கும். அந்த வகையில், பல தலைமுறைக்குப் பயனளிக்கப்போகின்ற பணி நியமன ஆணைதான், உங்கள் கையில் ஒப்படைத்திருக்கிறோம்.

பல இலட்சம் பேர் தேர்வு எழுதி, இலட்சத்தில் ஒருவராக நீங்கள் எல்லாம் தேர்வாகி இருக்கிறீர்கள். இப்படி இலட்சத்தில் ஒருவராக இருக்கின்ற உங்களுக்கு, 'மக்கள் சேவை' என்ற ஒன்றுதான் இலட்சியமாக இருக்கவேண்டும். அதற்காக மட்டும்தான் நீங்கள் எல்லோரும் பணியாற்ற வேண்டும்.

மக்களுக்காக மக்களால் நடத்தப்படுவதே மக்களாட்சி! அந்த வகையில் அரசாங்கம் தீட்டுகின்ற எந்தத் திட்டமாக இருந்தாலும், அது மக்கள் நன்மைக்காகத்தான்!

அரசின் திட்டங்கள், பல்வேறு சேவைகளை மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் மிக முக்கியமான பணியை நீங்கள் எந்தக் குறையுமில்லாமல் நிறைவேற்ற வேண்டும்.

"மக்கள் சேவையே, மகேசன் சேவை"- என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார். அப்படிப்பட்ட மகத்தான பணிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கக்கூடிய உங்கள் எல்லோரையும் இந்த நேரத்தில் நான் மனதாரப் பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன்.

நீங்கள் எல்லோரும் இப்போது அரசு ஊழியர்களாக ஆகியிருக்கிறீர்கள். அரசு ஊழியர்களில் தன்னலம் கருதாமல் மக்களுக்காகவே வாழுகிறவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அதற்கு ஓர் எடுத்துக்காட்டாக நான் இந்த மேடையில் நான் சொல்லியே ஆகவேண்டும்.

கடந்த சனிக்கிழமை, 23ஆம் தேதி, நான் ஒரு அறிவிப்பை வெளியிட்டு இருந்தேன். "இறக்கும் முன்பு உறுப்பு தானம் வழங்குவோரின் இறுதிச்சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும்" என்று அந்த அறிவிப்பில் சொல்லியிருந்தேன்.

மனிதநேயமிக்க இந்த உடல் உறுப்புத் தானம் செய்து, அரசு மரியாதையோடு அடக்கம் செய்யப்பட்ட முதல் நபர், ஒரு அரசு ஊழியர்தான்!

தேனி மாவட்டம், சின்னமனூரில் மூளைச்சாவு அடைந்ததால், உடல் உறுப்புத் தானம் செய்த அரசு ஊழியர் வடிவேலு அவர்களது உடல் நேற்று, அரசு மரியாதையோடு அடக்கம் செய்யப்பட்டது. இந்த இறுதிச் சடங்கில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களும், மாவட்ட நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டார்கள்.

வடிவேலு அவர்களுடைய உடல் உறுப்புகளைத் தானமாகப் பெற்றவர்களின் குடும்பங்கள் சார்பாக மட்டுமில்லை, அவருடைய குடும்பத்தினருக்கு, தனிப்பட்ட என்னுடைய நன்றியையும், ஏன், அரசு ஊழியர்களாக இங்கே இருக்கக்கூடிய உங்கள் எல்லோருடைய சார்பில் தமிழ்நாடு முதலமைச்சராவும் நான் அந்த குடும்பத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் செய்தி உடல் உறுப்புத் தானம் பற்றிய ஒரு பெரும் விழிப்புணர்வை நிச்சயம் ஏற்படுத்தும். அந்தவகையில்,அரசுஊழியராகப்பணியாற்றுகின்ற வடிவேலு அவர்கள், காலத்திற்கும் மக்களால் நினைவுகூரப்படுவார்.

ஒரு கருவியோ அல்லது இயந்திரமோ சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்றால், அதில் இருக்கின்ற ஒவ்வொரு பாகமும் பழுதில்லாமல் சிறப்பாகச் செயல்படவேண்டும். அது போலத்தான், அரசு என்ற மாபெரும் இயந்திரம் சீரிய முறையில் மக்களுக்குச் சேவை செய்ய, அரசு ஊழியர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் முழு ஈடுபாட்டுடன் பங்களிக்க வேண்டும்!

"செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்"

என்ற வள்ளுவரின் வாக்குக்கு நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொடுத்த உரை அதில் என்ன சொன்னார் என்றால், "ஒரு செயலைச் செயலாற்ற வல்லவனைத் தேர்ந்து, செய்யப்பட வேண்டிய செயலை ஆராய்ந்து, அதனை நிகழ்த்துவதற்கான காலத்தினை உணர்ந்து செயல்படுத்த வேண்டும்" என்பதுதான்.

நமது அரசாங்க இயந்திரத்தைத் திறம்பட செயல்படுத்தத் தகுதியான அரசு அலுவலர்கள்

தெரிவு செய்வதைத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஆகிய முகமைகள் இந்த வேலையைச் சிறப்பாகச் செய்து கொண்டு வருகிறார்கள்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படுகின்ற போட்டித் தேர்வுகளுக்கு இலட்சக்கணக்கான தேர்வர்கள் விண்ணப்பிக்கிறார்கள். அதனால் விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது.

இதை சரிசெய்ய, விடைத்தாள்களை மதிப்பீடு செய்கின்ற முறையை எளிதாக்கவும், கால தாமதத்தைத் தவிர்க்கவும், அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் ரூ.95 இலட்சம் செலவில், ஆன்-ஸ்கிரீன் எவாலுவேஷன் லேப் என்ற உயர் தொழில்நுட்பம் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

அதேபோல, ஆசிரியர் பணிகளுக்கான தெரிவுகள் வெளிப்படையாகவும், விரைவாகவும் செய்து முடிக்க, நமது அரசு 20.09.2021 அன்று குழு ஒன்று அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டன.

அந்தக் குழுவினுடைய பரிந்துரை அடிப்படையில், ஆசிரியர் தேர்வு வாரியத்தை மறுசீரமைப்பு செய்து 03.01.2023 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அதன்படி 74 புதிய பணியிடங்கள் மூலம் ஆசிரியர் தேர்வு வாரியத்தில் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட தொழில்நுட்பப் பிரிவு, கணக்குப்பிரிவு, நிர்வாகப் பிரிவு, அறிவிக்கைப் பிரிவு, சட்டப்பிரிவு, தகவல் உரிமைச் சட்டப்பிரிவு, குறைதீர்க்கும் பிரிவு ஆகிய பிரிவுகள் எல்லாம் நிரப்பப்பட்டிருக்கின்றன.

நம் தாய் மொழியாம் தமிழ் மொழியில் படித்தவர்களுக்குத் தமிழ்நாடு அரசுப் பணிகளில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்காலத்தில்தான் தமிழ் மீடியத்தில் படித்தவர்களுக்கு 20 விழுக்காடு இடஒதுக்கீடு தரப்பட்டது.

கடந்த 2021ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சராக நான் பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் பயன்பெறவேண்டும் என்று தமிழ் கட்டாயத் தகுதித் தேர்வுத் தாளை அறிமுகப்படுத்தி, அது இப்போது நடைமுறையில் இருக்கிறது. இதற்குச் சட்ட அங்கீகாரம் கொடுக்கின்ற வகையில், தமிழ் கட்டாயத் தகுதித் தேர்வு போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்கின்ற எல்லோரும் எதிர்கொள்ளவேண்டும் என்று உரிய சட்டத்திருத்தமும், சட்டமன்றத்தில் நாங்கள் கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறோம்.

தமிழ்நாட்டு அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்ற பொதுத்துறை நிறுவனங்கள், கழகங்கள் மற்றும் வாரியங்கள் போன்றவற்றில் இருக்கின்ற காலிப் பணியிடங்கள் தேர்வாணையத்தின் வாயிலாக நிரப்பப் புதிய சட்டத்தை இயற்றி, அதன் அடிப்படையில், இப்போது தேர்வாகியிருக்கின்ற உங்களுக்கும் இன்று உரிய பணி ஆணை வழங்க இருக்கின்றேன்.

தமிழ்நாட்டில் இருக்கின்ற பல்வேறு ஒன்றிய அரசுத் துறைகளான இரயில்வே - அஞ்சல் துறை - வங்கிகள் – ஆகியவற்றில் இருக்கக்கூடிய காலிப் பணியிடங்களில் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசிடம் தொடர்ந்து நாம் வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். இது தொடர்பாக மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு 12.10.2021 அன்று கடிதமும் எழுதியிருக்கிறேன்.

அது மட்டுமில்லாமல், ஒன்றிய அரசுப் பணிகளுக்கான தேர்வுகள் தமிழ் மொழியிலும் நடத்தவேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறேன். 26.12.2022 அன்று இதை மீண்டும் வலியுறுத்தி இருக்கிறேன். என்னுடைய இந்தக் கோரிக்கையை ஏற்று, ஸ்டாஃப் செலக்க்ஷன் கமிஷன் வாயிலாக, பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு தரத்தில், பன்முகப் பணியாளர் (மல்ட்டி- டாஸ்கிங்- ஸ்டாப்ஸ்) பதவிக்காக நடத்தப்படுகின்ற தேர்வைத் தமிழ் மொழியிலும் எழுதலாம் என்று ஒன்றிய அரசு நடைமுறைப்படுத்தி இருக்கிறது. இதைத் தமிழ்நாட்டு இளைஞர்களுக்காகக் கழக அரசு பெற்றுத் தந்திருக்கக்கூடிய ஒரு வெற்றியாகவே நான் கருதுகிறேன்.

என்னோட கனவுத் திட்டமான "நான் முதல்வன் திட்டம்" பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும். கடந்த ஆண்டு மட்டும் 13 இலட்சம் இளைஞர்களுக்கு இந்தப் பயிற்சித் தரப்பட்டுள்ளது.

இது நிர்ணயித்த இலக்கான பத்து இலட்சத்தைத் தாண்டிப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்!

தனியார் நிறுவனங்களில் பல ஆயிரம் ரூபாய் செலவு செய்து பெற வேண்டிய பயிற்சியை நம்முடைய இளைஞர்களுக்கு இலவசமாக இப்போது வழங்கிக் கொண்டு வருகிறோம்.

ஒன்றிய அரசால் நடத்தப்படுகின்ற போட்டித் தேர்வுகளிலும், நம்முடைய மாணவர்கள் அதிகமாகத் தேர்வாகவேண்டும் என்று S.S.C, R.R.B, வங்கிப் பணி போன்றவற்றிற்காக 5,000 பேருக்கு ஒருங்கிணைந்த பயிற்சி வகுப்புகளை நான் முதல்வன் திட்டத்தில் நாம் நடத்திக் கொண்டு வருகிறோம்.

07.03.2023 அன்று இது துவக்கி வைக்கப்பட்டது. இதில் பயிற்சி பெற்ற 90 நபர்கள், ஒருங்கிணைந்த வங்கிப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட முதனிலைத் தேர்வில் தேர்வாகியிருக்கிறார்கள். மண்டல – ஊரக வங்கிகளில் எழுத்தர் பணிக்கான முதனிலைத்தேர்வில்40பேர்தேர்வாகியிருக்கிறார்கள்.

குடிமைப் பணித் தேர்வில், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் தேர்ச்சி பெறவேண்டும் என்று முதனிலைத் தேர்வில் தேர்ச்சிப் பெற்ற 1,000 பேருக்கு மாதந்தோறும் ரூ.7,500 ஊக்கத்தொகையும், பயிற்சியும் வழங்குகின்ற புதிய திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

வருகின்ற அக்டோபர் மாதத்திலிருந்து இது தொடங்கப்படும். இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி, மாநில அரசுப் பணிகள் போலவே, ஒன்றிய அரசுப் பணிகளிலும் நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்கள் அதிகளவில் தேர்வாக வேண்டும்.

நம்முடைய அரசு அமைந்த கடந்த இரண்டாண்டுக் காலத்தில் 12 ஆயிரத்து 576 பேருக்கு அரசுப் பணி வழங்கப்பட்டிருக்கிறது. தற்போது 10 ஆயிரத்து 205 நபர்களுக்கு அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளது. இது மட்டுமில்லாமல், நடப்பாண்டில் மேலும் 17 ஆயிரம் பேருக்குப் பல்வேறு அரசுப் பணிகள் வழங்கப்பட இருக்கின்றன.

அடுத்த இரண்டு ஆண்டுகளில், பல்வேறு அரசுப் பணிகளுக்குச் சுமார் 50 ஆயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் நான் இங்கே அறிவிக்க விரும்புகிறேன்.

உங்களைப் போன்ற இளைஞர்களுக்கும், இளம்பெண்களுக்கும் அரசு வேலைவாய்ப்புக் கிடைக்கப் பெறுவது என்பது அந்தக் குடும்பங்களில் பெருமகிழ்ச்சியை ஏற்படுத்தித் தருவதோடு அரசு நிர்வாகத்தில் ஒரு புதிய வேகத்தையும், உற்சாகத்தையும் இது நிச்சயமாக அளிக்கும்.

அரசின் திட்டங்கள் பாரபட்சமில்லாமல் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சென்றடைய வேண்டும். நம்முடைய அரசின் கொள்கையை அரசின் அங்கமாக இருக்கின்ற நீங்கள் எல்லோரும் மனதில் வைத்துச் செயலாற்ற வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு சமூகநீதி காக்கும், மக்கள் நலன் பேணக்கூடிய அரசாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு அரசனிடம் முறை வேண்டும் போதெல்லாம், எளிமையாகக் காட்சி தந்து தீர்ப்பைப் பெற்றால், விரும்பும்போது மழையைப் பெற்றது போல மக்கள் மகிழ்வார்கள் என்று புறநானூறு சொல்கிறது.

அதைப்போல மக்கள் உங்களிடம் கோரிக்கையுடன் வரும்போதெல்லாம் என்னுடைய இன்னொரு முகமாக, என்னுடைய பிரதிநிதியாக, இந்த அரசாங்கத்தின் அலுவலராக இருக்கின்ற நீங்கள், மக்களை எளிமையாக அணுகி, அவர்கள் குறைகளையும், பிரச்சினைகளையும் தீர்த்து வைத்து, அரசின் திட்டங்களையும், கொள்கைகளையும் அவர்களிடம் சேர்த்து பயனடையச் செய்யவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள், அதைத்தான் நீங்கள் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஏதோ ஒரு ஊரில், ஏதோ ஒரு ஏழையின் கண்ணீரை உங்கள் கரங்கள் துடைத்தால் அதனால் அடைகின்ற பெருமை என்பதும் என்னைத்தான் சேரும். அதே நேரம், யாரோ ஒருவர் உதாசீனப்படுத்தினால் அதனால் வருகின்ற வசவும் – திட்டும் கூட என்னைத்தான் வந்து சேரும். எனவே, எனக்கு நல்ல பெயராக இருந்தாலும் – கெட்டப் பெயராக இருந்தாலும் உங்கள் செயல்பாட்டைப் பொறுத்துத்தான் அது அமையும்.

உங்களில் யாரும் பொது ஒழுங்கிற்கு மாறாக, பண்பாட்டிற்கு மாறாக நடந்து கொள்ள மாட்டீர்கள் என்று நான் முழுவதுமாக நம்புகிறேன். நீங்களும் நடுத்தர - ஏழை, எளிய – விளிம்பு நிலைக் குடும்பத்திலிருந்து வந்தவர்கள்தான். யாரால் ஆளாக்கப்பட்டு இந்தப் பணியை நீங்கள் அடைந்திருக்கிறீர்களோ அந்த மக்களுக்கு நீங்கள் உண்மையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குரூப்-4 என்பது உங்கள் முதல் படிதான். இதற்கு அடுத்து மேல் நிலையில் உள்ள தேர்வுகளையும் எழுதி உயர்பொறுப்புகளுக்கு வாருங்கள்.

உங்களால் முடியும்! உங்களால் மட்டுமே முடியும்! உங்களால் முடியாதது வேறு யாராலும் முடியாது என்று இந்த மாநிலத்தின் முதலமைச்சராக மட்டுமில்லை, உங்களுடைய தந்தை நிலையில் இருந்தும் என்னுடைய வாழ்த்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நிறைவாக, பணியாணை பெற்றிருக்கும் உங்களுக்கும், இந்த நிகழ்ச்சியின் மூலமாக அனைத்து மாண்புமிகு அமைச்சர்கள், அரசு உயர் அதிகாரிகள் முதல் கடைநிலை அலுவலர்கள் வரை உள்ள அனைவருக்கும் நான் ஒரு வேண்டுகோள் வைக்க விரும்புறேன்.

உங்களிடம் கோரிக்கை மனுவுடன் வருகிறவர்களிடம் முதலில் உட்கார வைத்து பேசுங்கள். அவர்களுடைய பிரச்சினையை, கோரிக்கையைக் காது கொடுத்துக் கேளுங்கள். அதுவே, வந்தவர்களுக்கு ஒரு பெரிய நம்பிக்கையைத் தரும்; மன நிறைவைத் தரும்! உட்கார வைத்துப் பேசுறதுதான், சக மனிதருடைய சுயமரியாதை என்று நினைத்து அதற்கு மதிப்புக் கொடுங்கள். அதனால், என்னுடைய இந்தக் கோரிக்கையை எல்லாரும் கடைப்பிடிப்பீர்கள் என்று நம்புகிறேன். அப்படிக் கேட்டால், அவர்களுடைய பாதி பிரச்சினை தீர்ந்து போய்விடும், பாதியளவுக்கு நிம்மதியை அடைந்துவிடுவார்கள்.

"இது உங்கள் அரசு தான்" என்பதை உங்களைச் சந்திக்க வருகிறவர்களிடம் உணர்த்திக் கொண்டே இருக்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!!

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் நலிவுற்ற நிலையில் வாழும் 1,000 மூத்த கலைஞர்களுக்கு மாத நிதியுதவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார்- 29.09.2023



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 29.09.2023 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் வறிய நிலையில் உள்ள 10 கலைமாமணி விருதாளர்களுக்குப் பொற்கிழியாக தலா 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கிடும் அடையாளமாக 6 கலைமாமணி விருதாளர்களுக்குப் பொற்கிழிக்கான காசோலைகளையும், 500 கிராமியக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள், ஆடை, அணிகலன்கள் வாங்கிட தலா 10 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 5 கிராமியக் கலைஞர்களுக்கு நிதியுதவிக்கான காசோலைகளையும், நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ்த் தெரிவு செய்யப்பட்ட 1,000 கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.3,000 நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 4 கலைஞர்களுக்கு நிதியுதவிக்கான ஆணைகளையும் வழங்கினார்.

தமிழ்நாடு அரசால் 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் என்ற அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது. இச்சங்கமானது, இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்ற

முத்தமிழுக்கும் பெருமை சேர்க்கும் விதத்தில், 1973ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

கலை பண்பாட்டுத் துறையின் ஓர் அங்கமாகத் திகழும், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் நிதியுதவியின் மூலம் தொன்மையான கலைகளை வளர்த்தல், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவித்தல், அழிந்து வரும் கலைவடிவங்களை ஆவணமாக்குதல், நாடகம், நாட்டிய நாடகங்களுக்குப் புத்துயிர் அளித்தல், தமிழகப் பராம்பரிய கிராமியக் கலைகளை வெளி மாநிலங்களிலும், உலகளவிலும் எடுத்துச் செல்லுதல், தமிழ்க் கலைகளின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்பு அளிக்கும் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல், நலிந்த நிலையிலுள்ள கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

வறிய நிலையில் உள்ள 10 கலைமாமணி விருதாளர்களுக்கு ரூ.1 இலட்சம் பொற்கிழி வழங்குதல்

2021-2022ஆம் ஆண்டிற்கான சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மானியக் கோரிக்கையில், கலைமாமணி விருது பெற்றவர்களில், வயோதிக நிலையில், பொருளாதாரத்தில் நலிந்து, இன்னலில் வாழ்கின்ற கலைஞர்கள் பயன்பெறும் வகையில் ஆண்டுதோறும் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் வாயிலாகத் தற்போது வழங்கப்படும் பொற்கிழித் தொகை ரூ.50,000லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தி 10 கலைஞர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதன்படி வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, 2022-2023ஆம் ஆண்டிற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட வறிய நிலையில் உள்ள 10 கலைமாமணி விருதாளர்களான திரு. கே. கல்யாணசுந்தரம், திரு. ச. சமுத்திரம், திருமதி என். பார்வதி உதயம், திரு. கே. குமரவேல், திரு. பா. முத்து சந்திரன், திருமதி கோ. முத்துலட்சுமி, திரு. பி.ஆர்.துரை, திரு. ரா. கல்யாணசுந்தரம், திரு. எம்.எஸ். முகமது மஸ்தான், திருமதி டி.என். வரலட்சுமி ஆகியோருக்கு பொற்கிழித் தொகையாக தலா 1 இலட்சம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 6 கலைமாமணி விருதாளர்களுக்கு பொற்கிழிக்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற 500 கலைஞர்களுக்கு இசைக் கருவிகள், ஆடை, அணிகலன்கள் வாங்கிட நிதியுதவி வழங்குதல்

தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற கலைஞர்கள் பயன்பெறும் வகையில், நபர் ஒருவருக்கு ரூ.10,000 மதிப்பீட்டில், இசைக்கருவிகள், ஆடை ஆபரணங்கள் வாங்க 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் மூலம் நிதியுதவி வழங்கப்படும் என்று 2021-2022ஆம் ஆண்டிற்கான சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, 2022-2023ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற 500 கிராமியக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள் மற்றும் ஆடை, அணிகலன்கள் வாங்கிட தலா ரூ.10 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.50 இலட்சம் நிதியுதவியாக வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அவர்கள் 5 கிராமியக் கலைஞர்களுக்கு நிதியுதவிக்கான காசோலைகளை வழங்கினார்.

நலிந்த நிலையில் வாழும் 1,000 மூத்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.3,000 நிதியுதவி வழங்குதல்

நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்கும் திட்டத்தினைத் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் செயல்படுத்தி வருகிறது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 15,063 கலைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக, 2020-2021 மற்றும் 2021-2022ஆம் ஆண்டுகளுக்கான தெரிவு செய்யப்பட்ட 1,000 நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்கு 01.04.2023 முதல் மாதந்தோறும் ரூ.3,000 வீதம் நிதயுதவி வழங்கிடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அவர்கள் 4 நலிவுற்ற மூத்த கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவிக்கான காசோலைகளை வழங்கினார்.

நவம்பர் 8 : தமிழறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் பிறந்த நாள்

“தமிழ் உரைநடையின் வளர்ப்புத் தந்தை”

மேலை நாட்டிலிருந்து வந்த ஒருவர், தம் தாய்மொழிக்கு முதலிடம் தராமல், தமிழ் மொழிக்கு முதலிடம் தந்து போற்றியதோடு நில்லாமல், தமிழிலும் பல நூல்கள் இயற்றி அருந்தொண்டாற்றியுள்ளார் என்றால் அவர்தம் பண்பினையும் சிறப்பினையும் என்னேன்றியம்புவது? துறவியாகவே வந்து, துறவியாகவே மறைந்த வீரமாமுனிவர் ஆன்றவிந்தடங்கிய சான்றோர்க்கெல்லாம் சான்றோராய் விளங்கினார்.

தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் பண்பே பெரும் பண்பாம்; அப்பண்பு வீரமாமுனிவரிடம் சிறந்து காணப்பட்டது.

புறப்பகையை அடக்குவோரைக் காட்டினும் அகப்பகையை அடக்குவோரே வீரரெனப் போற்றத்தக்கவர். இவ்வியல்பு கொண்டு பார்க்கும்பொழுது வீரமாமுனிவர் தமக்கென வாழாத பிறக்குரியாளராகவும், அகப்பகை அடக்கிய ஆன்றோராகவும் விளங்கினார் என்பதில் ஐயமில்லை.

தமிழ்நாட்டிற்கு வந்த புதிதில், முனிவர் தமது பெயரின் மொழிபெயர்ப்பாகத் தைரியநாதசாமி என்று தாமே பெயர் சூட்டிக் கொண்டார். ஆனால், மற்றைய பெயர்களும் பட்டங்களும் அயலவரால் அவருக்கு அன்புடன் வழங்கப்பெற்றன. தேம்பாவணி என்னும் தீந் தமிழ்க் காப்பியத்தின் சுவையறிந்து பாராட்டிய தமிழ்ச் சங்கப் புலவர்கள், அவரை வீரமாமுனிவர் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர். சந்தா சாகிபு இசுமதி சந்நியாசி என்றழைத்துப் பெருமை கொண்டனர். எப்பட்டம் கிடைத்தாலும் தந்தை என்ற பட்டம் கிடைத்தல் அரிது. தமிழ் மக்கள் தம்மொழிக்கு முனிவர் செய்த தொண்டின் சிறப்பைப் பாராட்டி அவரை அன்புடன் தமிழ் உரை நடையின் வளர்ப்புத் தந்தை என்றும், அகராதியின் தந்தை என்றும் அழைத்துப் பெருமை செய்தனர். கல்லூரிகளில் படித்துப் பெறும் பட்டங்களிலும் மக்களால் அன்புடன் அளிக்கப்படும் பட்டங்களே அவர் தம் சிறப்பை உணர்த்துவன என்பதிலும் அப்பட்டங்களே என்றும் நிலைத்து நிற்பன என்பதிலும் ஐயமுண்டோ?

நன்றி: புலவர் **ஆ. மாரிமுத்து** எழுதிய வீரமாமுனிவர் எனும் நூலிலிருந்து........

படமும் / செய்தியும்

இராமசாமி படையாட்சியார் அவர்களின் 106ஆவது பிறந்த நாள்

இராமசாமி படையாட்சியார் அவர்களின் 106ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, 16.09.2023 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை, கிண்டி ஹால்டா சந்திப்பு அருகில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ.எம்.வி. பிரபாகரராஜா, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் திரு. பொன். குமார், துணை மேயர் திரு. மு.மகேஷ் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தெரிந்துகொள்வோம்

இயற்கை இடர்பாடுகளால் ஏற்பட்ட மகசூல் இழப்புக்கு ரூ.560 கோடி இழப்பீட்டுத் தொகை

- இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பயிர் இழப்பிலிருந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க, பயிர் காப்பீட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2022-2023ஆம் ஆண்டில் இத்திட்டம் 37 மாவட்டங்கள் அடங்கிய 14 தொகுப்புகளில் இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம், இப்கோ-டோக்கியோ, பஜாஜ் அலையன்ஸ், எச்.டி.எப்.சி எர்கோ மற்றும் ரிலையன்ஸ் பொது காப்பீட்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டது.

- இத்திட்டத்தின்கீழ் சம்பா நெற்பயிரில், 11.20 இலட்சம் விவசாயிகளால் 24.45 இலட்சம் ஏக்கர் பரப்பளவு காப்பீடு செய்யப்பட்டது. மொத்த காப்பீட்டுக் கட்டணத்தில் தமிழ்நாடு அரசின் காப்பீட்டுக் கட்டண மானியமாக ரூ.1,375 கோடியும், ஒன்றிய அரசின் காப்பீட்டுக் கட்டண மானியமாக ரூ.824 கோடியும், விவசாயிகளின் பங்குத் தொகையாக ரூ.120 கோடியும் ஆக மொத்தம் ரூ.2,319 கோடி காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

- 2022-2023ஆம் ஆண்டு சம்பாப் பருவ நெல் சாகுபடியில் 46 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி அடையப்பட்ட போதிலும், வடகிழக்குப் பருவமழை குறைவாகப் பெய்த காரணத்தால் இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, தென்காசி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் ஏற்பட்ட மிதமான வறட்சியால் 3,52,797 ஏக்கர் பரப்பளவில் 33 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட வேளாண் பயிர்களுக்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.181.40 கோடி தொகையைத் தமிழ்நாடு அரசு 1,87,275 விவசாயிகளுக்கு 04.09.2023 அன்று வழங்கியுள்ளது.

- இதனைத் தொடர்ந்து, தற்பொழுது பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், அறிவிக்கை செய்யப்பட்ட மாவட்டங்களில், வறட்சி, வெள்ளம், புயல், பருவம் தவறிய மழை போன்ற பல்வேறு இயற்கை இடர்பாடுகளால் சுமார் ஏழு இலட்சம் ஏக்கர் பரப்பளவில் ஏற்பட்ட மகசூல் இழப்பிற்கு, திட்ட விதிமுறைகளின்படி பாதிப்படைந்த பகுதிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக மொத்தம் ரூ.560 கோடி சுமார் 6 இலட்சம் தகுதி வாய்ந்த விவசாயிகளின் வங்கிக்கணக்குகளில் வரவு வைக்கப்பட உள்ளது.

கட்டுரை

முதுமொழியும் பொருண்மொழியும்

தி.பரமேசுவரி

பாண்டியன் நெடுஞ்செழியன் முதிரா வயதில் அரியணை ஏறுகின்றான். அவன் இளையவன், ஆற்றல் அற்றவன் என்றெண்ணி, பிற தமிழ் அரசர்கள் எழுவர் அவன் மீது படையெடுத்து வருகின்றனர். தமிழரே தமிழரோடு போரிட்டதாக, இப்போரைப் பற்றி வருந்தி, "தமிழ்தலை மயங்கிய தலையாலங்கானத்து" என்று கூறுகின்றார் குடபுலவியனார்.

சோழன் கிள்ளிவளவன், சேரன் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேள், பொருநன் ஆகிய ஐந்து வேளிர் என ஏழு மன்னர்கள் சேர்ந்து தலையாலங்கானம் என்னுமிடத்தில் பாண்டியனோடு பொருதனர். தற்போது இவ்வூர் தலையாலங்காடு என்று வழங்கப்படுகிறது. தற்காலத்தில் உள்ள திருவாரூர் மாவட்டத்தில் குடவாசல் வட்டத்தில் சிமிழி என்னும் ஊராட்சியில் இக்கிராமம் உள்ளது.

அப்போரில் தான் வெல்லாவிட்டால் மாங்குடி மருதனார் தலைவராக உள்ள இப்புலவர் கூட்டம் என்னைப் பாடாது ஒழியட்டுமென வஞ்சினம் சொல்லிப் போர் மேற்சென்றான் பாண்டியன்.

தன்னை எதிர்த்துப் போரிட்ட அனைவரையும் அப்போர்க்களத்தில் இளையவன் வென்றான் என்பது வரலாறு. தலையாலங்கானத்துப் போரைப் புலவர் பலர் பாடியுள்ளனர். அக்காலத்தின் சிறந்த புலவர்களான நக்கீரர் நெடுநல்வாடையும் மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சியையும் இப்பாண்டியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடியுள்ளனர்.

நெடுஞ்செழியனின் இளமைப் பருவத்தில் தோன்றிய அப்போரெழுச்சி, வெறியாக மாறித் தொடர்ந்து அவன் போரில் ஈடுபடுகின்றான். மிழலை நாட்டு எவ்வி, முத்தூறு வேளிர், தென்பரதவர் எனும் நெய்தல் மன்னர்கள், மழவர் ஆகியோரை ஓடஓட விரட்டினான். நெடுஞ்செழியனின் தோள் தினவு தீரவில்லை. புதிய புதிய நாடுகளைப் பிடிக்க வேண்டும் என்னும் தணியாத ஆவலுடன் சாலியூர், ஆய் குலத்தவரின் கீழிருந்த குற்றாலம், நெல்லின் ஊர்ப்பகுதி, முதுமலைப் பகுதி, முதுவெள்ளிலை எனும் நகரம் ஆகியவற்றைக் கைப்பற்றினான். இவனைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் சின்னமனூர், வேள்விக்குடி ஆகிய இடங்களில் கிடைத்த செப்பேடுகளில் உள்ளன.

புலவர்கள் அவனுடைய போராசை என்று தணியுமென்று ஏங்கினர். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் உயிர்க்கு உறுதி தரும் பொருள்கள். போர் செய்வதால் பொருளும் புகழும் கிடைக்கும். ஓர் அரசன் பொருளை மட்டும் ஈட்டினால் போதுமா? பாண்டியன் தன் இன்ப வாழ்வைக்கூடத் தக்கபடி நுகராது, போர்போர் என ஆர்ப்பரிப்பது அவனுக்கோ நாட்டுக்கோ நன்றன்று; இதனையே நக்கீரர் நெடுநல்வாடையால் புலப்படுத்த முயன்றார். மாங்குடி மருதனார் போரைக் கடந்த வாழ்வு குறித்து மதுரைக்காஞ்சியில் அறிவுறுத்தினார்.

அடுத்த போருக்கு ஆயத்தம் செய்வதிலும் படைகளுக்குரிய வசதிகளைச் செய்வதிலும் மனம் செலுத்திய மன்னன், தன் குடிமக்கள் எவ்வாறு வாழ்கிறார்களென்று சிந்திக்கவில்லை. பாண்டிய நாட்டின் பல இடங்களிலும் முன்னோரால் உருவாக்கப்பட்டிருந்த குளங்களும் ஏரிகளுமே நாட்டின் வளமைக்குக் காரணம். அவற்றை அவ்வப்போது கண்காணித்துச் செப்பம் செய்ய வேண்டும். அரசன் அதன்மீது கவனம் செலுத்தாமையால் குளங்கள் மேடிட்டுப் போயின; ஏரிகள் கரையுடைந்து நின்றன. பல இடங்களில் மழை பெய்தாலும், அவற்றைத் தேக்குவதற்குரிய புதிய

குளங்களோ ஏரிகளோ உருவாக்கப்படவில்லை. எனவே, நாட்டின் செல்வ வளத்திற்குக் குறைவில்லை எனினும் போதிய அளவு வேளாண்மை பெருகவில்லை.

குடிமக்கள் அமைச்சரிடம் முறையிட்டனர்; அமைச்சர்களோ அரசனை அணுக அஞ்சினர். இதுவே தக்க தருணமென்று எண்ணினார் நல்லிசைப் புலவர் குடபுலவியனார். இவர், குடபுலத்தைச் சேர்ந்தவர்; இவரின் இரு பாடல்கள் மட்டுமே நமக்கு இன்று கிடைத்துள்ளன. இரண்டு பாடல்களும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. இரண்டுமே பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றியவை என்பது குறிப்பிடத்தக்கது.

அரசவை கூடியது; அரசரோடு அமைச்சர்களும் அவை மூத்தோரும் புலவர்களும் குடிமக்கள் சிலரும் அவையில் இருந்தனர். குடபுலவியனார், "அரசர் திருச்செவி அறியச் சில செய்திகள் கூற எண்ணம்" என்றார். புன்னகை பூத்த முகத்துடன், சொல்லுங்கள் என்றான் பாண்டியன். "செழியனே, நீ நீடூழி வாழ்க! அகழியும் மதிலும் உடைய இப்பழையூரைப்போல் யாரே பெற்றிருக்க முடியும்? அப்பெருமை பாண்டிய அரசர்க்கே உரியது. ஆனால் இப்பெருமை நிலைக்க வேண்டுமெனில் சில கடமைகளைத் தவறாது செய்ய வேண்டும்" என்றார். "அவற்றைச் சொல்லுங்கள், ஏது பிழை செய்தேன் யான்? அறியேன். அறிவுறுத்துக புலவரே" என்றான் மன்னன். புலவர் பாடினார் ஒரு பாட்டு.

"மன்னா! மேலுலகில் நீ மறுமை இன்பத்தைப் பெற விரும்பினாலும் இவ்வுலகில் பகைவர் அனைவரையும் ஒடுக்கித் தான் ஒருவனே பேரரசனாகப் புகழ் பெற விரும்பினாலும் அதற்குச் செய்ய வேண்டியதைச் சொல்கிறேன் கேள்! இம்மானுட வாழ்வு நீரின்றி அமையாது. அதில் உணவு கொடுத்தவர்களே உயிர் கொடுத்தவர்கள். இவ்வுடல் உணவினால் ஆனது. உணவென்பதோ நிலத்தொடு நீர். நிலத்திலிருந்து கிடைக்கும் உணவும் நீருமே இன்றியமையாதது. யாரொருவர் நிலத்தையும் நீரையும் சேர்த்துப் பாதுகாக்கிறார்களோ, அவரே இவ்வுலகின் உடலையும் உயிரையும் ஒன்றாய் இணைத்தவர் ஆகிறார். எனவே, போரில் பெருவிருப்பமுள்ள செழிய! நீர்நிலைகளையெல்லாம் கரையெடுத்து, ஆழப்படுத்தி, நீரைத் தேக்கி வைப்பாயாக. அதுவே உன் புகழைக் காலங்கடந்து நிலைக்கச் செய்யும்" என்றார்.

சில பாடல்கள் எல்லாக் காலத்துக்கும் பொருந்தக் கூடியவை; காலங்கடந்து நிற்பவை. இப்பாடல் அப்படிப்பட்டது. இன்றும் நாம் நீர் மேலாண்மை குறித்துப் பேசி வருகிறோம். இக்கருத்தை, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே புலவர் ஒருவர் அரசனுக்கு வலியுறுத்தியிருக்கிறார் என்பது மனங்கொளத்தக்க செய்தி. இந்த இடத்தில் கல்லணை கட்டிய கரிகாலனையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

'நீரின்றி அமையாது உலகு' என்றே மொழிந்தார் வள்ளுவர் பெருமானும். 'மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று உரைக்கிறது மணிமேகலை. எத்தனை போர்க்களங்களில் வென்றாலும் மக்களுக்கான நன்மை குறித்து நீண்ட கால நோக்கத்துடன் சிந்தித்த அரசர்களே, வரலாற்றில் வாழ்கிறார்கள். இன்றும் வரலாறு, அப்படிப்பட்ட தலைவர்களையே தன்னுள் பொதித்துப் பாதுகாக்கிறது. பாண்டியன் நெடுஞ்செழியனுக்குக் குடபுலவியனார் கூறிய அறிவுரைப் பாடல் இதோ..

"முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்துபட்ட வியல் ஞாலம்
தாளின் தந்து , தம் புகழ் நிறீஇ
ஒரு தாம் ஆகிய உரவோர் உம்பல்!
ஒன்று பத்து அடுக்கிய கோடி கடை இரீஇய
பெருமைத்தாக, நின் ஆயுள்தானே!
நீர்த் தாழ்ந்த குறுங் காஞ்சிப்
பூக் கதூம் இன வாளை,
நுண் ஆரல், பரு வரால்,
குரூஉக் கெடிற்ற , குண்டு அகழி;
வான் உட்கும் வடி நீள் மதில்;
மல்லல் மூதூர் வய வேந்தே !
செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்,
ஞாலம் காவலர் தோள் வலி முருக்கி,
ஒரு நீ ஆகல் வேண்டினும், சிறந்த
நல் இசை நிறுத்தல் வேண்டினும் , மற்று அதன்
தகுதி கேள் , இனி , மிகுதியாள !
நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே;
வித்தி வான் நோக்கும் புன் புலம் கண் அகன்
வைப்பிற்று ஆயினும் , நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே ; அதனால்
அடு போர்ச் செழிய ! இகழாது வல்லே
நிலன் நெளி மருங்கில் நீர் நிலை பெருகத்
தட்டோர் அம்ம , இவன் தட்டோரே ;
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே" (புறம் – 18)

இப்பாடல் முதுமொழிக்காஞ்சித் துறை: பொருண்மொழிக்காஞ்சித் துறை என்பதும் பாடம். அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று உறுதிப் பொருள்களைப் பற்றிக் கூறுவது முதுமொழிக்காஞ்சி. உயிர்க்கு நலம் செய்யும் உறுதிப் பொருள்களை எடுத்துக் கூறுதல் பொருண்மொழிக்காஞ்சி.

சங்கப் புலவரின் சொல்திறத்தால், அறிவுடைய பாண்டியன், தன் கடமை உணர்ந்தான். புலவரின் சொல் வெல்லும் சொல்லாயிற்று. குடபுலவியனாரின் பாடல் காலத்தை விஞ்சி, இப்போதும் நீர் மேலாண்மையை நமக்கு நினைவூட்டுவதுடன், உணவின் முதன்மையையும் உணர்த்தி நிற்கிறது.

நன்றி: இலக்கிய மலர் 2023 என்ற நூலிலிருந்து....

படமும்/செய்தியும்

தமிழ் மொழியினைச் சிறப்பாக உச்சரிக்கும் செய்தியாளர்களுக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புத் துவக்கம்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், காட்சி ஊடகங்களில் பணிபுரியும் செய்தி வாசிப்பாளர்கள், நேர்காணல் செய்பவர்கள் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் ஆகியோர் தமிழ் மொழியினைச் சிறப்பாக உச்சரிக்கும் வகையில் சிறப்புப் பயிற்சி வகுப்பை, சென்னை, கலைவாணர் அரங்கில், 10.10.2023 அன்று, குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்துச் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் மரு. இரா.செல்வராஜ், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. த.மோகன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

"கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்" உழைக்கும் மகளிருக்கான அங்கீகாரம்

"மங்கையராய்ப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா"

என்றார் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்கள். அவர் இன்று இருந்திருந்தால் "மங்கையராய்த் தமிழ்நாட்டில் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" என்றே சொல்லியிருப்பார். அந்த அளவிற்குப் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு எண்ணிலடங்காத் திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகின்றது.

இந்த உலகில் தாய், மனைவி, சகோதரி, தோழி, மகள் என்று நம் உறவின் அனைத்துப் பகுதியிலும் நீக்கமற நிறைந்திருப்பவர்கள் பெண்கள். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள் என்று கூறப்படுவது இதனால்தான். ஒருவரின் சொந்த நாடு கூட, தாய் நாடு என்றுதான் அழைக்கப்படுகிறது. இதேபோல் நதிகள், மலைகள் என்று முக்கியமானவை அனைத்துக்கும் பெண்கள் பெயர்கள்தான் வைக்கப்படுகிறது. அந்த அளவுக்குப் பெண்மைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

பெண்களும் இந்தச் சமுதாயத்தில் உரிமைகள் பெற வேண்டும் என்றும், அவர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்க வேண்டும் எனவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பெண்களுக்கெனப் பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து அறிவித்து செயல்படுத்தியும் வருகிறார்.

சமுதாய மறுமலர்ச்சி ஏற்பட, குடும்பத்தை சரியான முறையில் நிருவாகம் செய்ய, சமுதாயத்தில் தலைநிமிர்ந்து வாழப் பெண் கல்வி அவசியமான ஒன்றாகும். ஒரு பெண் கல்வி கற்றவராக இருந்தால்தான் பிரச்சினைகளை அறிதல், ஆராய்தல், தீர்வு காணல், மாற்று வழிகளைக் கண்டறிதல், நேரத்திட்டமிடுதல் போன்ற பல நன்மைகளைப் பெற முடிகிறது. ஒரு பெண் கல்வி கற்றவராக இருந்தால் அந்தக் குடும்பமே கல்வி கற்றது போல் ஆகும்.

அதனடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பெண்கள் கல்வி கற்பதிலிருந்தே அவர்கள் வேலைக்குச் செல்லும் வரை என்னென்ன தேவை, அவர்கள் எந்த மாதிரியான பிரச்சினைகளை மேற்கொள்கிறார்கள் என்பதை உணர்ந்து பல்வேறு திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தியும் வருகிறார்கள்.

மகளிர் சுயஉதவிக்குழுவினருக்குச் சுயதொழில் தொடங்க சுழல்நிதி, 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் பயின்ற மாணவிகள் உயர்கல்வி பயிலும்போது அவர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம், மகளிர் வாழ்வில் விடியலை ஏற்படுத்தும் இலவச பேருந்து வசதித் திட்டம் எனப் பெண்களுக்காக செயல்படுத்தப்பட்ட அரசின் திட்டங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

இவை எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போல், குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 உரிமைத்தொகை வழங்கிடும் "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 15.09.2023 அன்று தொடங்கி வைத்துள்ளார். தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 6 இலட்சம் மகளிர் பயன்படக்கூடிய வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், பெரம்பலூர் மாவட்டத்தில், இத்திட்டத்திற்கென ஒவ்வொரு நியாயவிலை அங்காடியையும் ஒரு அலகாகக் கொண்டு மொத்தம் உள்ள 282 நியாயவிலை அங்காடிகளில் முதல், இரண்டாம் கட்டமாகச் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. மேலும், விடுபட்ட, குறித்த நாளில் முகாமிற்கு வர இயலாத பயனாளிகள் இத்திட்டத்தில் விண்ணப்பிப்பதற்காகச் சிறப்புக் கட்ட முகாம்கள் நடத்தப்பட்டுப் பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

முதற்கட்ட முகாமில் 77,861 விண்ணப்பங்களும், இரண்டாம் கட்ட முகாமில் 79,869 விண்ணப்பங்களும், என மொத்தம் 1,63,150 விண்ணப்பங்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டன. பயனாளிகளிடமிருந்து பெறப்பட்ட 1,63,150 விண்ணப்பங்களில் 62,476 விண்ணப்பங்கள் கள ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. வங்கிக் கணக்கு இல்லாத, வங்கிக் கணக்குச் செயலில் இல்லாத 2,715 பயனாளிகளுக்குச் சிறப்பு முகாம்கள் மூலம் புதியதாக வங்கிக் கணக்குத் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பெரம்பலூர் மாவட்டத்திற்கு முதற்கட்டமாக வங்கிகள் மூலம் 7,823 பணம் எடுக்கும் அட்டைகள் (ATM CARD) வரப்பெற்றுள்ளன.

இதில், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் 15.09.2023 அன்று 2,000 பயனாளிகளுக்குப் பணம் எடுக்கும் அட்டைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி க.கற்பகம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வழங்கினார்கள். இந்நிகழ்வில் பயனாளிகளின் வசதிக்காக வைக்கப்பட்டிருந்த நடமாடும் ஏ.டி.எம். வாகனம் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் வகையில் அமைந்திருந்தது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ்ப் பணம் எடுக்கும் அட்டைகள் பெறப்பட்ட பயனாளிகள் நடமாடும் ஏ.டி.எம். இயந்திரத்தின் வாயிலாகப் பணம் எடுத்து மகிழ்ச்சியோடு இல்லம் திரும்பினர்.

திருமதி மும்தாஜ் பேகம்

கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின்கீழ், ரூ.1,000 பெற்ற திருமதி மும்தாஜ் பேகம் நம்மிடம் தெரிவித்ததாவது:

எனது பெயர் மும்தாஜ் பேகம். நான் பெரம்பலூர் மாவட்டம் எளம்பலூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும் எனத் தேர்தல் வாக்குறுதியில் அறிவித்திருந்தார்கள். அதனை நிறைவேற்றியும் காட்டியுள்ளார். இது உழைக்கும் மகளிர்களுக்கான அங்கீகாரம்,

அவர்களுக்கான உதவித்தொகை அல்ல, இது உரிமைத்தொகை என அறிவித்துள்ளார்கள். இது எனக்கு மிகவும் சந்தோஷமாக உள்ளது.

இந்தத் தொகையானது எங்களது குடும்பத்தின் மளிகைப் பொருட்கள் வாங்குவதற்கு அல்லது குழந்தைகளின் மருத்துவச் செலவிற்கு என ஏதோ ஒரு செலவிற்குப் போதுமானதாகவும் மிகவும் பயனுள்ளதாகவும் உள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் உண்மையிலேயே எங்களைப் போன்ற பொருளாதார நிலையில் சிரமத்தில் உள்ள ஏழை, எளிய குடும்பத்தின் பெண்கள் மிகவும் பயனடைவார்கள்.

இந்தத் திட்டத்தை அறிவித்ததற்காக எங்களது குடும்பத்தின் சார்பாகவும் கிராமத்தின் சார்பாகவும், ஒட்டுமொத்த பெண் சமுதாயத்தின் சார்பாகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மிக மிக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரம்பலூர் மாவட்டம்.

தமிழரசு

Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற
"வள்ளலார் - 200" சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை 05.10.2023 அன்று திறந்து வைத்தார்.

Published by D.MOHAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : D.MOHAN, I.A.S.,